Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

டிச. 22-28, 2002

ரூபா 14/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 491

## சமஷ்டியைத் தேடி.....

## அதாவுல்லாஹ்வின் காத்திருப்பு!





வாசக நெஞ்சங்களுக்கு நத்தார் வாழ்த்துக்கள்

கமல் படத்தில் நடிக்க இலங்கைத் தமிழ் நடிகை தேவை!

# ஆன்மீகம்

## வாழ்க்கை என்பதைப் புரிந்துகொள்வோம்

ஒரு உயிர் பூமியிலே பிறந்த அந்த நொடியில் இருந்து அந்த உயிர் பூமியை பிரியும் வரையுமுள்ள கால எல்லை வாழ்க்கை என்பதாகும்.

பண்டையை இந்துக்கள் தம் பிள்ளைகளைத் தம் குடும்ப பந்தங்களிலிருந்து பிரித்து ஒரு குருவிடம் அனுப்பி வாழ்க்கைக்குத் தேவையான சகல கலைகளையும் கற்க வைக்கின்றனர். இதில் சிலர் முழுவதும் கற்றுத் தமது குடும்பத்தைச் சென்றடைகின்றனர். இன்னும் சிலர் இடைநடுவிலே கற்று சென்றடைகின்றனர். மற்றும் சிலர் கற்காமலே சென்றடைகின்றனர். எவ்வாறெனினும் ஒரு குடும்பத்தில் இருந்து உடல் மட்டுமாக வந்து போகும்போது உடலோடு அறிவையும் கொண்டு செல்கின்றான்.

அதேபோல்தான் நாமும் இறைவனால் வாழ்க்கைப் பாடத்தைக் கற்க அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறோம். வாழ்க்கையை முழுதும் கற்றும், இடைநடுவே கற்றும், கற்காமலும் மண்ணை விட்டுச் சென்றுவிடுகிறோம். எங்கிருந்து வந்தோமோ அங்கேயே உடல் மட்டுமாகச் செல்கிறோம். இதனை உணர்ந்து நாம் நல்லவைகளைக் கற்போம், நன்மைகளையே செய்வோம்.

தி. துரையன், கலஹா.



## ஒளியாய் இருந்து உன்னத நிலையை அடைய வைக்கும் புனிதர்....

இந்தப் பௌதீக உலகில் வாழ்வதற்குக் கல்வி முக்கியமானது. ஆனால் வாழ்க்கையில் வெற்றியடையவும், ஒவ்வொரு கணத்தையும் சந்தோசமாக அனுபவிக்கவும் நிலையான அமைதியைப் பெறவும் நாம் இறைவனிடம் அருளைப் பெற வேண்டும்.

புனிதர்கள் அனைவரிலும், இயேசுவைத் தனது கரங்களிலே ஏந்தும் பேறுபெற்றுக் கோடி புதுமைகளைச் செய்யும் அற்புதர் புனித அந்தோனியார். துன்பம், நோய், கவலை, தோல்வி, மன அழுத்தம் இவையால் துன்பப்படும் அனைவருக்கும் அந்தோனியார்..

"ஒன்பது செவ்வாய்க்கிழமை எனது சுரூபத்தைத் தரிசித்து நவநாள் வழிபாடு செய்பவர்கள் எனது மகிமையைக் காண்பார்கள்" என உறுதி அளித்துள்ளார்.

ஆகவே துன்பங்கள் நீங்கி இன்பமாக வாழ, தொடர்ச்சியாக ஒன்பது செவ்வாய்க்கிழமைகள் அந்தோனியாரைத் தரிசித்து வேண்டுதல் செய்வோம். நிச்சயம் எமது வேண்டுதல் நிறைவேறும். இறைவனின் தூதுவரான அந்தோனியாரின் ஆசீர்வாதத்தைப் பெற்று வாழ்க்கையில் பயனடைவோம்.

செல்வி யசோதா, யாழ்ப்பாணம்.

## அயலாரை அன்போடு அரவணைப்போம்

அயல் வீட்டாரின் மதிப்பும் மரியாதையும் மிகப் பெரிதென்றும், அவர்களுக்குரிய தொண்டு மிக அதிகமானதென்றும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. மற்றவர்களை விட அண்டை வீட்டாரே நமக்கு முதன்மையாக உதவ முன்வருவதனாலும், அபயக்குரலைக் கேட்டவுடன் ஓடி வருவதனாலும் அவர்களுடன் அன்பு, நேசம், நம்பிக்கையை வளர்த்து மிக ஆனந்தமாக ஆண்டாண்டு காலம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு அற்ப விசயங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளாமல் அளவுக்கதிகமாகப் பெரிதுபடுத்தி, சண்டைகளை உண்டு பண்ணி, பகைமையை வளர்த்துப் பண்பை இழக்கக் கூடாது. இதனையே அல்குர்ஆனும் அல்ஹதீஸும் பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

"விசுவாசிகளே! சொந்தக்காரரான அயல் வீட்டாரிடமும் சொந்தம் இல்லாத அயல் வீட்டாரிடமும் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்." *(அல்குர் ஆன் 4:36)*

"எவனுடைய தீங்கிலிருந்து அயல் வீட்டான் பாதுகாப்புப் பெற முடியவில்லையோ, அவன் சுவர்க்கம் நுழையமாட்டான்." *(அல்ஹதீஸ்)*

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.488


**இடம் உள்ள வரை இடம் பிடித் துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

பரிசுக்குரிய கவிதை

### போராட்டம்

இரவுகளுடன்...
போராடுகிறேன்...
தூங்கமுடியாமல்...!
வாலிபத்துடன் போராடுகின்றேன்...
வாழ வழி தெரியாமல்...!
மரணத்துடன் போராடுகின்றேன்...
அவளை மறக்க முடியாமல்...!!!

எஸ். தமிழாம்பிகை ஜெகன்,
நானாட்டான்.



### உறங்காதே

இப்பொழுது உறங்காதே
இது உன் சந்ததிக்குரிய காலம்
இழந்தது உன்னுடன்
போகட்டும் இனி எங்களை
வாழவை. உறங்காதே!

க. முருகானந்தன்-றெட்பானா,
விஸ்வமடு.

### தியாகியா? துரோகியா?

தலையிலே தீமூட்டி-தன்னையே
தியாகம் செய்யும் உன்னையே
தோழனாய் கொள்கிறாரே! நீ
தியாகியா... இல்லை துரோகியா...?
அறியா வயதினரும் அற்ப ஆசையால்
சொற்ப சுகம் தேடி-உன்னையே
சொகுசாய் பிடிப்பரே-உன்
பெயர்தான் 'சிகரெட்'டோ...?

பொத்துவில் ஏ.எல்.ஏ. முகம்மத்.

### பரிதாபம் அறிவீரோ!

இனியெதுவும் வேண்டாம்
இதுவே இன்பமென்று
தனித்து நீ இன்பித்து
பனியாய் உருகி-மறுநொடி
பாதாளம் விழப்போகும்
பரிதாபம் அறிவீரோ...!

நீநூநிலா, எப். மொகமட் பாயிஸ்.

### போர்ப் போதை...

வெண் சுருட்டு
எரிதணலில்
புதைத்த
எதைத்தேட...
இனியொரு போரையா?
போதையையா??

சுந்தா, திருகோணமலை.

### ப(பு)கை

பகையைப் போலவே,
புகையும்
உன் இதயத்தை
அழித்துவிடும்.
நண்பனே,
மறந்து விடு
அதனை.

பெ. சுப்ரமணியம், மஸ்கெலியா.

### இலவசம்

விசாக்கள் இன்றி
விரைவாக எமலோகம் செல்ல
இலவசமான ஓர் வழி!
சிகரட் எனும் சிகரத்தில்
சீக்கிரமாய் ஏறி விடு.

நா. நிரோஸ், அக்கரைப்பற்று-07.

## கவிதைப் போட்டி இல.491




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 28.12.2002

கவிதைப் போட்டி இல.491
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### துரோகம்

உயிரென்று உறவாடினான் உன்னைத்தினம்
உள்ளிருந்தே உயிர்குடித்து துரோகியின் மனம்
கனத்த இதயங்களின் கண்ணீர் ஆறாக
கனத்தையில் நீரானது உறவொன்று கனவோ!

சீனிராசா எடிசன், டாம் வீதி.

### வாழப்பார் மனிதா

விட்டில் பூச்சி
தானே விழுந்தழியும்
மதியுடை மனிதனும்
நெருப்பு சுடுமென்ற பின்னும்
சூடுபட்டறிவதும்
விஷமென்றறிந்தும்
புகைத்து சுவைத்து
மரணத்தை அணைப்பதும்
அறிவுடமையாமோ?

எஸ். சிவலோஜன், வவுனியா.

### வாழ்வு கெடும்

எரிமலையில் ஏறும் விட்டில்களே,
எரிக்காதீர் பணத்தையும் உடலையும்
எத்தனையோ பேர் ஓதிவிட்டார்
பட்டுத் திருந்துமுன் இவ்வுலகில்
கெட்டு விடும் உம் வாழ்வு.

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### பயணம்

பொசுக்கும் நெருப்பை
இதமென்று நெருங்கி
தஞ்சமெனத் தொடர
தீயுண்டு சாம்பராகி
முடியும் இவன் பயணம்

ம. கௌசிகா, உடுவில்.

### இறங்கி விடு!

மனிதா இறங்கிவிடு
எரிந்து கொண்டே
உன்னை எரித்துவிடும்
எதிரி அவள்-காலம்
கடந்திடும் முன்-உனை
கல்லறைக்கு அனுப்பிவிடுவாள்
இறங்கிவிடு.

இராமச்சந்திரன் தவேந்திரன்,
ஹாலி-எல.

### புதியவழி

"மலிந்து போன குப்பையை
வலிந்து சுவைத்த மனிதனே!
நூறு நாட்கள் வாழ்க்கையை
ஆறு நாட்களில் இழக்காதே!
புகைத்த இன்பம் போதுமே!
புதிய வழியை தேடாடா!"

நா. ஜெயபாலன், பிபிலை.

# வாசக[ர்] சாலை



**தினமுரசு ஆசிரியருக்கு!**

முரசு சுமந்து வரும் ஆக்கங்கள் மேலும் மேலும் மெருகேறுகிறது. "நெட்டிலிருந்து" Chat மூலம் இணைந்தவர்கள் பற்றிய பகுதி Netல் Chat பண்ணுவதை விட Intrest ஆக உள்ளது. காதிலை பூ கந்தசாமி நான் சொல்வதெல்லாம் பொய்யென்றுவிட்டு ஏன் உண்மைகளை உதிர்க்கிறார்? சிறுகதைகளும், கவிதைகளும் என்னை மிகவும் கவர்ந்த பகுதி. அப் பகுதியில் எழுதிவரும் அனைத்துப் படைப்பாளிகளுக்கும் என் மனம் கனிந்த வாழ்த்துக்கள். இந்திலன்-அமெரிக்காவிலிருந்த எழுதிய சிறுகதை (So... தன் மனக்கிலேசத்தை தன் சகோதரிக்கு கடிதமாக எழுதியது) என் கண்களை ஈரமாக்கியது. முரசின் வளர்ச்சியின் பெருமை கண்டு வாழ்த்தும்...

இரணையூர் பா. சுகி, லண்டன்.

முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாக தினமுரசு வெளியிட்டு வரும் ஆக்கங்கள் பக்கச் சார்பின்றி நேர்மையாக உள்ளன. கட்சிக்குள் இரண்டு பிரிவுகளாகச் செயற்படுபவர்களில் எவருக்கும் வக்காலத்து வாங்காமல் சரியெனப் பட்டதை அப்படியே தருகிறது தினமுரசு.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வர முரசு முன்னிற்க வேண்டும்.

எம்.எஸ்.எம். அன்வர், நிந்தவூர்

தினமுரசு வாரமலரில அணமைக காலமாக பொழுது போக்கு அம்சங்கள் அதிக அளவில் பிரசுரமாவது வரவேற்கத் தக்கது. உலகம் முழுவதிலும் ஆங்காங்கே நடக்கும் சுவையான சுவாரஸ்யமான சம்பவங்களை தனக்கே உரிய பாணியில் தொகுத்துத் தரும் முரசுக்குப் பாராட்டுக்கள். குறுக்கெழுத்துப் போட்டி ஒன்றையும் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும்.

ஷர்மிலா பேகம், ஓட்டமாவடி.

முரசு கூறும் அரசியல் ஆரூடங்கள் தவறியதில்லை என்பதற்கு தற்போதைய சமாதான சூழ்நிலையில் நடக்கும் சம்பவங்களும் போதிய சான்றாக உள்ளன. பக்கம் சாராது உண்மை நிலைவரம் என்ன என்பதை உள்ளபடி சொல்வது முரசு மட்டும்தான்.

என். ராஜேஸ், வவுனியா.

சுமார் 3 வருடங்களாக சிறியோர் முதல் பெரியவர்கள் வரை வாசித்து இரசித்த மன்னாதி மன்னன் தொடர் சிறப்பாக முடிவடைந்தது. இத்தொடரை எளிமையான உரை நடையில் எல்லோருக்கும் விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் வழங்கிய இராஜகுமாரனுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள். இத்தகைய தொடர்களை அழகிய வடிவத்தில் வழங்குவது முரசுக்கே உரிய தனித்துவம்தான். அடுத்தது என்ன எதிர்பார்த்திருக்கிறோம்.

ஆர். விக்னேஸ்வரன், கோப்பாய்

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## பணயக் கைதிகளாக நோயாளிகள்

அரசாங்க வைத்தியசாலைகளின் பணிகள் இரண்டு வாரங்களுக்கும் அதிகமான நாட்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

ஆயிரக்கணக்கான ஏழை நோயாளிகள் வாழ்வுக்கும் சாவுக்குமிடையிலான போராட்டத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அரசாங்க உதவி மருத்துவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட வேலை நிறுத்தத்தின் காரணமாக வைத்தியசாலைகளில் அத்தியாவசியப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல சேவைகளும் பெரும்பாலும் நடைபெறவில்லை. மருந்துக் களஞ்சியங்கள் இரும்புப் பூட்டுகளால் பூட்டப்பட்டிருந்தன.

சுகாதார அதிகாரிகளும் வேலைநிறுத்தக்காரர்களும், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வசதியில்லாத ஏழை நோயாளிகளுக்கு சாவு ஒன்றே பரிகாரம் என்று எதைப் பற்றியும் கவலையற்று இருந்தார்கள்.

இலங்கையின் சுகாதாரத் துறையினரில் ஒரு தரப்பினர் மாறி இன்னொரு தரப்பினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது வழக்கமான விடயமாகிவிட்டது.

இவர்களது ஒவ்வொரு வேலை நிறுத்தத்தின் போதும் நூற்றுக் கணக்கான உயிர்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றன. தொழிற்சங்கங்கள் ஏதேனும் ஒரு கோரிக்கையை முன்வைத்தால் அவற்றைப் பரிசீலித்துத் தீர்வு காண்பதில் அரசாங்கத்திற்கு அக்கறை இருப்பதில்லை. ஏராளமான நோயாளிகள் கொல்லப்பட்டு விசயம் பத்திரிகைகளில் பூதாகரமாக வெளிவரத் தொடங்கிய பின்னரே மெது மெதுவாக சமரச முயற்சிகள் ஆரம்பிக்கும். அதுவும் நாட்கணக்கில் இழுத்தடிக்கப்பட்டு மிகுந்த தாமதத்துடனேயே தீர்வை எட்டும். இத்தனையும் நடந்து முடிவதற்குள் எத்தனையோ நோயாளிகள் இறந்து போவார்கள்.

இது ஒரு அப்பட்டமான அடிப்படை உரிமை மீறல், தங்களது சம்பளத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அப்பாவிகளின் உயிரைப் பணயம் வைக்கிறோம் என்பது பற்றி சுகாதாரத் துறை தொழிற்சங்கங்களோ: பிரச்சனை ஒன்று வந்துவிட்டால் அதனை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று அரசாங்கமோ கருதுவதில்லை. பாவம் பொது மக்கள் யாரிடம் போய் நியாயம் கேட்பர்?

எம்.எம். முஸம்மில், கொழும்பு-12

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## ஒஸ்லோ முடிவுக்கு முரணாக புலிகள் முகமாலையில் கருத்து -ஈ.பி.டி.பி.

யாழ் குடாநாட்டிலிருந்து ஈ.பி.டி.பி. வெளியேற வேண்டும் எனப் புலிகளின் முக்கிய தளபதியான கருணா கோரியிருப்பதை, கேலிக்கிடமானது என ஈ.பி.டி.பி. நிராகரித்துள்ளது.

கடந்த திங்களன்று கொழும்பில் நடைபெற்ற ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் வடக்குக் கிழக்கில் ஈ.பி.டி.பி.யின் அரசியல் நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் புலிகள் இயக்கத்தினர் நடந்து கொள்வது தொடர்பாக இந்த பொதுச் சபைக் கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்பட்டதாக அக் கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து முதல் ஒஸ்லோ வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மாற்றுக் கட்சிகளின் ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் பற்றிப் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாறான ஒரு நிலைப்பாட்டினையே 15ம் திகதி முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் புலிகள் பிரதிபலித்துள்ளனர். இதனைத் தமிழ் பேசும் மக்களும் சர்வதேச சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டுமெனவும் ஈ.பி.டி.பி.யின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளைக் குழப்ப அனுமதிக்கப்போவதில்லை -பிரதமர்-

தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

மாலைதீவுக்கு விஜயம் செய்த பிரதமர் விக்கிரமசிங்க அந் நாட்டு ஜனாதிபதி அப்துல் கையூமினால் வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமான விதத்தில் நடைபெற்று வருவதாகவும் அம் முயற்சிகளை ஆதரிக்கும் ஆசிய நாடுகளில் மாலைதீவு முக்கியமானது எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தச் சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பி அதனை இல்லாமல் செய்வதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியினையும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

### வாழ்த்துக்கள்

வாசகர்கள்,அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் நல் வாழ்த்துக்கள்

## புலிகளின் எப்.எம். அலைவரிசைக்கு அரசாங்கம் அனுமதி

நோர்வேயிடம் இருந்து கிடைத்த அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்பு உபகரணங்களின் உதவியுடன் புலிகளின் குரல் வானொலியை எப்.எம். அலைவரிசையாக விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளது.

எப்.எம். அலைவரிசைகள் தொடர்பான பொறுப்பு வாய்ந்த ஆணைக்குழு அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் இந்த அனுமதியை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒலிபரப்பைச் சமாதான செயலகம் அவதானிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புலிகள் எப்.எம். அலைவரிசை ஒன்றை நடத்தப் போவது தொடர்பாக இந்தியா மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது.

இந்த ஒலிபரப்பு தமிழ்நாடு வரை எட்டாது; குறுகிய தூர சேவையாகவே இடம்பெறும் என அரசாங்கம் கூறி வருகிறது. கடந்த வாரம் கொழும்பு வந்த இந்திய வெளியுறவு பிரதிச் செயலாளர் கன்வல் சிபல் பிரதமரிடம் இது குறித்து இந்தியாவின் கவலையைத் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விடுவிக்குமாறு கோரிக்கை

புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஈ.பி.டி.பி.யின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் விஜி தங்கராசா, நிவாஸ் உள்ளிட்ட 3 பேரையும் விடுதலை செய்யுமாறு அக் கட்சி கோரியிருக்கிறது. ஜனநாயக அரசியலில் ஈடுபடும் தமது உறுப்பினர்களைக் கடத்திச் சென்று அச்சுறுத்துவதன் மூலம் ஈ.பி.டி.பி.யின் அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது எனத் தெரிவித் திருக்கும் அக் கட்சி, இக் கடத்தல் சம்பவம் அப்பட்டமான மனித உரிமை மீறல் எனத் தெரிவிக்கின்றது.

ஜனநாயக அரசியலை அங்கீகரிப்பதாகக் கூறும் புலிகள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் கடத்திச் செல்வது, அச்சுறுத்துவது போன்ற செயல்களை இனிமேலேனும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் ஈ.பி.டி.பி. கடத்தப்பட்ட தமது உறுப்பினர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

## கொழும்பில் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள்

தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு மத்தியில் இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்கு இந்திய இராணுவத்தின் உயர்மட்டக் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

இந்திய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தங்கியிருந்து இந்திய நலனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய்வார்கள். இதேவேளை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ளார்.

## பாதுகாப்பு உயர் வலயங்களை அகற்றப் புலிகள் காலக்கெடு

யாழ் குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சனைக்கு எதிர்வரும் 21ம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்படாவிட்டால் மோதல் தவிர்ப்புக் குறித்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தைப் புலிகள் பகிஷ்கரிக்கும் என்று அந்த இயக்கத்தின் தளபதியான கருணா தெரிவித்திருக்கிறார்.

முன்னைய தீர்மானங்களை நிறைவேற்றாத நிலையில் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து மேலும் கலந்துரையாடுவது அர்த்தமற்ற செயல் எனக் கருணா தெரிவித்திருக்கிறார்.

கடந்த 15ம் திகதி முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தின் போது அரசாங்கப் பிரதிநிதிகளிடம் கருணா இந்த நிலைப்பாட்டைக் கூறியுள்ளார்.

தற்போது பாதுகாப்புக் குறித்த அச்சம் படையினருக்கு இல்லை என்பதனால் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற முடியுமெனக் கருணா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதேவேளை யாழ் குடாநாட்டிலிருந்து ஈ.பி.டி.பி. முழுமையாக வெளியேற வேண்டும் எனவும் கருணா கோரியிருந்தார்.

## இலங்கைக்குச் சமீபமாக மர்மக் கப்பல் புலிகளுக்கு ஆயுதங்கள்?

கடந்த வாரம் இலங்கைக்குச் சமீபமாக உள்ள சர்வதேசக் கடற்பரப்பில் காணப்பட்ட மர்மக் கப்பலில் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தி வரப்பட்டிருக்கலாம் எனக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று சந்தேகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நூறு கடல் மைல் தொலைவில் மர்மக் கப்பல் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் நடமாடியது.

புலிகளுக்காக ஆயுதங்கள், வெடிபொருட்கள் என்பவற்றை இக் கப்பல் கொண்டுவந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலை இந்தியக் கடற்படையினர் அவதானித்த போதும் அவர்கள் அதனை வழிமறிக்கவில்லை. இலங்கைக் கடற்படையினருக்கு உடனடியாகத் தகவல் அனுப்பியுள்ளனர். ஆனால் குறிப்பிட்ட இடத்திற்கு இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் சென்ற போது அவ்வாறான மர்மக் கப்பல் எதனையும் காணவில்லையெனவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்த ஆங்கிலப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### புலிகளுக்கு ஒலிபரப்பு உபகரணம் அன்பளிப்பு!

## பிரதமரைச் சந்தித்து விளக்கம் கோர எதிர்க் கட்சிகள் தீர்மானம்

நாட்டின் சட்டத்திற்கு முரணான வகையில் புலிகள் இயக்கத்திற்கு எப்.எம். வானொலி ஒலிபரப்புக் கருவிகளை வழங்கியது தொடர்பாக, தங்களுக்குக் கடும் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பாகப் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒலிபரப்புக் கருவிகள் தொடர்பாக அதிகாரிகளும் அரசாங்கமும் வெளியிட்டுவரும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணான வகையில் அமைந்திருப்பதால் இது விசயத்தில் தங்களுக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கிறார்.

ஒலிபரப்புக் கருவிகளைப் புலிகளுக்கு வழங்கியமை சமாதான முயற்சிகளில் நடைபெற்ற மிகவும் சந்தேகத்துக்குரிய செயல் எனக் குறிப்பிடும் அவர், நோர்வேத் தூதுவர் நாட்டின் சட்டத்திற்குப் புறம்பாகச் சென்று செய்த இந்தக் காரியம் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப் போவதாகத் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் பிரதமர் நேரம் ஒதுக்கியதும் ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகளிடமும் கலந்தாலோசிக்க இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

## ஆனந்தசங்கரிக்குப் பிரதி சபாநாயகர் பதவி வழங்குமாறு மகேஸ்வரன் கோரிக்கை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரியை வெற்றிடமாக உள்ள பிரதி சபாநாயகர் பதவிக்கு நியமிக்குமாறு இந்து கலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுள்ளார்.

இந்தப் பதவியைப் பொ.ஐ.மு.வைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்க அரசாங்கம் முன்னதாகத் திட்டமிட்டிருந்தது. ஆனால் இதை ஏற்க அக் கட்சி மறுத்துவிட்டதால் இந்தப் பதவி புதிய பாராளுமன்றத்தில் நிரப்பப்படாமலே இருந்து வருகிறது.

இதற்கு ஆனந்தசங்கரியை நியமிக்குமாறு மகேஸ்வரன் பிரதமரிடம் கேட்டிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடமிருந்து சாதகமான பதில் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தம்மிக்க கித்துள் கொடவின் ஓய்வுக்குப் பிறகு நிரப்பப்படாமல் இருக்கும் பாராளுமன்றச் செயலாளர் பதவிக்கு சகல கட்சிகளும் ஏற்கக் கூடிய ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றச் செயலாளர் பதவியும் கடந்த 6 மாதத்திற்கு மேலாக நிரப்பப்படாத நிலையில் பாராளுமன்ற அலுவல்களில் பலத்த தாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## விமானப்படைக்கு நான்கு புதிய போர் விமானங்கள்

இலங்கை விமானப்படை நான்கு போர் விமானங்களைப் புதிதாகக் கொள்வனவு செய்ய இருக்கிறது.

பயிற்சி நடவடிக்கைகளுக்காக கபீர் விமானங்கள் உட்பட நான்கு புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய இருப்பதாக விமானப்படைத் தளபதி ஏயார் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்கப்பட்டதில் அழிவுக்குள்ளான கே 8 ரக பயிற்சி விமானங்கள் மூன்றுக்குப் பதிலாக அதே விமானங்கள் மூன்றை வாங்குவதற்கு அமைச்சு மட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கே 8 ரக விமானங்களை வழங்கிய அதே விலைக்கு இந்த 3 விமானங்களையும் பெற்றுக் கொடுக்க சீன நிறுவனம் ஒன்று விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் விமானப்படைத் தளபதி தெரிவித்தார். முன்னதாக இந்த விமானம் ஒன்று 3 மில்லியன் டொலருக்கு வாங்கப்பட்டது.

கபீர் பயிற்சி விமானம் வாங்குவது தொடர்பாக ஏற்கனவே இஸ்ரேலிய நிறுவனம் ஒன்றிடம் விலை மனு கோரப்பட்டுள்ளது.

## சுபைர்தீன் பதவி நீக்கம்!

இரண்டாகப் பிளவுற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்லா தரப்பினராக கட்சியின் தலைவராக நியமித்துக் கொண்ட எஸ். சுபைர்தீன், ஏற்கனவே வகித்த புனர்வாழ்வு அதிகார சபையின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார் என கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புனர்வாழ்வு அதிகார சபையின் புதிய தலைவர் 17ம் திகதி அமைச்சர் ஹக்கீம் தலைமையில் பதவியேற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# முரசம்

## பன்மைத்துவத்தை ஏற்கும் பக்குவம்

*அன்புள்ள உங்களுக்கு,*
**வணக்கம்.**

யாழ்ப்பாணத்திலிருந்து ஈ.பி.டி.பி. கட்சியினரை வெளியேறும்படி ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தப்பட்டு வருவதும் அதனால் பொலிஸார் இத்தகைய ஆர்ப்பாட்டங்களைக் கலைக்கும் சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதிக்கப்படுவதும் பின்னர் அப்பாதிப்புகளுக்காக ஹர்த்தால்கள், கடையடைப்புகள் நடத்தப்படுவதுமாக அங்கு அநாவசியமாக அமைதியற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை அமுலாக்கப்பட்டு, இராணுவக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு, வீதித் தடைகள் நீக்கப்பட்டு, போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை தற்காலிகமாகவேனும் ஏற்பட்டு வரும் நிலையில் அதற்குச் சாபக்கேடான வகையில் இக் குழப்பங்கள் தூண்டப்படுகின்றன.

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி.யினரை அகற்ற முற்பட்டு அது அவர்கள் மீள, வலுவான வகையில் நிலைகொள்ள வழிசெய்வதாய் முடிந்ததன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணத்தை விட்டு அவர்களை வெளியேற்றும் இம் முயற்சி திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்குப் பின்னணியில் புலிகளே இயங்குகிறார்கள் என்பது வெளிப்படையான இரகசியமாக இருப்பதும், கடந்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் புலிகளின் கிழக்குத் தளபதி கருணா யாழ்ப்பாணத்தில் இருந்து ஈ.பி.டி.பி.யினர் வெளியேற வேண்டுமென வலியுறுத்தியதும், புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தீவிலிருந்து ஈ.பி.டி.பி.யினர் வெளியேறிய பின்னர் தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை என்று அறிக்கை விடுத்துள்ளதும் இந் நடவடிக்கையில் அவர்கள் உறுதியாக உள்ளதையே காட்டுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கு-கிழக்கு மற்றும் இலங்கை பூராவுமுள்ள எந்தவொரு கட்சியும் தனது கொள்கைகளை முன்வைத்து அரசியல் செய்வதற்கான அடிப்படைச் சுதந்திரம் மறுக்கப்பட முடியாதது. "மக்கள் எதிர்க்கிறார்கள்" என்ற காரணம் அர்த்தமற்றது. ஏனெனில் யார் மக்கள்? எத்தனை பேர் சேர்ந்தால் மக்கள்? என்று இங்கு வரையறுக்க முடியாது. எதிர்ப்பவர்களை விட எதிர்க்காதிருப்பவர்கள் தொகை மிக மிக அதிகம் என்பதையும் நிராகரிக்க முடியாது. அதனால் மக்களின் பெயரில் தமது கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்ள முனைவது மூடி மறைக்க முடியாதவாறு அது வெளித்தெரிவதுடன் அதை எந்த ஜனநாயக சக்திகளாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே இத்தகைய வழிமுறைகளை விடுத்து ஏனைய சக்திகளும் செயற்படவும் அரசியல் நடத்தவும் உள்ள உரிமையை அங்கீகரித்து பன்மைத்துவத்தையும் ஜனநாயகத்தையும் மதிக்கின்ற பக்குவத்தை, எமது பத்திரிகைகளும் அரசியல் தலைமைகளும் மற்றும் ஜனநாயக அமைப்புகளும் தற்போது வலுவாக எடுத்துரைக்க வேண்டும். இல்லையேல் இதே கதி எந்நேரமும் அவர்களுக்கும் நேரலாம்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# சமஷ்டியைத் தேடி...

புலிகள் தத்துவாசிரியர் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைத் தமது இயக்கம் ஏற்கத் தயாரென இறுதியாக ஒஸ்லோவில் நடந்த மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் பகிரங்கமாகத் தெரிவித்ததுதான் தாமதம் சமஷ்டி என்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள் நாலா புறத்திலும் கிளம்பத் தொடங்கிவிட்டன.

புலிகளும் அரசாங்கமும் சேர்ந்து உலக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சமஷ்டி அமைப்புக்கள் பற்றிய ஒரு ஆராய்ச்சி நடத்தவும் புறப்பட்டுவிட்டன.

இதில் முதற் காரியமாக சுவிஸ் நாட்டு ஆட்சி முறையை ஆராய இரு தரப்பினரும் அங்கு சென்று திரும்பியுள்ளார்கள்.

அடுத்ததாக கனடா செல்லவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

இவ்வாறு நாடு நாடாகச் சென்று அங்கு அமுலிலுள்ள ஆட்சி முறைகளை ஆராய்ந்து, எமக்குப் பொருந்தக்கூடிய முறையைத் தேடுவது நல்ல விடயம்தான்.

ஆனால் அதேவேளை எமது நாட்டின் யதார்த்த நிலையிலிருந்து கொண்டு, இங்குள்ள அடிப்படைப் பிரச்சினைகளது தன்மைகள், சமூக, பொருளாதார, பூகோள நிலைமைகள், இங்குள்ள மக்களின் உணர்வுகள் என்பவற்றின் மத்தியிலேயே நாம் ஓர் உகந்த தீர்வை உருவாக்க வேண்டும்.

இதில் நமக்கு இருக்க வேண்டிய புரிதல் என்னவென்றால், நாம் தேடும் நாடுகள் யாவும் அந்ததந்த நாட்டின் யதார்த்தத்துக்கு ஏற்ற அரசியல் முறைகளையே வகுத்துக் கொண்டுள்ளன என்பதுதான்.

அதனால்தான் அனைத்துக்கும் பொதுவான ஒரு சமஷ்டி முறையென்பது உலகில் எங்கும் எழுதி வைக்கப்படவில்லை. - ஒவ்வோர் நாட்டின் சமஷ்டி முறைகளும் அந்தந்த நாட்டுக்கான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன.

எனவே, இப்போதுதான் ஆரம்பித்திருக்கும் இத் தேடல், கண் தெரியாத காட்டுக்குள் நடத்தும் ஒரு இலக்கில்லாத தேடலாகிப் போய்விடாமல் எமது நாட்டின் யதார்த்தத்தின் தளத்திலிருந்து நடத்தும் தேடலாக அமைவதே இதனை அர்த்தமுள்ளதாக்கும்.

எமது நாட்டு யதார்த்தத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களென்ற அடையாளங்களோடு மக்கள் திகழ்வதுடன் அவ்வாறே தம்மைப் பிரதிநிதித்துவம் செய்துகொள்கிறார்கள்.

வடக்கு கிழக்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் வேறாகவும், முஸ்லிம் பிரதிநிதிகள் வேறாகவும், மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகள் வேறாகவுமே இயங்குகிறார்கள். இந் நிலையில் இங்கு காணப்படும் தீர்வு, அது ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வாக இருந்தாலும் - குறித்த ஒரு இனத்துக்கு மட்டும் பொருத்தமானதாகவன்றி சகல இனங்களுக்கும் பொருத்தப்பாடானதாக அமைவதாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறானால், சகல இனங்களது பிரதிநிதித்துவங்களும் இதில் தீர விவாதித்து இணக்கம் காணும் வண்ணம் பங்குபற்ற இடமளிக்கப்பட வேண்டும்.

அத்தோடு, தமிழ் மக்கள் மத்தியிலும்கூட மாற்றுக் கருத்துக் கொண்ட தரப்பினர்களது வாதப் பிரதிவாதங்களும், பிரதிநிதித்துவங்களும் உரிய கௌரவத்தோடு உள்வாங்கப்பட வேண்டும்.

ஏற்படுகின்ற ஒரு தீர்வைத் தாமும் சேர்ந்தே உருவாக்கினதான திருப்தி அவர்களுக்கும் இருக்க வேண்டும்.

அப்போதுதான் இத் தீர்வு ஒரு நிலைபேறான தீர்வாக நீடித்திருக்க முடியும்.

தீர்வை வகுப்பதில் எவரையுமே புறக்கணிக்க வேண்டுமென்ற மனோபாவம் இருக்கக் கூடாது.

எந்தவொரு தீர்வும், ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

வகுக்கப்படும் தீர்வானது எம் மக்களுக்குரியதேயன்றி எத்தக் கட்சிக்கோ இயக்கத்துக்கோ உரியதல்ல.

தீர்வொன்றை வகுத்து அதில் இணக்கம் கண்ட பின் அத் தீர்வினடிப்படையில் யார் ஆட்சிபீடம் ஏறுவதென்பது வேறு விடயம்.

அதில் மக்களின் ஆதரவுடையவர்கள் வெற்றி பெறலாம்.

தீர்வென்பது ஒரு நிலையான விடயம். அதனடிப்படையில் யார் யார் ஆட்சி செலுத்துவதென்பது மாறி மாறி அமையக்கூடிய விடயம்.

அதனால், இவை இரண்டையும் சம்பந்தப்படுத்தி முடிவுகளை மேற்கொள்வது பிற்கால நெருக்கடிகளுக்கு வழி வகுக்கலாம்.

இதற்குச் சிறந்த உதாரணம் எமது நாட்டிலேயே உண்டு.

அது வேறு எதுவுமில்லை, தற்போதைய அரசியல் யாப்பேதான்.

இந்த யாப்பு இலங்கையில் வினைத்திறன் மிக்க ஆட்சியமைப்பொன்றை ஏற்படுத்துவதாகக் கூறி அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவால் 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

ஆனால், அது முழுக்க முழுக்க, ஆளுகின்ற தனக்கான அதிகாரங்களைக் குவித்துக் கொள்வதற்காக, தன்னை மையப்படுத்தியே, அப்போதிருந்த அரசியலை மட்டும் எடுத்து நோக்கி அவரால் வகுக்கப்பட்டது.

இப்போது அது அவரது கட்சியினராலேயே நிராகரிக்கப்படுவதாக உள்ளது.

அத்துடன் பாராளுமன்றம், ஜனாதிபதி என்ற இரு அதிகார மையங்களை வெவ்வேறு கட்சிகள் வகிக்கும் நிலையில் ஒரு உட்புற அதிகார மோதலுக்குக் களமமைத்துக் கொடுத்துள்ளது.

எனவேதான் இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது பொதுப்படையாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயம். எந்தக் கட்சியையும் மையப்படுத்திச் சிந்திப்பது தவறாகும்.

இது ஒருபுறமிருக்க, இத் தீர்வை வகுப்பதில் இதுவரை இலங்கை அரசும் புலிகளும் மட்டுமே ஈடுபடுபவர்களாக உள்ளார்கள்.

இதில் புலிகள் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொள்ளலாமெனத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் அந்த ஆட்சிமுறை எப்படியாக இருக்க வேண்டுமென்ற வரையறைகள் எவையும் புலிகள் தரப்பால் இன்னும் முன்வைக்கப்படவில்லை.

தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல், தாயக நிலம் என்ற உரிமையை அங்கீகரித்தல், சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பவற்றின் அடிப்படையில் தீர்வு அமைந்தால்தான் தாம் அதைப் பரிசீலிக்க முடியுமெனப் புலிகள் கூறி வந்தார்கள்.

இப்போது சமஷ்டி ஆட்சிமுறையைத் தாம் ஏற்கத் தயாரெனப் புலிகள் கூறியுள்ள நிலையில், அவ்வாட்சி குறித்துப் புலிகளும் அரசாங்கமும் பேச முற்பட்டுள்ளது மட்டுமன்றி, இணைந்தே பல்வேறு நாடுகளது ஆட்சிமுறைகளை ஆராயவும் தலைப்பட்டுள்ளனர்.

ஆனால், இவ்வளவுக்கும் அரசாங்கம், புலிகள் முன்னர் கூறிவந்தபடி, தமிழ் மக்களின் தேசிய இன அந்தஸ்தை அங்கீகரித்திருப்பதாகவோ, தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளதாகவோ, அல்லது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகவோ எதுவும் கூறவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்தான் இதே விடயங்களை 1985ல் திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது நிராகரித்தது.

> **ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்தான் இதே விடயங்களை 1985ல் திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது நிராகாரித்தது.**

அடிப்படையில் இவற்றை அங்கீகரிக்காததால்தான் அப்போதைய திம்புப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததுடன் இவற்றை அங்கீகரிக்கும் வரை மேற்கொண்டு எதையும் அரசாங்கத்துடன் பேச முடியாதென்ற நிலையும் ஏற்பட்டது.

ஆனால், இப்போது 17 வருடங்களுக்குப் பின் அதே அரசாங்கத்துடன், அந்த நிபந்தனைகளுக்கு அவர்களிடமிருந்து பதிலெதுவும் வழங்கப்படாமலே, அரசியல் பேச்சுவார்த்தைக்கு இறங்கியிருப்பதென்பது இந் நிலைப்பாடுகளை உயர்த்திப் பிடித்தது குறித்து ஒரு மீள் சிந்தனையை அவசியப்படுத்தியும் உள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் மறுதரப்பாகப் பங்கு கொள்ளும் அரசாங்கமானது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற ஆட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்துள்ளதேயன்றி ஜனாதிபதி ஆட்சியைச் சம்பந்தப்படுத்திக்கொள்ளவில்லை.

ஆனால் இந் நாட்டின் ஆட்சி எனும்போது, ஜனாதிபதி ஆட்சியும் பாராளுமன்ற ஆட்சியும் சேர்ந்ததாகவே இருக்கிறது.

எனவே பேச்சுவார்த்தையில் அரசு தரப்பின் முழுமை பேணப்படவும் இல்லை.

இதனால் பாராளுமன்ற ஆட்சி பேச்சுவார்த்தையில் காணும் இணக்கப்பாடுகளுக்கு ஜனாதிபதி ஆட்சி பொறுப்பேற்க மறுக்கும் நிலை எப்போதும் சாத்தியமாக உள்ளது.

இதேவேளை இப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சமஷ்டி ஆட்சி முறைக்கு இணங்கத் தயாராக உள்ளதா என்ற கேள்வி யாவருக்கும் இயல்பாகவே எழக்கூடியதே.

ஏனெனில், ஐ.தே.க. வின் இதுவரையிலான நிலைப்பாடு ஒற்றையாட்சி முறையேயாகும்.

தற்போதைய அரசியல் யாப்பு ஒற்றையாட்சி முறையையே கொண்டிருக்கிறது.

1995ல் ஜனாதிபதி சந்திரிகா, தனது பொ.ஐ.மு. அரசாங்கத்தின் சார்பில் சமஷ்டி ஆட்சி முறையைத் தழுவிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருந்தார்.

அத் தீர்வுத் திட்டத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்ளக்கூடியதென ஏற்றுக்கொண்ட போதும் அது புலிகளால் போதுமானதாக இல்லையென நிராகரிக்கப்பட்டது.

அதேவேளை அந்த ஆலோசனைகள் அளவுக்கதிகமானதென ஐ.தே.க.வால் நிராகரிக்கப்பட்டது.

பின்னர், அப்போது பொ.ஐ.மு. அரசாங்கத்தில் இனவிவகார, அரசியலமைப்புச் சட்ட அமைச்சராகவிருந்த ஜி.எல். பீரிஸ் இத் தீர்வுத் திட்டத்துக்கு ஐ.தே.க.வின் சம்மதத்தை ஈட்டுவதாகக் கூறி, அதன் அதிகாரங்களை வெகுவாகக் குறைத்து, 1997ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து 2000ம் ஆண்டில் நிறைவேற்ற முற்பட்டபோது, ஐ.தே.க. அத் திட்டத்தைப் பாராளுமன்றத்தின் சபையில் வைத்தே கிழித்தெறிந்து தீவைத்துக் கொழுத்தியது.

இத்தகைய குறைந்த அதிகாரங்களையே அங்கீகரிக்க மறுத்த கட்சிதான் இன்று 2 வருடத்தின் பின் ஆட்சிபீடமேறி, அதே ஜி.எல்.பீரிஸைத் தலைமைப் பேச்சுவார்த்தையாளராகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துகிறது.

அதனால் இவ் அரசாங்கம், அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அப்பால் அரசியல் பிரச்சினையில், சமஷ்டி ஆட்சி முறையில் அமைந்த தீர்வொன்றை வகுக்க முன்வருமா என்ற சந்தேகம் இயல்பாக எழுப்பப்படுகிறது.

ஆனாலும், இம்முறை சமாதானத்துக்கான பொறுப்பைச் சுமந்து கொண்டிருக்கின்ற நிலையில், பேச்சுவார்த்தையைத் தொடர வழி செய்ய வேண்டிய கட்டாயத்தில், சர்வதேச சமூகத்தின் முன்னால் தள்ளப்பட்டுள்ள நிலையில், அடுத்த ஒரு யுத்தத்தை முகம்கொடுக்க முடியாத நிலையில், அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ சமஷ்டி முறைக்கு உடன்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

அடுத்ததாக, அவ்வாறுதான் புலிகளும் அரசாங்கமும் ஒரு சுயாட்சி அமைப்பு முறையில் இணக்கம் கண்டுவிட்டால், அதை நிறைவேற்றக் கூடிய அரசியல் பலம் இவர்களிடத்தில் இப்போது இல்லை என்பது பிரச்சினைக்குரிய விடயம்.

அதற்கு நிச்சயம் தற்போது எதிர்க்கட்சியாகவுள்ள பொ. ஐ.மு. வின் ஆதரவையும் வென்றெடுப்பதே அத்தியாவசியமானதாகும்.

தற்போதும் ஜனாதிபதி ஒருபோதும் சமாதானத்துக்குத் தடையாக தான் இருக்கப் போவதில்லையெனக் கூறிய வண்ணம் உள்ளார்.

இந் நிலையில், ஒஸ்லோவில் நடந்த இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க துணை ராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ், சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி தரப்பையும் இணைத்துக் கொள்வதை அவசியமான ஒன்றாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை முஸ்லிம் தரப்பினர் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவன்றி தாம் தனித்துவமாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமெனக் குரலெழுப்பி வருகின்றனர்.

மறுபுறம் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் கன்வல் சிபால், புலிகளுடன் மட்டுமன்றி சகல தரப்பினரதும் இணக்கத்துடனான தீர்வொன்றையே தாம் ஏற்றுக்கொள்ள முடியுமென்றும், அத்துடன் ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் ஆகியவற்றைப் பேணுவதும் இங்கு உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

மலையகத் தமிழர் தரப்பிலிருந்தும் இத் தீர்வு குறித்த விடயத்தில் தங்கள் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமென்ற ஆதங்க்ம் தலை தூக்கத் தொடங்கியுள்ளது.


அதனால் பொதுவில் யாவருமே இணக்கம் காணக்கூடிய சமஷ்டியென்ற அரசியல் தீர்வின் தேடலில் அனைத்துத் தரப்பினரும் பங்களிக்க இடமளிப்பதே, பொறுப்புணர்வுடையதும் பக்குவமானதுமான நீடித்த நிரந்தரத் தீர்வை வகுப்பதற்கான அணுகுமுறையாகும். ■

# சமரச முயற்சிகளை நிராகரிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள்

முஸ்லிம் காங்கிரஸ் பிரச்சனை தீர்வதற்கான அறிகுறி தெரியவில்லை. கடந்த வாரம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய அமைச்சர் அதாவுல்லா சமரச முயற்சிகள் நடைபெறுவதாகக் கூறப்படுவதையே நிராகரித்திருக்கிறார்.

அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம் சமூகத்திற்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கூறும் அதாவுல்லா, அவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இல்லை என்றும் சாதாரண பேர்வழியே என்றும் விமர்சித்திருக்கிறார்.

அன்றைய செய்தியாளர் மாநாட்டில் அதாவுல்லா தரப்பினர் பேசிய தொனி அவர்கள் ஹக்கீமுடன் சமரசத்திற்கு வரத் தயாரில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டியது.



### நீதிமன்றத் தீர்ப்பு

மறுபுறம் ஹக்கீமின் கட்சித் தலைமைத்துவம் நீதிமன்றத்தினால் மீண்டும் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. ஹக்கீமுக்கு எதிராக அதாவுல்லா தரப்பினர் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் சுபைர்தீன் என்பவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான விசாரணை ஜனவரி மாதம் பிற்பகுதி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதுவரையிலும் ரவூப் ஹக்கீமே கட்சியின் தலைவராக இருப்பார் என நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்புக் கூறுகிறது.

தான் ஏற்கனவே விட்ட பிழையை உணர்ந்ததனாலோ என்னவோ ரவூப் ஹக்கீம் கடந்த ஒரு வார காலமாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் குறித்துச் சற்று உரத்த குரலில் பேசுவதாகத் தெரிகிறது. ஆனால் இன்னமுமே அவர் தான் எதிர்பார்க்கும் தீர்வு குறித்துத் தெளிவாக எதனையும் குறிப்பிடவில்லை.

**இந்த உட்கட்சி முறுகலை முஸ்லிம் மக்கள், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமன்றி நாடு முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை இன்னொரு தேர்தலில்தான் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.**

### தெளிவற்ற கருத்துக்கள்

அதாவுல்லா தரப்பினரிடமும் இந்தப் பலவீனம் காணப்படுகின்றது. அவர்களும் வெறுமனே முஸ்லிம்களின் அபிலாசை என்று கூறுகிறார்களே தவிர அதன் வடிவம் என்ன என்பதை ஓரளவேனும் தெளிவுபடுத்தவில்லை.

தற்போது கொழும்பு அரசியல் வட்டத்தில் சமஷ்டி என்ற சொல் மீதான விவாதம் பரவலாக நடந்து வருகிறது. அரசாங்கமும் புலிகளும் சமஷ்டி குறித்த தங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். இந் நிலையில் இவ்வாறான ஒரு நிர்வாக அமைப்பின் கீழ் முஸ்லிம்களின் பங்களிப்பு அல்லது அவர்ளுக்கு கிடைக்கவிருக்கும் அரசியல் அதிகார அளவின் தன்மை என்ன என்பது பற்றி முஸ்லிம் அரசியல் வட்டாரத்தில் ஆரோக்கியமான விவாதம் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

உண்மை என்னவெனில் இத்தகைய ஆழமான அரசியல் விசயங்கள் குறித்து ஆராயும் நிலையில் முஸ்லிம்களின் தலைமைத்துவங்கள் இல்லை என்பதுதான்.

இரண்டு தரப்பினரதும் தற்போதைய பிரதான குறிக்கோள் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்வது அன்றேல் கைப்பற்றுவதில் தான் இருக்கிறது.

ரவூப் ஹக்கீம் அரசியல் ரீதியில் எத்தகைய குழப்பமான கருத்துக்களை வெளியிட்டு வந்தாரோ அதே அளவு தெளிவில்லாத கருத்துக்களே அதாவுல்லாவிடமிருந்தும் வருகின்றன. இரண்டு பிரிவில் இருந்தும் சமூகத்தின் நலனை மையமாகக் கொண்ட கருத்துக்களோ தீர்வுகளோ முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

### ஸ்திரமற்ற நிலையை நோக்கி....

எவ்வாறெனினும் முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடி அரசியல் ரீதியில் நாட்டில் ஏதோ ஒரு வகையில் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கியிருக்கிறது என்பதை மட்டும் தெளிவாக உணர முடிகிறது.

பொ.ஐ.முன்னணியைப் பொறுத்த வரையில் அதாவுல்லா தரப்பினர் அந்தக் கட்சிக்குக் கிடைத்த பலமான துரும்பு. அதனால் அவர்களை இலகுவில் விட்டுவிட விரும்பமாட்டார்கள்.

பொ.ஐ.மு.வில் அங்கம் வகிக்கும் திருமதி பேரியல் அஷ்ரப்பின் கட்சியான தே.ஐ.முன்னணியுடன் அதாவுல்லா தரப்பினர் புதிய கூட்டு ஒன்றை உருவாக்கிக் கொள்ளலாம் எனச் சில வட்டாரங்களில் பேசப்படுகிறது. அரசியல் நிலைவரத்தை உற்றுநோக்கும் போது அதற்கான சாத்தியக்கூறுகளை முற்றாக நிராகரிக்கவும் முடியாது.



ரவூப் ஹக்கீம், அதாவுல்லா ஆகிய இருவருக்கும் ஒரே கட்சியை இரண்டாகப் பிளந்து பாதி பாதியாகப் பிரித்தெடுத்துக் கொண்டு ஒரே கபினெட்டில் இருந்து அரசியல் நடத்துவது நீண்டகாலத்திற்குச் சாத்தியமாகப் போவதில்லை. அதாவுல்லா அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் என்ற போதிலும் தற்போதைய நிலையில் அவரது கோரிக்கைகளுக்கு வளைந்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருக்கிறது. ஆதலால் ஹக்கீம் தொடர்பில் அதாவுல்லாவினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தினால் வெகு சுலபத்தில் புறந்தள்ளக் கூடிய சூழ்நிலை இல்லை.

### அதாவுல்லாவின் காத்திருப்ப

இது ஒருபுறம் இருக்க பொ.ஐ.மு. அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் தருணத்தில் எந்தவொரு தரப்பினரையும் பகைத்துக் கொள்ளப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடியாது. ஆனால் பொ.ஐ.மு.வுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய ஏது நிலை தோன்றும் பட்சத்தில் அதாவுல்லா தரப்பினர் தன்னைக் கைவிடுவார்கள் என்பதை ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் அறிந்திருப்பார்.

இத்தகைய பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் ஒரு தடவை இரண்டாக உடைந்து விடக் கூடாது என்பதில் ஹக்கீம் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளார்.

**நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, கட்சியின் பாதிக்கு மேற்பட்டவர்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்ற பலம் எல்லாமாகச் சேர்த்து ரவூப் ஹக்கீமுக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கிறது.**

தன்னுடன் சமாதானமாகத் தீர்வொன்றுக்கு வருமாறு தொடர்ச்சியாக அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கிறார். மீண்டும் தன்னுடன் இணைந்து கொள்ளக் காலக்கெடு விதித்து அக்கெடுவை நீடித்துத் தனது பெருந்தன்மையைக் காட்டியிருக்கிறார்.

வேண்டாம் என இத்தனை உத்வேகத்துடன் பிரிந்துபோன ஒரு குழுவுக்குக் காலகெடு விதித்து அவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற சிறிய விடயம் அமைச்சர் ஹக்கீமுக்குப் புரியாது இருந்திருக்குமா எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, கட்சியின் பாதிக்கு மேற்பட்டவர்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்ற பலம் எல்லாமாகச் சேர்த்து ரவூப் ஹக்கீமுக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கிறது.

எதிரணியைப் பார்த்து "தேவையென்றால் வந்து இணைந்து கொள்ளலாம்" எனக் கூறுகிறார். உண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் உடையக் கூடாது என அவர் கருதுவதாக இருந்தால் தலைவர் என்ற கோதாவுடன் இல்லாது சுமுகமான தீர்வொன்றுக்கே அதாவுல்லா தரப்பினரை அழைத்திருக்க வேண்டும்.

எவ்வாறெனினும் இத்தகைய அழைப்புக்களை அடிக்கடி விடுவதில் அமைச்சர் ஹக்கீமுக்கு அரசியல் ரீதியில் இலாபம் இருக்கிறது.

நான் கூப்பிட்டேன் அவர்கள் தான் வரவில்லை என்று நாளை முஸ்லிம் சமூகத்தின் முன்னால் போய்ச் சொல்லுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஹக்கீம் இறங்கியிருக்கிறார்.

அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு பொருத்தமான சந்தர்ப்பத்துக்காக அதாவுல்லா காத்திருப்பதாகவே பலரும் கருதுகிறார்கள். பொ.ஐ.மு.விடமிருந்து வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் ஆட்சி மாற்றம் ஒன்றின் போது கட்சி தாவுவதற்கு அதாவுல்லா எதிர்பார்த்திருப்பதாகப் பொ.ஐ.மு. வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

அமைச்சர் ஹக்கீமுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கும் நெருக்கத்தை அவதானிக்கும் போது அதாவுல்லா மறுபக்கம் திரும்பித்தான் தனது அரசியல் வாழ்வை முன்கொண்டு செல்ல வேண்டி வரும் என்று எதிர்பார்க்க முடியும். ஆதலால் அதாவுல்லா குழுவினர் எதிர்கால அதிகார மாற்றம் ஒன்றின் போது பொ.ஐ.மு.வுக்கு ஆதரவு தெரிவிப்பார்கள் என்பதை நம்பலாம்.

மக்களிடம் சென்று, மக்கள் ஆதரவைத் திரட்டி நாட்டை ஒரு கலக்குக் கலக்கலாம் என இந்த இரண்டு தரப்பினரும் எதிர்பார்த்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்பு பிசகிப் போனது போலவே இருக்கிறது.

### பிசுபிசுத்துப் போன மக்கள் போராட்டம்

இரண்டு தரப்பினரதும் மக்கள் போராட்டம் குறிப்பிடத் தக்க எந்தவொரு தரப்பினருக்கும் பலத்த ஆதரவைக் காண்பிக்கத் தவறிவிட்டது. தங்களது ஆதரவாளர்கள் சிலர் இருக்கும் ஊர்களில் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குப் பின்னர் பள்ளிக்குப் பக்கத்தில் கோசம் எழுப்புவதால் மக்களின் ஏகோபித்த ஆதரவு இருப்பதாகக் காண்பிக்க முடியாது.

உண்மையில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்ட பிளவை இப்போது அரசியல் கட்சிகள் தங்களது இலாபத்துக்குப் பயன்படுத்துகின்றன. இந்த உட்கட்சி முறுகலை முஸ்லிம் மக்கள், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமன்றி நாடு முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை இன்னொரு தேர்தலில் தான் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். அது வரையில் அதாவுல்லாவும் ரவூப் ஹக்கீமும் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி தங்கள் தரப்பு நியாயங்களைக் கூறிக்கொண்டிருப்பதை மௌனமாக இருந்து பார்ப்பதைத் தவிர முஸ்லிம்களால் வேறு என்ன செய்ய முடியும்?

# NAVEEN CERAMIC

தரமான
Wall Tiles, Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
**184-A, Havelock Road, Colombo-05.**
**Tel :01-507334**

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

**கம்பியூட்டர் வகுப்புக்கள்** 7 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு பெண்டியம் கம்பியூட்டர்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. புதிய வகுப்புகள் ஜனவரி 2 இல் ஆரம்பம். கட்டணம் மணித்தியாலத்திற்கு 50 ரூபா. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-
**Swiss Tec Computer System**
5- 1/21, கொட்டாஞ்சேனை மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு-13.
T.P 078-669247

---

## லண்டன், பாரிஸ்
## இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

**மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்**

**டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON.).**

**10.12.2002** முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.
மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்சிமா (Eczema) மலட்டுத்தன்மை - பேரின்மை (Sterrility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.
ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாக்கக் கருத்திற் கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்க வல்லது.

**முன்கூட்டி பதிவுக்கு**
லண்டன் தொலைபேசி : 07984803488 / 07833341693
email : homoeocare @ rediffmail.Com
தொடர்பு : 0091 - 9843051 (இந்தியா) 0094 - 07776025 (இலங்கை)
இலங்கை விஜயம் : 21.12.2002 முதல் 24.12.2002 வரை

---

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754

---

## Anisch Credit & Kranken Kasse

ANISCH

Anisch Bank Credit இன் குறைந்த வட்டி வீதத்தில் இருந்து வங்கிக் கடன் வழங்கும் திட்டமும், ஆலோசனையும்.
(உதாரணம்:- 4000 Sfrக்கு வருட வட்டி 62 Sfr மட்டுமே) 2003 ஆம் ஆண்டின் புதிய வங்கிக் கடன் பெறும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளதை முன்னிட்டு டிசம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை எம்மிடம் Sfr 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1/2 பவுண் தங்க நகை; Sfr 20 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1 பவுண் தங்க நகை; Sfr 45 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 2 பவுண் தங்க நகை அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:- K. Ananda
**Anisch Credit & Kranken kasse**
Gantrisch -Str -11 - 3052- Zullikofen (Born Swiss)
Tel:- 031-9110338 , Natel : 078-8158916 Fax:- 031-9115894

---

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார். விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி
அப்பு: 0065-975 14 941

---

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)
**Eric Rajapakse** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539. காலி வீதி. வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553877
பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

**வீட்டுப் பணிப்பெண்கள், ஆண்களுக்கான எல்லாவிதமான தொழில்கள்**

**சவுதி அரேபியா, குவைட், டுபாய், கட்டார், ஜோர்டான், லெபனான்.**

| | |
|---|---|
| இருவழிப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் | சேவைக் காலமான 2 வருடத்திற்குள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தரப்படும். |

பணிப்பெண்களுக்கு இலவசம்
**ZAHANA INTERNATIONAL**
*Manpower Supply*

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச் சீட்டு, புகைப் படங்கள், வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன்

Tel : 074-610301, 074-618502
Fax : 074-724324
Mobile: 072-426669.
E-mail : zahana@dialogsl.net
LLNO: 1845

**75/2, 2nd Floor, Armour Street, Colombo 12, Sri Lanka.**

---

## கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1943 12 17



விண்ணில் 2002 01 04

**திரு இராசரத்தினம் மகேந்திரராஜா**

(இலிகிதர்-ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம்)

திதி 25.12.2002 சஷ்டி

பாசமுள்ள அன்புத் தந்தையே எம்மை விட்டு உங்கள் உடல் பிரிந்து வருடம் ஒன்றாயினும் எம் உயிரும் உடலும் என்றும் உங்கள் கனவுகளையும், உணர்வுகளையும் சுமந்து வாழ்ந்துகொண்டிருக்கும் உங்கள் பிரிவால் தவிக்கும்

மனைவி, பிள்ளைகள்
உழுத்தம்பி, வல்வெட்டி.

---

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித் தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு. என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுன்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
**Dr.P.K.Saamy J.D.G.A. NL JP**
**Hon. Prof. (IUMA)**
**Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.**

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 26 02 1963



ஆண்டவன் அடியில் 21 11 2002

**றேமன்ட் யேசுதாசன் (பொபி-டென்மார்க்)**

"என் ஆத்மாவே! கர்த்தரைச் ஸ்தோத்திரி
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!
பரிசுத்த தந்தையே! எல்லாம் வல்ல இறைவா!
உமது கட்டளைப்படி இவ்வுலகை விட்டு
உம்மிடம் வந்திருக்கும் உமது அடியான்
றேமன்ட் யேசுதாசனின் ஆத்மாவிற்காக
உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.
ஆறுதலும் ஒளியும் அமைதியும் நிறைந்த
இடத்தை இவருக்கு அளித்தருளும்.
இவருடைய ஆன்மா யாதொரு பழுதுமின்றி இருப்பதாக!
அனைவரும் தத்தம் சம்பாவனையைப் பெற
உயிர்த்தெழும் அப் பெரிய நாள் வரும்போது
ஆண்டவரே! தேர்ந்து கொள்ளப்பட்ட
உம் புனிதர்களோடு இவரையும்
உயிர்த்தெழச் செய்வீராக!
இவருடைய பிழைகளையும் பாவங்களையும் மன்னித்து
இவர் அமர வாழ்வையும் நித்திய அரசையும் பெற்று மகிழ அருள்புரிவீராக!
ஆமென்.

**இவரின் பிரிவால் துயருறும் யேசுதாசன் குடும்பத்தினர்.**

# பம்பலப்பிட்டியில் மட்டக்களப்பு இளைஞரின் படுகொலை!

**போ**ரின் கொடுமைகளும் அதனால் விளைந்த கொடூரங் களும் அச்சமும் பீதியும் இன்னமும் முழுமையாக அகன்றுவிடாத துயரின் இருள் படிந்த காலச் சூழலிலேயே வாழ்வின் காலங்கள் ஓடிக் கழிகின்றன.

கடந்த 20 வருடகால போர்ச் சூழலில் எத்தனை கொடூரங்களை எமது மக்கள் எதிர் கொண்டார்கள். இழப்புகள்துயரங்கள் தந்த பாடங்கள் எம் கண்முன்னே இன்னும் நிழலாடிக் கொண்டிருக்கின்ற போதிலும் அந்த வரலாறு கற்றுத் தந்த பாடங்களின் 'உண்மைகளை' உணர்ந்து கொள்வதற்கும் அதனிலிருந்து மீள்வதற்கும் நம்மில் எத்தனை பேர் தயாராக இருக்கிறோம்.

உண்மைகளின் உணர்த்தல்களைப் புரிந்து கொள்வதற்கோ அல்லது அதனை ஜீரணித்துக் கொள்வதற்கோ தயங்குகின்ற சந்தர்ப்பவாதப் போக்குகள் இன்னமும் எமது சமூக மட்டத்தில் மோலோங்கிக் கிடப்பதையே அதிகளவில் காண்கின்றோம். இதுவே இன்றைய எமது சமூக மட்டத்திலான கசப்புணர்வுகளுக்கும், தமிழ்ப் போராட்ட அமைப்புகளுக்கிடையிலான முரண்பாடுகளுக்கும், முறுகல்களுக்கும், வேட்டையாடுதல்களுக்குமான பிரதான காரணமாக அமைந்துள்ளது என்ற உண்மையைக் கூட மூடி மறைக்கிறது.

*1983 கறுப்பு ஜூலை கற்றுத் தந்த பாடம் வடக்கு கிழக்குத் தமிழ்த் தாயகத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உருவாக்கிய பெரும் மாறுதல்கள் எமது மக்களிடையே ஒட்டு மொத்த உணர்வலைகளைத் தோற்றுவித்தது.* கருத்து வேற்றுமையும் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் காட்டாற்று வெள்ளம் போல் தமிழ் இளைஞர்கள் சகல தமிழ் இயக்கங்களிலும் இணைந்து பொது எதிரிக்கான போராட்டத்தில் ஒற்றுமையுடன் தியாகம் புரிந்தார்கள்.

புலிகள், புளொட், ரெலோ, ஈரோஸ், ரெலா, என்.எல்.எவ்.ரி., ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை என்ற பேதமில்லாமல் பொது எதிரியை நோக்கிச் சவால் விட்ட அந்தக் காலங்கள் ஓடி மறைந்து போயின. உட்கட்சி மோதல்களும் சகோதரப் படுகொலைகளும் தலைமைத்துவப் போட்டிகளும் அன்னிய தலையீடுகளும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தளத்தையே மாற்றியமைத்தது.

எனினும் கடந்த 20 வருட காலப் படிப்பினைகள், அனுபவங்களின் வரலாற்றுத் தேக்கங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் அச்சம், பயம், பீதி, காணாமல் போதல், துன்புறுத்தல், மிரட்டல் எனும் தளங்களை அகற்ற முடியாதவர்களாகவே உள்ளோம்.

அரசும் புலிகளும் நோர்வேயின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, துப்பாக்கிகளுக்கும் போருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான பின்னர் கூட அச்சம் தரும் பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றுப் பலர் உயிரிழந்தும் ஊனமுற்றும் காணாமல் போயும் உள்ளமை சமாதான நிகழ்வுகளில் கவலை கொள்ளத் தக்க விடயங்களே.

மட்டக்களப்பு பிள்ளையாரடியைச் சேர்நத கணேசமூர்த்தி தியாகராஜா என்ற 30 வயது இளைஞர் ஒருவர் கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த போது கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டார். இனியும் ஏனிந்தக் கொலைக் கலாசாரம் தொடரவேண்டும் என்று எம்மில் எவருக்காவது கேட்கத் தோன்றுகிறதோ?

புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்த இவர் இத்தாலி செல்வதற்காகத் கடந்த 6 மாதங்களாக குறிப்பிட்ட லொட்ஜில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் இவரின் மரணத்தையடுத்து இவரின் காதலி துக்கம் தாளாமல் நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் தலைநகர் கொழும்பில் இடம் பெற்ற 'தமிழ் இயக்க' ரீதியிலான முதலாவது படுகொலைச் சம்பவம் இதுவேயாகும். இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகப் பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ள அதேவேளை அச்சமும் பயம் மீண்டும் எழத் தொடங்கியுள்ளது.

கடந்த 20 வருட காலத்திற்கும் மேலான போராட்டப் பாதையில் உட்கட்சி மோதல்கள், சகோதரப் படுகொலைகள், தலைமைத்துவ இருப்புக்கான மோதல்கள் என்று நீளும் கொலைக் கலாசாரத்தினால் எத்தனை நூற்றுக் கணக்கானோர்ரை இழந்துள்ளோம்.

இனியாவது அந்தத் துயர் படியும் கொலைக்களத்திலிருந்து மீள்வது பற்றி ஒரு கணம் சிந்திப்போமா?

# வடக்கு கிழக்கில் மாற்று அரசியல், சமூக சக்திகளின் எதிர்காலம்?

கடந்த கால்நூற்றாண்டு கால தமிழர் சமூக அரசியல் வரலாற்றில் வேறுபட்ட கருத்துக்கள், ஜனநாயக பூர்வமான செயற்பாடுகள் பாரதூரமான அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

1970களின் நடுப் பகுதியில் மாற்று அரசியல் சமூக சக்திகளின் இருப்பின் மீது எழுந்த அச்சுறுத்தல் 1980களின் நடுப் பகுதியில் அதன் அவலட்சணமான தோற்றத்துடன் வெளிப்படத் தொடங்கியது.

1986 ஏப்ரல் மாதத்திலிருந்து சகோதர இயக்கங்கள் மீது சகிப்புக் காட்டாத தன்மை வெளிப்படையாக வெளிக்காட்டப்பட்டது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். என ஒவ்வொன்றாக இயக்கங்கள் தடை செய்யப்பட்டன. ஆயிரக் கணக்கான போராளிகளும் இப் போராட்ட இயக்கங்களை ஆதரித்த பொதுமக்களும் திட்டமிட்ட முறையில் கொன்றொழிக்கப்பட்டார்கள். பலர் சிறைபிடிக்கப்பட்டார்கள். இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது.

இந்தச் சுத்திகரிப்பு நடவடிக்கை புத்திஜீவிகள், சமானிய தமிழர்கள், முஸ்லீம்கள் என விரிவடைந்தது. சமூகம் வாய் திறக்க முடியாத மௌன இருளில் மூழ்கடிக்கப்பட்டது.

இந்தத் துயரமான - இரத்தம் தோய்ந்த-இருண்ட வரலாற்றை மறந்தவர்கள், வரலாற்று உணர்வு இல்லாதவர்கள். சமூகத்தின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டுத் தமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டவர்களின் அவல வரலாறு இங்கே சில குறுகிய தனிப்பட்ட நலன்களுக்காக இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

ஏக பிரதிநிதிகள் என்ற கருத்துருவாக்க மற்றவர்களின் செயற்பாடுகளை மறுத்தும் அவர்களை அழித்தும் ஏற்படுத்திக் கொண்ட இராணுவ மேலாதிக்க அதிகார நிலையின் உருவகமாகும்.

சரி பிழைகளுக்கு அப்பால், இராணுவ மேலாண்மையை நிலைநாட்டியவர்களுக்குக் கீழ்ப்படிவதுதான் எமது சமூகத்தில் பலரின் பரிதாப நிலையாகும். இதில் கல்விமான்கள் என்று சொல்லப்படும் பலரும் விதிவிலக்கல்ல .

இங்கு சகோதரக் கட்சிகள், இயக்கங்களை மாத்திரமல்ல, சகோதர சமூகங்களை, நட்பு நாட்டைக்கூட சகித்துக் கொள்ளத் தயாரில்லாதது மட்டுமன்றி, ஏன் சில சந்தாப்பங்களில் அவர்களால் தம்மவர்களையே சகித்துக் கொள்ள முடியவில்லை. பகைமையும், வெஞ்சினமும் மண்டிக் கிடக்கிறது. நட்புப் பாராட்டுபவர்களுடன் கூட உள்ளூரப் பகைமை உணர்வைக் கொண்டிருக்கும் இரட்டைத் தன்மை தான் நிலவுகிறது.

மற்றவர்களுடன் பகைமை பாராட்டும் தனிமனித அகங்காரத்திற்கு மதிப் பளிக்குமாறு எமது பத்திரிகைகளும் புத்திஜீவிகளும் கோருகிறார்கள்.

தற்போது தீவுப் பகுதியிலும், யாழ்ப் பாணத்திலும், மட்டக்களப்பிலும் ஈ.பி.டி.பி. கட்சியினரின் செயற்பாடுகளுக்கு எதிராகப் புலிகளின் பின்னணியில் எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படுகிறது.

இது தனிப்பட்ட ஈ.பி.டி.பி. கட்சிக்குரிய பிரச்சினை மாத்திரமல்ல, வடக்கு கிழக்கில் மாற்றுக் குரல்களுக்கு எதிரான பிரச்சினையுமாகும்.

சமகால மனித சமூக வளர்ச்சிக்கு இது எதிர் நிலையாகும்.

பகுத்தறிவுள்ள, உண்மையுள்ள, சுதந்திரத்தையும் சுய மரியாதையையும் நேசிக்கும் எந்த மனிதனும் இந்தப் போக்கிற்கு எதிராக உறுதியுடன் குரல் எழுப்ப வேண்டும்.

இல்லையேல் இப்போது சுயமிழந்து போயுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் போல் தமிழ் பத்திரிகைகள் போல் முழுச் சமூகமும் அவ்வாறே மலடாக்கப்பட்டு விடும்.

சுய மரியாதை, தன்மானத்தை நேசிக்கும் சுய தேடல் உள்ள எந்த மனிதனும் வடக்கு கிழக்கில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும்.

ஏனெனில் வெவ்வேறு கால கட்டங்களில் சமூகத்திற்காகக் குரல் கொடுத்தவர்கள் வாழ அனுமதிக்கப்படவில்லை.

> *மற்றவர்களுடன் பகைமை பாராட்டும் தனிமனித அகங்காரத்திற்கு மதிப் பளிக்குமாறு எமது பத்திரிகைகளும் புத்திஜீவிகளும் கோருகிறார்கள்.*

அரசியலாளர்கள், கல்விமான்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள் சகலரும் இதில் அடக்கம்.

ஈழப் போராட்டத்தில் மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றிய கேள்வியை மற்றைய கல்விமான்களுடன் சேர்ந்து எழுப்பியதற்காக, முறிந்த பனை என்ற நூலை எழுதியதற்காக பேராசிரியர் ரஜனி திரணகம மருத்துவக் கல்லூரி வாசலில் வைத்துக் கொல்லப்பட்டார்.

நாலு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களின் மனங்களில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்த அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய இலங்கை- ஒப்பந்தத்தைக் கொள்கையளவில் ஆதரித்ததற்காகப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னரங்கில் நின்றதால் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.

அதிகாரப் பகிர்வுக்கான தேடலில் தனது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழித்த கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களுக்குக் குரூரமான மரணம் சம்பவித்தது.

செல்வி போன்ற கவிஞர்கள், செழியன் பேரின்பநாயகம் போன்ற பத்திரிகையாளர்கள் (அவர் மட்டக்களப்பு மேயரும் கூட) இந்த உலகை விட்டே நீக்கப்பட்டார்கள்.

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

துரதிஷ்டம் என்னவென்றால் ஜனநாயகம், மனித உரிமை பற்றிப் பேசும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த எவரும் இவை பற்றிப் பேசுவதில்லை.

ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேசமயப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் இவை பற்றிப் பேசாமல் விட்டுவிட்டால் தமிழ்ச் சமூகம் இருண்ட எதிர்காலத்துக்குள் தள்ளப்படலாம். நடந்த குரூரப் பயங்கரங்கள், படுகொலைகளுக்கு எல்லாம் அங்கீகாரம் கொடுத்ததாகி விடலாம்.

தமிழ் ஊடகக்காரர்களும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும் செம்மறி ஆட்டு மந்தைகள் போல் செயற்படுகின்றார்கள். இறுதியில் பலியாகப் போவது அவர்களே.

சமாதானம் வருவது, அதிகாரப் பகிர்வு நடப்பது, இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படுவது, மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அந்தளவிற்கு ஜனநாயகம், மனித உரிமை, பன்முகத் தன்மை உறுதிப்படுத்தப்படுவதும் முக்கியமானது. ஒரு படிகூடக் குறையாத முக்கியத்துவமுடையது. மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையின் மீது கண்காணிப்பை மேற்கொள்வதும் சுதந்திரத்தில் தலையிடுவதுமான நடைமுறையை அனுமதிக்க முடியாது.

## தாகூர்


சமூகத்தைப் பின்நோக்கிய திசையில் நகர்த்துவதை அனுமதிக்க முடியாது.

கண்ணிவெடிகளை அகற்றுதல். பொருளாதார உதவிகளை வழங்கல். அகதிகளான மக்களின் மீள் குடியேற்றம் போன்ற நடவடிக்கைகளில் பங்களிக்கும் சர்வதேச சமூகம், சர்வதேச தரத்திலான ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதில் தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் கன்வர் சீபல் அவர்களும் இவற்றைத் தான் வலியுறுத்தினார். நூறுகோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய ஜனநாயக நட்பு நாடு என்ற வகையில் அவரின் இந்தக் கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

உள்ளூரில் இருந்து ஜனநாயகத்திற்கான குரல் ஓங்கி ஒலிக்காவிட்டால் அது சர்வதேச குரலாக வியாபிக்காது.

# அதிரடி அய்யாத்துரை



**இரண்டெழுத்தாருக்கு** வந்த ரேடியோ அரசாங்கத்துக்கு அடுத்த தலையிடியாகப் போகும் போலக் கிடக்கு. நோர்வேயின் அன்பளிப்பென்று முதலில் சொன்னார்கள். இல்லை இல்லை இரண்டெழுத்தார் தருவித்ததைத் தான் நோர்வே கிளியர் பண்ணிக் கொடுத்திச்சுது எண்டு இப்ப கதை மாறிப் போகுது. இதுக்கு நடுவில இந்தியாவும் தலைப்போட்டு என்ன ஏதென்று கொஞ்சம் கடுப்பாக் கேட்டிருக்கு. அது பாருங்கோ கொல்லைக்குள்ள பாட்டுப் போட்டுக் கேட்கத்தான், அடுத்த வீட்டுக்குச் சத்தம் கேட்காது என்று சமாளிப்பு சொல்லுது அரசாங்கம். இரண்டெழுத்தாருக்கு லைசன்ஸ் குடுத்த உடனே தங்களுக்கும் தரச்சொல்லி இப்ப எல்லாரும் கேட்கப் போகினம். என்னெண்டுதான் சமாளிக்கப் போகினமோ? எங்களுக்கென்ன, நாங்க புது மீற்றர் பிடிக்க றெடி.

**சங்கரியார் இப்ப** சுதந்திரமா மனசத் திறந்து கொட்டுறாராம். நெடுந்தீவுப் பிரச்சனைக்கு பிரதமருடன் நடந்த கூட்டத்தில வினாயகத்தார், செல்வத்தார், ரவியார், சந்திரனார் எல்லாரும் வாய்பார்த்திருக்க துணிவாய்ப் பேசியிருக்கிறார். யாழ்ப்பாணத்தில அமிரண்ணைக்குப் பிறந்த நாள் கொண்டாட இரண்டெழுத்தார் விடவில்லை எண்டும், பத்திரிகை விளம்பரம் கூடப் போட விடாமல் தடை செய்திட்டினம் எண்டும், பத்திரிகைக்காறரையும் தடுத்திருக்கினம் எண்டும் தன்ர மனவேதனையைப் பிரதமருக்குச் சொல்லி, இப்பிடியே தொடர்ந்தால் ஆபத்தென்று எடுத்துரைத்திருக்கிறார். கூட்டுக் கட்சிக்குள்ளேயும் சூடு சுரணை இருக்கிறது கொஞ்சம் வியப்பாத்தான் கிடக்குது. இதுக்கு நடுவில சங்கரியாருக்கு உபசபாநாயகர் பதவி குடுக்கச் சொல்லி மகேஸ்வரனார் சிபாரிசு வேற செய்திருக்கிறார்.

**அயல்நாட்டுக்காரச்** செயலர் இங்க வந்த நேரம் தங்கட கூட்டச் சந்திக்காதது தங்களை அவமதிச்ச மாதிரி எண்டும் இதுக்கு அவை சரியான விளக்கம் சொல்ல வேணும் எண்டும் வெந்த நெஞ்சோட கண்டனம் கக்கியிருக்கிறார் குருவானவர். ஆளுக்கு எங்க தெரியப் போகுது கூட்டின் முக்கிய தலைவர் ஒருவரை இந்தியச் செயலர் இரகசியமாகச் சந்திச்ச விசயம். தெரிஞ்சால் தங்களை விட்டுட்டு சந்திச்சதுக்காகத் தலைவரையெல்லோ கண்டிக்க வேண்டியிருக்கும்? ம்... மற்றத் தலைவர்கள் மட்டும் செய்யிற எல்லாத்தையும் சொல்லிக்கொண்டே செய்யினம் எண்டு கேட்டால் அதுவும் நியாயம்தான்...

**மன்னார் ஆயர்** தானே வீதிக்கு வந்து வரி வாங்கிறத நிறுத்தச் சொல்லி கோவிச்சதால, மன்னார் சென்மேரிஸ் தேவாலய வாசலில இருந்த வரி அறவீட்டு நிலையம் உடனடியாக மாற்றப்பட்டிருக்காம். தேவாலயத்தில குருவி வித்த வியாபாரியை யேசுநாதர் சவுக்கால் அடித்த செயல்போல ஆயரும் புறப்பட்டிருக்கிறார், பாராட்டத்தான் வேணும்.

**டெண்டர் சபை** தலைவர் இராஜினாமா செய்யும் அளவிற்கு வெறுப்பேறிப்போய் பிரதமரிடம் ஓடிச்சென்று முறையிட்டிருக்கிறாராம். விசயம் என்னவெண்டால் அமைச்சர் மட்டத்தில அவரைச் சுற்றி வளைச்சு தங்கள் தங்கள் பிள்ளைகள், உறவினர்களுக்கு டெண்டர்களைக் குடுக்கும்படி கழுத்தை நெரிக்கினமாம். மிஸ்டர் கிளீன் என்று ஊழல் அற்ற ஆட்சியாகப் பறைசாற்ற முயற்சிக்கும் பிரதமருக்கு இது ஒரு புதுத் தலையிடியாய் போச்சுதாம். அதுசரி தேர்தலுக்கு அள்ளிக் கொட்டினதை அப்ப எந்த வழியிலை எங்கட ஆட்கள் திருப்பி எடுக்கிறதாம்?

# ஸ்போர்ட்ஸ்

## கிரிக்கெட் வரலாற்று நாயகர்கள்

உலகப் புகழ் பெற்ற விஸ்டன் சஞ்சிகை கிரிக்கெட் வரலாற்றில் தோன்றிய மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்களை வரிசைப் படுத்தி வெளியிட்டுள்ளது.

ஒருநாள் போட்டிகளில் உலகிலேயே மிகச் சிறந்த பந்துவீச்சாளராக பாகிஸ்தான் அணியின் வசீம் அக்ரமும் மிகச் சிறந்த துடுப்பாட்டக்காரராக மேற்கிந்தியத் தீவு அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான விவியன் ரிச்சார்ட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒருநாள் போட்டிகளில் பங்கு கொண்ட மிகச் சிறந்த 50 வீரர்களின் பெயர்ப் பட்டியல் கடந்த சனிக்கிழமை லண்டனில் வெளியிடப்பட்டது.

விவியன் ரிச்சார்ட் 167 ஒருநாள் போட்டிகளில் 6721 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். வசீம் அக்ரம் 350 போட்டிகளில் பங்கு கொண்டு 488 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இலங்கையின் நட்சத்திரச் சுழல் பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு பந்துவீச்சாளர்கள் மத்தியில் 7வது இடம் கிடைத்திருக்கிறது. இலங்கை அணியின் எந்த ஒரு துடுப்பாட்ட வீரரும் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

**துடுப்பாட்ட வீரர்களின் முதல் 10 பேரும் வருமாறு:-**

1. விவியன் ரிச்சார்ட் (மே.இ), 2. சச்சின் டெண்டுல்கார், 3. பிறைன் லாரா, 4. டீன் ஜோன்ஸ், 5. மைக்கல் பெவன், 6. சௌரவ் கங்குலி, 7. மார்க் வோவ், 8. சஹீர் அப்பாஸ், 9. ஜக்கலிஸ், 10. சஹீட் அன்வர்

**பந்துவீச்சாளர்கள்:-**

1. வசீம் அக்ரம், 2. அலன் டொனால்ட், 3. வக்கார் யூனிஸ், 4. கிளான் மக்கிறாத், 5. ஜோயல் கானர், 6. சக்ளைன் முஸ்தாக், 7. முத்தையா முரளிதரன், 8. ஷேன் வோன், 9. ஷேன் போன், 10. டெனிஸ் லிலி.

---

மதகு ஒன்றின் மீது அமர்ந்திருந்த சித்ராங்கன் வீதியின் இரு பங்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்தான். நண்பர்கள் எவரையும் இன்னமும் காணவில்லை.

நேற்றைய தினம் தனித்திருந்தபோது நடந்ததை நினைத்துப் பார்த்தான்.

'அந்தப் பெண் இன்றும் வருவாளா?'

அச்சத்தோடு விரிந்து நோக்கிய அந்த விழிகளை சித்ராங்கனால் மறக்க முடியவில்லை.

அவள் யாரென்று அவனறியான். ஆனால் அவளது இணையிலா அழகு அவன் இதயம் முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது.

நேற்றைய நிகழ்ச்சியை நினைத்த போதே இன்ப உணர்ச்சிகள் அலையலையாக அவன் உடலெங்கும் ஓடின. அந்த உணர்ச்சிகளை அலசி அலசியே அவன் இன்பம் அடைந்தான்.

நேற்றும் இதுபோல உட்கார்ந்திருக்கையில் பின்புறம் வாய்க்காலினுள் 'சளக்' என்ற ஓசை கேட்டுத் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான்.

ஒரு பெண் தத்தளிப்பதைக் கண்டு ஓடினான்.

இறங்கி அவளைத் தூக்கிவிட்டான். இரு கைகளிலும் ஏந்திக் கொண்டானே தவிர, உடனே இறக்கிவிட்டுவிட முடியவில்லை.

பூக்களால் செய்த அந்தச் சிலையின் கனத்தை அவன் கைகள் உணரவில்லை. நீரில் நனைந்த உடைகளோடிருந்த அவள் மேனி குளிர்வதற்குப் பதில் அவனைச் சுட்டது.

கரைக்கு வந்த பிறகும் தன்னைக் கீழே இறக்கி விடாது கைகளில் சுமந்திருந்த அந்த வாலிபன் மனநிலையை ஊகித்துக் கொண்ட அவள் மனம் வெட்கத்திலும் பெரும் சங்கடத்திலும் சிக்கிக் கொண்டது.

அதன் விளைவாகச் சற்று உடலை அசைத்த காரிகை அவனை எச்சரிக்கும் விதமாக 'உம்' என்று முனகவும் செய்தாள்.

அந்த "உம்" உஷ்ணமாக ஒலித்ததா, இன்பமாக ஒலித்ததா என்று விவரிக்க இயலாதிருந்தது.

அவள் முனகலால் சுயநினைவுக்கு வந்த சித்ராங்கன் அவளை மெல்ல இறக்கிவிட முனைந்தான்.

அந்த முயற்சியில் அவளது பூவுடல் தனது உடலைத் தழுவிக் கொண்டு சரிந்தாலும், அசப்பில் பட்டுவிட்ட அவள் கடினமான மார்ப்புப் பிரதேசத்தாலும், வலது கையில் இழைந்து நெளிந்த சிற்றிடையின் பட்டுச் சதையாலும், தனது கால்களோடு சேர்ந்து இறங்கிய அவளது அழகுக் கால்களின் திண்மையாலும், சரியும் போது அவன் கன்னத்தில் லேசாக விசிறியும் தவழ்ந்தும் இன்ப ஜாலம் செய்த குழல்களினாலும், அவளைத் தாங்கிப் பிடித்து இறக்கிவிட்ட போது சுற்றிவிட்ட அவன்

# உள்ளத் துறையில் உதித்த மலரே

கைகளில் மோதிய அவளது பின்னழகுகளின் எழுச்சியாலும் உணர்ச்சிகளை அறவே பறக்க விட்ட சித்ராங்கன், இறக்கி விட்ட பிறகும் அவளைச் சுற்றியிருந்த தன் கையை எடுக்காமலே நின்றான்.

அவள் மனோநிலையும் விவரிக்க இயலாதிருந்தது. அவ்வளவு நெருக்கத்திலும் தன் மீது பட்டும் படாமலும் எச்சரிக்கையாக நின்ற வாலிபனின் பண்பைப் பாராட்டினாலும், உள்ளே



அவளது துஷ்ட மனம், எதற்கு இத்தனை பயப்படுகிறான் இவன்?' என்றும் கேட்டுக் கொண்டது.

சித்ராங்கன் நிலைமை மிகப் பரிதாபமாக இருந்தது. அவளின் இடைப் பகுதியிலிருந்து விலகாமலிருந்த கையை எடுப்பதற்கு அவள் மற்றுமொரு முறை 'உம்' கொட்ட வேண்டியிருந்தது.

கையை எடுத்துவிட்டாலும், சற்றைக்கு முந்திய அசைவுகளின் போது அவன் மார்பிலும் ஏனைய இடங்களிலும் பட்டுவிட்ட கவர்ச்சிகள் அவனைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தன.

அவள் மேனியிலிருந்து பார்வையை அகற்ற மாட்டாமல் பரிதவித்து நின்றான் சித்ராங்கன்.

நீரில் நனைந்துவிட்ட அவள் வெள்ளையாடைகள் உருண்டு திரண்ட அவள் உடற்பகுதிகளை சிறிதும் பெரிதுமான பல தங்கக் கட்டிகளாகக் காட்டிக் கொண்டிருந்தன.

இருவரும் மௌனமாகவே நின்றிருந்தார்கள். மௌனம் உதடுகளுக்கு மட்டும்தான், உணர்ச்சிகளுக்கல்ல. இருவரினுள்ளேயும் உணர்ச்சிகள் பேரிரைச்சல் போட்டன.

சட்டென்று விலகி ஓடிவிடாமல், அவனுக்கு நன்றி சொல்வதற்காகவோ என்னவோ தயங்கி நின்ற அந்த நேரிழை, பேச்செழாமல் அவனைப் பார்த்தபடி நின்றாள்.

இரு சமுத்திரங்களைச் சுருட்டி முகத்தில் வைத்துக் கொண்டிருந்த அந்தப் பாவையின் பார்வையில் கட்டுண்டு நின்றான் சித்ராங்கன்.

அவளுடைய கண்கள் மூலமாக அவளது உயிரின் ஒரு பகுதியே தன் உடலுக்குள் பாய்வது போன்ற பிரமை அவனுக்கேற்பட்டது.

'ஏன் இப்படிப் பார்க்கிறாள்? இது என்ன அவஸ்தை நிலை? இவள் என்னைக் குளிப்பித்து மூழ்கடிக்கும் நீரா? எரிந்து நீறாக்கும் நெருப்பா? வருடி விழித்தும் காற்றா? புதைத்து மறைத்துவிடும் நிலமா? பறப்பித்து அழிக்கும் வானமா? யார் இவள்? பஞ்ச பூதங்களுமாகி என்னைப் பதைக்க வைப்பவள்?'

சித்ராங்கன் உடல் போதையுற்றுச் செயலிழந்து புளகித்துத் தவித்து. விழித்து நிலைத்த கண்கள் பார்வையிழந்து பரிதவித்தன.

எதுவும் பேசாமலே அவள் போய்விட்ட பிறகும் சில நிமிடங்கள் எதையும் உணர மாட்டாதவனாக நின்றிருந்தான்.

சித்ராங்கனின் நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள்.

"என்னடா மதகின் மேல் ஒரு கனவு... வாய்க்கால் தேவதையா?" என்று சிரித்தார்கள்.

சித்ராங்கன் சுற்றி அவர்களைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்புடன் தலைகுனிந்தான்.

"என்னடா மதுவின் மயக்கமா?" என்றான் ஒருவன்.

"இல்லை... நேற்று மதுவை விட மோசமான ஒன்றை அருந்தியிருக்கிறான். அந்த மயக்கம்..." என்று இன்னொருவன் சிரித்தான்.

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் அழகானவை என்று இதுகாலவரை நினைத்திருந்த எல்லாவற்றையுமே நேற்று அவள் தோற்கடித்தாள்!" என்று கனவில் பேசுபவனைப் போல சன்னமான குரலில் சொன்னான் சித்ராங்கன்.

"அடடா! அடடா!" என்று எல்லோரும் நையாண்டி மேளம் வாசித்தார்கள்.

"தங்கம் போல் ஜொலித்த உருவமடா... அதில் காதல் மிதக்கும் கண்கள்... மையுண்ட அந்தக் கண்களின் வனப்பு மிகுந்த அந்தப் பார்வையை ஒரு கணமேனும் நீங்கள் பார்த்திருந்தால் என் மயக்கத்தை இப்படிப் பழித்துரைக்க மாட்டீர்கள்..."

**வண்டுவாய் திறந்த**
**வாங்குகழி நெய்தற்**
**போதுபுறங் கொடுத்த**
**உண்கண்**
**மாதர் வாண்முகம்**
**மதை இய நோக்கே.**

(அகம்: 130:12-14)

இலக்கிய நயம் · தகுவத முருகவேள்

---

# சிந்தியா

பதில்கள்

★ **ஏப்ரல் மாதத்தில்..?**

வாலிதாசன், கரம்பை.

ஆரம்பத்தில் அவ்வளவாக வெய்யில் இல்லை. அழகான சினேகாவும் ஸ்ரீகாந்தும்... பன்னீர்செல்வத்தின் படப்பிடிப்பு குளுமை. வெங்கட் பிரபு, கருணாஸ் உள்ளிட்ட கல்லூரி வளாகம் ஈரலிப்பு ஜொள மழை! (அதலும் 'ரேப் ரென்' கலக்கல் மேலும் ஜில்ஜில்) கடைசிவரை காதலைச் சொல்லாமல் கடைசியில் யாரோ ஒரு அப்பாவி மாப்பிள்ளையைக் கல்யாண மேடை வரை கொண்டுவந்து இருத்திவிட்டுக் காதலர்கள் சேர்ந்து கொள்ளும் அறுதப் பழசான அந்த தமிழ் சினிமாத்தன முடிவில் ஒரே வெக்கை!

★ **நாகப்பா கொலைக்குப் பிறகு வீரப்பன்?**

ரிப்கா பாரிஸ், நுவரெலியா.

முடிவு நெருங்குகிறது.

★ **வைரமுத்து வரிகளில் உங்களுக்கும் மயக்கமுண்டா?**

பி. விக்னேஸ்வரன், ஹட்டன்.

வாழும் காலத்திலேயே பேரரசர், பெருந்தலைவர் என்று தாங்கள் அழைக்கப் படுவதை அனுமதிப்பவர்களிடம் எனக்குப் பயம்தான் உண்டு.

★ **அழகான பெண்கள், தமக்கு வரக்கூடிய கணவன் அஜித், விஜய் போன்று இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனரே ஏன்?**

எம்.எச்.எம். ஹமீம், கனமூலை.

அதுதான் அழகான பெண்கள் என்கிறீர்களே... தங்களுக்கு கணவனாக வரப்போகிறவர் உங்களைவிட அழகாயிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதை ஏன் தப்பாய் நினைக்கிறீர்கள்!

★ **வடக்கில் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் கட்சிகளைத் தவிர வேறு கட்சிகள் இருக்கக் கூடாது என்று மக்கள் விரட்டுகிறார்களே?**

க. கமால்தீன், ஏறாவூர்-03.

ஜோர்ஜ் ஆர்வெல்லின் "விலங்குப் பண்ணை" என்ற நாவல் 1946ல் வெளியானது. க.நா.சு. மொழிபெயர்ப்பில் தமிழிலும் வந்தது. அதில் ஸ்நோபால் என்ற பன்றியை, பண்ணையை விட்டு விரட்டுவதற்காகச் சொல்லப்படும் காரணங்கள் எல்லா விரட்டுதல்களுக்கும் பொதுவானதாகச் சொல்லப்படக் கூடியவைதான்.

விலங்குப் பண்ணையின் பிரச்சாரகரான ஸ்க்வீலர் என்ற பன்றி சொல்கிறது: "தோழர்களே, தலைமைப் பதவி என்பது இன்பம் பயப்பது என்று நீங்கள் தவறுதலாக எண்ணக் கூடாது. அது மிகவும் சிரமமான பொறுப்பு. எல்லா விலங்குகளும் சரிநிகர் சமானமானவை என்பதைத் தோழர் நெப்போலியனை விட உறுதியாக நம்புபவர்கள் வேறு யாருமில்லை. உங்கள் பிரச்சினையை அலசி முடிவுகட்ட உங்களையே விட்டுவிடத் தலைவர் நெப்போலியன் தயார்தான். ஆனால் நீங்கள் தவறான தீர்மானம் செய்து, முடிவு கட்டிவிட்டால் என்ன செய்வது? கட்டுப்பாடு, உறுதியான கட்டுப்பாடு! அதுதான் இப்போது நம் முக்கிய கொள்கை. தோழர்களே, தவறி ஒரு விசயத்தில் ஒரு அடி எடுத்து வைத்துவிட்டாலும் உடனே நமது எதிரிகள் நம் மேல் பாய்ந்து பிடித்துக் கொண்டுவிடுவார்கள்.

தலைவரை மதிக்கும் தன்மைதான் நமது முதல் தேவை. அதற்கு எதிராகச் சிந்திப்பவர்களை நமது பண்ணையில் விட்டுவைத்திருப்பது எதிரிக்குத்தான் அனுகூலமாகும்.

நமது ஒற்றுமையைக் குலைத்து நம்மை அழித்துவிடக் காத்திருக்கிறான் எதிரி..."

பிரச்சாரகர் பேசும் போது மற்றைய மிருகங்கள் பேசுவதும் விவாதிப்பதும் வெளியே கேட்காமலிருப்பதற்காகச் சில ஆடுகள் உரத்த குரலில் "நாலுகால் நல்லது: இரண்டு கால் கெட்டது" என்று பாடிக் கொண்டிருக்கின்றன. போதாததற்கு ஒன்பது வேட்டை நாய்கள் பிரச்சாரகரின் இரு பக்கத்திலும் நின்று கொண்டு மற்ற விலங்குகளைப் பார்த்து உறுமிக் கொண்டிருக்கின்றன.

எது எப்படி நடந்தாலும் எதிரிகள் திரும்பி எம்மிடத்திற்கு வருதல் என்கிற விசயம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம் என்று அந்த விலங்குகள் அறிந்திருந்தன. அதற்கு, இதெல்லாம் அவசியம் என்று தலைவர் நினைக்கிறார் என்றால் அதை எதிர்க்காமலிருப்பதே சரி என்று எல்லா விலங்குகளும் நினைத்துக் கொள்கின்றன.

★ **இன்று ஒரு பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் எவை?**

ந. வினோதிகா, கூனித்தீவு-09.

உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிய வேண்டும். அதற்கு உங்கள் வாசகர்களை உசார் மடையர்களாக வைத்திருக்க வேண்டும். உங்கள் எழுத்தில் அவர்கள் வேண்டியளவு புல்லரிப்பைப் பெற்றுக் கொண்டு பதிலுக்குப் பாராட்டைத் தந்துகொண்டிருப்பார்கள். மேலும் மேலும் உசாரேற்ற உங்களுக்கு மேலும் மேலும் பாராட்டுகள் கிடைக்கும்.

அதை விடுத்து, சமூகத்தின் நன்மை தீமை பற்றிய திறந்த விவாதத்தையும், பரபரப்பற்ற அடிமனதுக் கேள்விகளையும் வெளிப்படையாக்கும் விதமாக எழுதக்கூட வேண்டாம். மறைந்திருக்கும் அந்த எண்ணங்களை மனதின் மேற்தளத்திற்குக் கொண்டு வந்தாலே... அவ்வளவுதான், தகுதியனைத்தையும் இழந்துவிடுவீர்கள்.

★ **சிந்தியா, எவரைப் பார்த்தாலும் வெறுப்பாக இருக்கிறது. ஒருவரும் சரியில்லை என்று தோன்றுகிறது. என்ன செய்யலாம்?**

வி. சடகோபன், வவுனியா.

தவறு உங்களிடம்தான் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். குறைந்த பட்சம் வீட்டிலுள்ளவர்களின் குற்றங் குறைகளையாவது பெரிதுபடுத்தாமல் இருக்கப் பாருங்கள். இல்லையென்றால் வீட்டிலிருந்து வெளிக்கிடும்போது கண்ணாடிக்கு முன்னால் நின்றுதான் கையசைத்துவிட்டுப் புறப்பட வேண்டும்.

★ **கமலஹாசன் கஷ்டப்பட்டு நடித்துப் பெறும் பெயரை ரஜினிகாந்த் அலட்டிக் கொள்ளாமல் தட்டிக் கொண்டு போய் விடுகிறாரே..?**

எஸ்.எம்.எம். பாஹிம், மாவனல்லை.

அந்தப் பெயரை வைத்துக் கொண்டு அவர் படும் அல்லலைப் பார்க்கிறீர்கள் தானே! பா.ம.க. தலைவர் ஒரு பக்கம், பாரதிராஜா ஒரு பக்கம், அரசியலில் காலை வைக்கவும் முடியவில்லை, ஆன்மீகம் என்று ஒதுங்கவும் முடியவில்லை. அமெரிக்காவுக்கும் இமயமலைக்கும் பறந்து பறந்து பார்த்தாலும் டென்ஷன் குறையும் வழியைக் காணோம் என்று தவிக்கிறார் மனிதர். முத்த நடிகரைப் பாருங்கள்! 'ஒன்றாய் வருகிறீர்கள் போகிறீர்கள்... சிம்ரனும் நீங்களும் ஒன்றாகவேதான் வசிக்கிறீர்களா?' என்று கேட்டால், சிரித்தபடியே 'இனி ஒரு பெண்ணைத் திருமணம் செய்யும் மனநிலையில் நான் இல்லை' என்று தெனாவெட்டாய்ப் பதில்சொல்லிவிட்டு அன்பே சிவமாய்ப் போய்க்கொண்டிருக்கிறார்.

★ **ஒருவரின் தாய்மொழி எப்படித் தீர்மானிக்கப்படுகிறது?**

சுகுமாரன் ரஜனி, தலவாக்கலை.

ஒரு குழந்தை எந்த மொழியால் தன்னை மனிதப் பிறவியாக அறிகிறதோ அதுவே அதன் தாய்மொழி.



# தகவல் பெட்டி



## சிறையில் வாடும் சிறுசுகள்

தாய்மார் குற்றவாளிகளாக ஆக்கப்பட்ட பின்னர் அவர்களுடன் சேர்ந்து சிறைக்குச் செல்லும் பரிதாபம் ஆசிய நாடுகளில் ஏராளமான சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் இவ்வாறு சிறைகளில் பிஞ்சுக் குழந்தைகள் நூற்றுக்கணக்கில் பரிதவிக்கிறார்கள். தாய்மார் நீண்டகால சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதும் குழந்தைகளைப் பராமரிக்கப் போதிய வசதி இல்லாத பட்சத்தில் அக் குழந்தைகளைச் சிறைச்சாலை நிர்வாகம் கையேற்கிறது.

இந்தப் படம் இந்தியாவின் போபால் நகரில் உள்ள மத்திய சிறைச்சாலையில் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ம் திகதி எடுக்கப்பட்டது. சிறையில் இருக்கும் சிறுவர்கள் இரண்டுபேர் உணவுக்காகக் கை நீட்டுகிறார்கள்.




## வெல்கம் லேடி

ஜப்பானின் ஹொன்டா மோட்டார் நிறுவனம் அதி நவீன முறையில் செயற்றிறன் மேம்படுத்தப்பட்ட ரோபோக்களைத் தயாரித்து விநியோகிக்கிறது.

இந் நிறுவனம் தயாரித்துள்ள அதி நவீன ரோபோக்களை அலுவலகங்களில் வரவேற்பாளராகவும் பயன்படுத்த முடியும்.

இத்தகைய ரோபோக்களை அறிமுகம் செய்யும் பொருட்டு கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிற்கு வருகைதந்த அலுவலக ஊழியர் ஒருவரை ரோபோ கைலாகு கொடுத்து வரவேற்கிறது.

உலகம் முழுவதிலும் இத்தகைய சிறிய ரக ரோபோக்களுக்குப் பெருமளவு கிராக்கி நிலவுகிறது. ■



இத்தகைய நீளமான பல காதல் கடிதங்களை இந்த ஜோடி பரிமாறிக் கொண்டதாக தாய் பொலிஸில் தெரிவித்தார்.

## ஒரு கடிதம் எழுதினேன்...

இலங்கைப் பொலிஸ் அதிகாரிகள் சிலர் மிகவும் ஆர்வத்துடன் ஒன்று சேர்ந்து வாசிப்பது அதிமுக்கியமான இரகசிய ஆவணம் ஒன்று என்றா நினைக்கிறீர்கள். இல்லை. இதுவொரு காதல் கடிதம்.

தென்னிலங்கையின் களுத்துறை பொலிஸ் நிலையத்திற்கு ஒரு யுவதியின் தாயினால் ஒப்படைக்கப்பட்ட 10 அடி 11 அங்குலம் நீளமான காதல் கடிதம்தான் இது.

அந்தத் தாயின் 16 வயது மகள் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு மத்தியில் தனது காதலனுடன் ஓடிப்போய் விட்டாள். அவளைத் தேடித்தருமாறு தாய் முறைப்பாடு செய்ய பொலிஸுக்குச் சென்றபோது இந்தக் காதலுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் இந்த நீளமான ஆதாரத்தை ஒப்படைத்துள்ளார் தாய்.




## நிர்வாணப் போராட்டம்

உலகம் முழுவதிலும் எதற்கெல்லாமோ ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். போராட்டம் நடத்துகிறார்கள். இந்த அவுஸ்திரேலிய மொடல் அழகியின் போராட்டம் யானைகளின் நலன் காப்பதற்காக நடத்தப்படுகிறது.

தாய்லாந்து நாட்டின் சுற்றுலாத் தொழிற்துறையினர் யானைகளைத் தவறான முறையில் பயன்படுத்துவதாகச் சுட்டிக்காட்டி அவற்றை நிறுத்த வேண்டும் எனக் கோரி சுலோகங்களை ஏந்தியவண்ணம் நிர்வாணமாகப் போராட்டம் ஒன்றை நடத்தினார் இமோஜன் பெய்லி என்ற இந்த அவுஸ்திரேலிய மொடல். இவரது போராட்டத்திற்கு ஆதரவு இருக்கிறதோ இல்லையோ இவரை இந்தக் கோலத்தில் பார்ப்பதற்கு ஏகப்பட்ட சனம் குவிந்தது.

## வித்தியாசமான வரவேற்பு

நியூஸிலாந்து நாட்டில் ஏராளமான கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுள் பழங்குடியினரும் அடங்குகின்றனர். சில சமூகத்தினரின் பழக்கவழக்கங்கள் விசித்திரமானவை.

நியூஸிலாந்துக்கு நான்குநாள் விஜயம் மேற்கொண்டு தலைநகர் வெலிங்டனைச் சென்றடைந்த ஜப்பான் இளவரசர் நர்ஹிடோவை மாவோரி முறைப்படி வரவேற்கிறார் வெலிங்டன் கலாசார மையத்தின் தலைவர் டோனாஸ் மஸாகோ. இதுபோன்று மேலும் பல வித்தியாசமான வரவேற்புக்கள் நியூஸிலாந்தில் வாழும் வேறுபட்ட சமூகங்களிடையே காணப்படுகின்றது.



## உத்தரவுக்காக காத்திருப்பு

அமெரிக்காவிடம் உள்ள பெருமைக்குரிய போர் தளபாடங்களில் இந்தக் கப்பலும் ஒன்று. யூ.எஸ்.எஸ்.எப்ரஹாம் லிங்கன் என்பது இதற்குப் பெயர்.

அணு ஆயுத வசதி கொண்ட இந்தக் கப்பல் 333 மீட்டர் நீளமானது.ஒரே நேரத்தில் 85 விமானங்களை நிறுத்தி வைக்கக்கூடிய அளவு பாரிய விமானத் தளம் ஒன்றை இந்தக் கப்பல் கொண்டிருக்கிறது. தற்போது ஈராக்கிற்குச் சமீபமாக வளைகுடா கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கப்பலின் பணியாளர்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுகிறார்கள். ஈராக் மீது தாக்குதல் தொடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியின் உத்தரவு கிடைக்கப்பெற்ற மறுகணமே இந்தக் கப்பல் அதன் கோர முகத்தைக் காட்டத் தொடங்கும்.





ஷாம்-மீரா ஜாஸ்மின்
படம்: பாலா

## சூர்யா-ஜோதிகா விரைவில் திருமணம்?

கோலிவுட்டில் ரொம்ப நாளாகவே உலவிக் கொண்டிருந்த ஒரு காதல் கிசுகிசு வெகு சீக்கிரம் கல்யாணச் செய்தியாகப் போகிறது.

சூர்யா-ஜோதிகா இருவருக்கும் 'பூவெல்லாம் கேட்டுப் பார்' படத்தில் ஆரம்பித்த காதல் அது. ஆனால், இருவருமே அதை மறந்து வந்தனர். நாங்க நல்ல பிரண்ட்ஸ் என்று மட்டுமே கூறி வந்தனர்.

ஆனால் இப்போது இருவரும் சென்னையில் உள்ள ஒரு ஹோட்டலில் அடிக்கடி சந்தித்துக் கொள்கிறார்களாம். நெருங்கிய நண்பர்களிடம் தனது காதல் உண்மைதான் என்று சூர்யா கூறிவிட்டாராம். முதலில் எதிர்ப்புத் தெரிவித்த சூர்யாவின் அப்பா சிவகுமாரும் ஒகே சொல்லிவிட்டாராம்.

ஜோதிகா சைடில் எதிர்ப்பு இருக்காது என்கிறார்கள். இதனால் சீக்கிரமே டும் டும்தான் என்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

ஆனால், மற்றவர்களிடம் குறிப்பாக நிருபர்களிடம் தனது காதலை இன்னும் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் இந்த இருவரும்.

## எதற்கும் காயத்ரி ஜெ...

காயத்ரி ஜெயராம் ... நிறைய தலை காட்டிவ... என்றாலும் ஓ.கே. ... வந்துவிட்டார்.

நடன நடிகருடன் ... கொண்டிருந்த ... அதைத் தூக்கிப் போட்டு... தேடத் தொடங்கியுள்ளார்...

சின்ன வேடமாக ... என்று கூறி வாய்ப்பு...

தனது முயற்சியி... 'வசீகரா'வில் ஒரு பாட... காயத்ரி ஜெயராம் ... நட்பைப் பெற்றதால் ...

படம் முடிவதற்கு ... வேண்டும் என்ற வேக...

அதேபோல், ... இளம் ஹீரோக்களி... போதைக்கு முக்கிய...

அப்பத்தான் நிறை... முடியும் என்பது ...

## மினி சினி

- ★ இரவு பதினொரு மணிக்கும் தயங்காமல் உடற்பயிற்சி செய்கிறார் கிரண். அப்படி இருந்தும் தொப்பை குறையாதது அவருடைய குற்றமா? அதன் குற்றமா?
- ★ 'விசில்' படத்தில் நட்பே.. நட்பே... என்ற பாடலைப் பாடியதைத் தொடர்ந்து, நிறையப் படங்களில் பாடுவதற்கு ரஜினி மகள் ஐஸ்வர்யாவிடம் கேட்கிறார்களாம். ஆனால் தனி இசை அல்பம் தயாரித்து வெளியிடுவதில் மும்முரமாக இருக்கிறார் ஐஸ்வர்யா!
- ★ 'என் மன வானில்' படத்தில் சின்ன ரோலில் நடித்த தீபிகா இப்போது தீபு ஆக பெயரை மாற்றிக் கொண்டு விட்டார். 'அன்பு' படத்தில் இவர்தான் ஹீரோயின்.
- ★ லைலா தனது கால்ஷீட்களை அவரே பார்த்துக் கொள்ளத் தொடங்கியுள்ளார். இதற்கு முன்பு அதைப் பார்த்துக் கொண்டிருந்த மனேஜர் ரொம்பவும் குழப்பம் செய்து விட்டதால் இந்த மாற்றமாம். அவரால்தான் பட வாய்ப்புகளை இழந்து மும்பைக்குப் போக நேர்ந்ததாகச் சொல்கிறார் பாலாவுக்காகத் திரும்பி வந்த லைலா.
- ★ 'த்ரீ ரோஸஸ்' படத்தில் லைலாவின் நைனா வேடத்தில் டைரக்டர் மனோ பாலா நடிக்கிறார்.
- ★ தன்னை அறிமுகப்படுத்திய ராஜ்கிரண் மிகவும் வேண்டிக் கொண்டதால், 'செட்டிநாடு ஹவுஸ்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்டுள்ளாராம் மீனா. படத்தின் பெயர் தமிழகத்தின் முக்கியமான செட்டிநாட்டுத் தொழிலதிபர் ஒருவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியதாம். ஏ.வி.எம். சரவணன் மூலமாகப் படத்தின் தயாரிப்பாளரை அணுகிப் பெயரை மாற்ற வைத்துவிட்டாராம்.
- ★ இன்னும் சிம்ரனுக்கு மவுசு குறையவில்லை. கையில் பத்துப் படங்கள் இருக்கிறதாம். அதுவும் ஒரு பாடலுக்கு மட்டும் ஆடுவதில் அவர் இறங்கிவிட்டதால் அவர் காட்டில் மழையோ மழை.
- ★ 'துள்ளுவதோ இளமை' பட நாயகன் தனுஷுக்குப் படங்களுக்குக் குறைவில்லை. 'காதல் கொண்டேன்' படத்தைத் தவிர பல வாய்ப்புகள் தேடி வருகின்றன.
- ★ 'என்ன விலை அழகே' படத்தில் நடிக்கிறார் பாலிவுட் அழகுப் புயல் அமிஷா படேல். சாதாரணமாக ஒன்றரைக் கோடி சம்பளம் வாங்கும் இவர், இந்தப் படத்துக்கு மட்டும் ஐம்பது லட்சம் சம்பளத்துக்கு ஒப்புக் கொண்டிருக்கிறாராம்.

## இணையத்தளத்தில் பெண் தேடுகிறார் பிரசாந்த்

'வலை'வீசி தேடி வருகிறார்கள் என ஒரு பேச்சுக்காகக் கூறுவதுண்டு. உண்மையிலேயே தனக்கேற்ற பெண்ணை வலைத்தளத்தில் வலை வீசித் தேடி வருகிறார் நடிகர் பிரசாந்த்.

தற்போது தமிழ் மேட்ரிமோனியல் இணையத் தளத்தில் பெண் வேண்டும் என்று தலைப்பிட்ட பிரசாந்தின் பயோடேட்டா உலா வந்து கொண்டிருக்கிறது.


தனக்குரிய பெண் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென நிபந்தனையும் விதித்துள்ளார் பிரசாந்த். பெண்ணுக்கு 20-27 வயதுக்குள் இருக்கவேண்டும். உயர்ந்த எண்ணமுடையவளாகவும் குடும்பத்தினரிடம் அன்பு செலுத்துபவளாகவும் இருக்க வேண்டும்.

நல்ல பர்சனாலிட்டி மற்றும் பார்ப்பதற்கு அழகாக இருத்தல் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார் பிரசாந்த். மேலும் நல்ல குடும்ப பாரம்பரியம் இருத்தல் வேண்டும் என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

தற்போது 'ஜெய்' படத்தில் பிரசாந்த் நடித்து வருகிறார். 'ஜெய்' பட ரிலீஸுக்குப் பிறகு பிரசாந்துக்கு திருமணத்தை முடித்துவிட வேண்டும் என அவரது பெற்றோர்கள் தீர்மானித்துள்ளார்கள். அதற்காகத்தான் இணையத்தளத்தில் பெண் பார்க்கும் படலம். நெட்டில் லாக் ஆன் செய்து நீங்களும் அப்ளிகேஷனைப் போட்டு வையுங்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் அடித்தால் நீங்கள் கூட மிஸஸ் பிரசாந்த்தாகலாம்.

## ப்ரியாமணியின் பிஸி!

கண்களால் கைது செய் அறிமுக நாயகி ப்ரியாமணியைத் தேடி நிறைய வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் 'ரோமியோ ஜூலியட்' படத்தை மட்டுமே ஒப்புக் கொண்டு இருக்கிறார். சமீபத்தில் ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்க, மணிபாரதி இயக்கத்தில் ஷாம் கதாநாயகனாக நடிக்கும் படத்தில் நடிக்க அவரது கால்ஷீட் கேட்டனர். அம்மணிக்கு ஆசை என்றாலும், தேதிகள் இடிக்கிறதாம், புலம்புகிறார். இப்போது 'ஆசை ஆசையாய்' ஷர்மிலி நடிக்கிறார்.



பாயல்
படம்: இளசு புதுசு ரவுசு

## சினிமா...

## மும்தா...

## எதி...

## 'ஜெய்' ரிலீசுக்குப் பின் பிரசாந்த் திருமணம்

என்னுடைய திருமணம் எப்போது நடக்கும்? எந்தப் பெண்ணுடன் நடக்கும்? எங்கே நடக்கும் என்று எனக்கு மட்டுமல்ல யாருக்கும் தெரியாது. அது என் தாய், தந்தைக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்று புதிர் போட்டுப் பேசும் பிரஷாந்த், என்னுடைய திருமணப் பரிசாக நான் நடிக்கும் 'ஜெய்' படம் அமையும் என்று ஒரு சின்ன க்ளூ கொடுத்தார். ஜெய் எப்போது ரிலீஸ் என்பதை அவரது தந்தை தியாகராஜன்தான் சொல்ல வேண்டும்.



ஜீவா-ஷர்மிலி
படம்: ஆசை ஆசையாய்

## சிரிப்பை மட்டும் நம்பவில்லை

சிரிப்பு மட்டுமே லைலாவிடம் உள்ளது என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரிக்கிறார். நான் சிரிப்பை மட்டுமே நம்பவில்லை. 'பெப்சி'யில் வித்தியாசமான கேரக்டர். 'த்ரீ ரோசஸில்' ஆக்ஷன், சண்டை என இன்னொரு டைப். 'பிதா மகனில்' மற்ற கேரக்டர்களிலிருந்து வித்தியாசப்படுகிற ஜோவியான கிராமத்துப் பெண்ணு கேரக்டர். நடிப்பு விசயத்தில் வித்தியாசம் காட்டத்தான் ஆசைப்படுகிறேன் என்று கூறுகிறார் லைலா.

## மீனாவின் நம்பிக்...

வில்லன் படத்தை அஜித் மட்டுமின்றி ... ரொம்பவே எதிர்பார்க்கிறார். கிட்டத்... பெயரை இரசிகர்கள் மறந்துவிட்ட ... தில் இந்தப் படம் வந்துதான், தான் ... சினிமாவில் நடித்துக்கொண்டிருப்பதை ... படுத்த வேண்டும் என்று நினைக்கிறா... கேற்ப கே.எஸ்.ரவிக்குமாரும் ஓரளவு ... நடிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தி ... திருப்பதால் தன்னைப்பற்றி எழுந்த ... கிசுகிசுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து ... இன்னமும் தான் நீண்ட காலம் நடிக்க... தாகக் கூறி வருகிறார்.

## வேகமாக வளரு... 'மனசெல்லாம்'

சில பிரச்சினை காரணமாக 'மன... படத்தின் படப்பிடிப்பினை தாமதம் செ... இயக்குநர் இப்போது விறுவிறுப்பா... வருகிறார். ஏற்கனவே ஹீரோயினை மா... தயாரிப்பாளருக்கு நட்டம் ஏற்பட்... இனியும் தன்னால் எந்தவித இடையூறும் ... ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் ... இருப்பவர் ரமணாவைத் தொடர்... படத்தை வெளியிட்டுவிட வேண்டும் என்... செயற்பட்டு வருகிறார். இந்தப் படத்தி... தும் ரொம்ப எதிர்பார்த்திருக்கிறார்.

## ...தயார் ஜெயராம்

...ம் தமிழ்ப் படங்களில் ...ாக என்ன வேடம் ... அளவுக்கு இறங்கி ...காலமாக முறைத்துக் ...ஜெயராம் இப்போது ...டி. பட வாய்ப்புகளைத் ...ந்தால் கூட போதும் ... தேடி வருகிறார். ...ாக விஜய் நடிக்கும் ...டான்ஸ் ஆடியுள்ளார் ...ர் செல்வபாரதியின் ...ாய்ப்புக் கிடைத்ததாம். ...யையும் கவர்ந்துவிட ...ந்திருக்கிறாராம் கா.ஜெ. ...த், பிரசாந்த் என ...ளுக்கு மட்டுமே இப் ...தரப்போகிறாராம். ...ங்களில் தலை காட்ட ...ளிப்பு!

## இசைப் போட்டி

பாரதிராஜா இயக்கும் 'ஈரநிலம்' படத்திற்கு மனோஜின் சிபாரிசு காரணமாக சிற்பிதான் இசையமைப்பதாகக் கூறப்படுகிறது. அதேசமயம் அவரைப் பிடிக்காத சிலர் அந்த இடத்தில் வேறு இசையமைப்பாளரை இணைத்துவிட வேண்டும் என்று முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இந் நிலையில் அந்தப் படத்திற்கான கதை விவாதம் உட்பட பாடல் கம்போஸிங் கூட நடைபெற்று வருகிறதாம். ஆனால் வெளியில் பேசப்படும் இந்த இசையமைப்பாளர் பிரச்சினையானது தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. அந்தக் கம்பெனியும் விசயத்தைப் பளிச்சென்று வெளியில் சொல்லாமல் மறைமுகமாக வைத்திருக்கிறார்கள்.

## மீரா ஜாஸ்மினின் பொறுமை

'ரன்' மீராஜாஸ்மின் நல்ல நடிகை என்கிற அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டார். அதோடு முதல் படமே வெற்றிப் படம் என்பதால் அடுத்தடுத்து அவரது கால்ஷீட்டிற்காகக் கம்பெனிகள் அலைந்து கொண்டிருக்கின்றன. என்றாலும் படங்களுக்காக விழுந்தடித்துக் கொண்டு அட்வான்ஸ் வாங்க நினைக்காத நடிகை ரொம்பவே அமைதி காத்து வருகிறார். அந்த வகையில் குறைவான படங்களாகத் தேர்ந்தெடுத்து அவர் ஓ.கே. சொல்லி வரும் படங்களில் 'பாலா' முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் படம் தன்னை மாறுபட்ட நடிகையாக நிலை நிறுத்தும் என்று அவர் எதிர்பார்க்கிறார். இவர் மட்டுமின்றி நடிகர் ஷாம் கூட இந்தப் படத்தைத்தான் இப்போது நம்பிக்கொண்டிருக்கிறார்.

## மீண்டும் ஹீரோயின் ஆகும் ரோஜா

தேவயானியின் ஸ்டைலில் தனது கணவர் ஆர்.கே.செல்வமணியை இயக்குநராகப் போட்டு சொந்தப் படம் தயாரித்து அதில் தானே ஹீரோயின் ஆக நடிக்க முடிவு செய்துள்ளார் ரோஜா.

ஏற்கனவே சொந்தப் படம் எடுத்துப் பெரும் நட்டப்பட்டவர் ரோஜா. வழக்கமாகவே ஒரு ஹீரோயினுக்குக் கல்யாணமாகிவிட்டால் அவருக்குக் கதாநாயகி வாய்ப்பு மறுக்கப்படும் என்பது கோலிவுட்டில் எழுதப்படாத விதியாக உள்ளது. தேவயானிக்கும் அதே நிலை ஏற்பட்டது. பிரம்மப்பிரயத்தனம் செய்து அவர் மீண்டும் சில வாய்ப்புகளைப் பெற்றார். ஆனால், அது தொடரவில்லை. இதனால் கணவர் ராஜகுமாரனை வைத்துச் சொந்தப் படம் எடுத்து வருகிறார்.

ரோஜா விஷயத்தில் நிலைமை ரொம்ப மோசம். திருமணம் ஆகும் போதே அவரிடம் அவ்வளவாக சான்ஸ் இல்லை. கல்யாணத்துக்குப் பிறகு கையில் ஒரு படம் கூட அவரிடம் இல்லை. இதனால் கணவரை வைத்துத் தானே ஒரு படம் எடுக்க முடிவு செய்துள்ளார். அதில் ஹீரோயின் ரோஜாதானாம். இதையடுத்து படத்தின் கதையைத் தேட (வெளிநாடு மற்றும் உள்நாட்டு சி.டி.களில்) ஆரம்பித்துள்ளனராம். கதை சிக்கியவுடன், பூஜைபோடப் போகிறார்களாம். ஹீரோயின் ஓகே.. ஹீரோ யார் என்று தெரியவில்லை. கண்டிப்பாக ஆர்.கே. செல்வமணியாக இருக்காது என்று நம்புவோமாக!

## என் குழந்தைக்கு சினிமா வேண்டாம்–குஷ்பு

சொந்தப் படம் தயாரிக்கும் திட்டத்தைத் தள்ளிப் போட்டுவிட்ட எட்டு மாதக் கர்ப்பிணி குஷ்பு, ஏற்கனவே இருக்கும் பெண் குழந்தை அவந்திகாவை சினிமாத் துறையில் ஈடுபடுத்த மாட்டாராம். இனிமேல் பிறக்கப்போகும் குழந்தை ஆணோ... பெண்ணோ... எதுவாக இருந்தாலும், இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் என்பதைக் கடைப்பிடிப்பாராம்!

## இலங்கைத் தமிழ் நடிகை தேடும் கமல்

இலங்கைத் தமிழ் நடிகை ஒருவருக்கு கமல் படத்தில் நடிக்க வாய்ப்புக் காத்திருக்கிறது.

கமல்ஹாசனின் 'அன்பே சிவம்' படத்தில் மாதவனுக்கு ஜோடியாக நடிக்க இலங்கைத் தமிழ்ப் பெண் தேவை என்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவைக் கதைக் களமாகக் கொண்டு மாதவனின் கேரக்டர் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதில் இலங்கைத் தமிழ் பேசத் தெரிந்த ஒரு நடிகை தேவைப்படுகிறார்.

இப்போதுள்ள தமிழ் நடிகைகள் பலரிடம் முயற்சி செய்து பார்த்தும் யாரும் தேறாததால் இப்போது புதிய நாயகியை அறிமுகம் செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இலங்கைத் தமிழ் பேசத் தெரிந்த, நடிக்கும் திறன் கொண்ட யாழ்ப்பாணப் பெண்கள் நாயகியாக வாய்ப்புள்ளது.

இந்தப் படத்தில் நடிக்க விருப்பமுள்ளவர்கள் oli@numtamil.com என்ற மின்னஞ்சலுக்குத் தங்கள் புகைப்படத்தையும் பயோ-டேட்டாவையும் அனுப்பலாம்.

தபால் மூலம் அனுப்ப நினைப்பவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

**"INBATHTHAMIL OLI"**
**P.O.BOX 1224,**
**BURWOOD, NSW 1805,**
**AUSTRALIA.**

ஏற்கனவே 'தெனாலி'யில் இலங்கைத் தமிழ் பேசி அட்டகாசம் செய்தார் கமல். இப்போது யாழ்ப்பாணத்தின் அழகிய, தூய, கொஞ்சு தமிழ் பேசும் நடிகையைத் தேடுகிறார்.

**★இந்த விளம்பரம் தொடர்பில் தினமுரசு வாரமலர் எவ்வகையிலும் பொறுப்பேற்காது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.** -ஆர்-



## ...க்கு டாட்டா? சரத்குமார் மறுப்பு

...சபை எம்.பி.யாக உள்ள சரத்குமார் மத்திய அமைச்சராகப் ...ால் சினிமாவுக்கு முழுக்குப் போடப் போகிறார் என்றெல்லாம் ... மறுக்கிறார் சரத்குமார்.

...சர் பதவி தேடி வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள ...ாவில்தான் முழுக் கவனமும் இருக்கும் என சரத் ...

...த்திரியின் 'அரசு', 'தீவான்' உள்ளிட்ட சில படங்களில் ...கிறார்.

... சம்பாதித்து வைத்த பணத்தைக் கொண்டு நிதி ... தான் வாங்கிய கடனை அடைத்துவிட்டார் என்று ... சரத் மறுத்துள்ளார்.

## ... இடத்தைப் பிடிக்கும் விந்தியா

...ர்ச்சி விசயத்தில் மும்தாஜ் ஸ்டைலுக்கு வந்துவிட்டார். ...யெல்லாம்' என்ற படத்தில் விந்தியா ஒரு பாட்டுக்கு ...ார். ஆட்டம் என்றால் சும்மா ஆட்டம் இல்லையாம். ...டமாம்.

... ஒரு லெவல் கீழே இறங்கிப் புகுந்து ...ாராம். அவருடன் ஆடக் கொடுத்து ... ஆகாஷ் (விஜயக்குமாரின் மருமகன் ...

... போனதால் ஆட முடியாமல் மும்தாஜ் ...ார். அவரது இடத்தைப் பிடிக்கும் ... நடிகைகள் ஈடுபட்டிருந்தாலும் அதை ...லிவார் என்கிறார்கள்.

...யெல்லாம்' படம் வெளி வந்தால் அடுத்த மும்தாஜாக ...யாராம்.

... பிரிந்து வந்து தனது மனேஜருடன்தான் தனிக் குடித்தனம் ... விந்தியா. இருவரும் கணவன்-மனைவி போலத்தான் ஒரே வீட்டில் ...

... வாய்ப்புக் கிடைக்க வாய்ப்பில்லை என்பதால் மும்தாஜ் லெவல் ... இறங்கிவிட்டார். இதற்காக உடலையும் கொஞ்சம் ஊத விட்டுள்ளார்.

## ...ர்ப்புகளுடன் வளரும் 'ஈர நிலம்'

...இயக்கும் 'ஈர நிலம்' படத்தில் மிகவும் அற்புதமாக நடித்துள்ள மனோஜ் ... கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்கின்றனர். அதேபோல, சிறந்த ...விருதை மிகவும் சுலபமாக பாரதிராஜா தட்டிச் செல்வார் என்றும் ... படத்தின் மூலம் திரையுலகில் தனக்கு மீண்டும் ஒரு திருப்புமுனை ... காத்திருக்கிறார் இசை அமைப்பாளர் சிற்பி!

## சொல்ல மறந்த கதையில் சேரன்


அழகி படத்தினைத் தொடர்ந்து தங்கர்பச்சான் இயக்கும் 'சொல்ல மறந்த கதை' படத்தில் நடித்துவரும் இயக்குநர் சேரன் அதற்கடுத்தபடியாக தங்கர்பச்சான் இயக்கும் படத்திலும் நடிக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது சம்பந்தமாக சேரன் வட்டாரத்தை விசாரித்தால் ஏற்கனவே விஜயகாந்திடம் ஒரு படத்திற்கான கதையைச் சொல்லி ஓ.கே. பண்ணி வைத்திருக்கிறார் என்கிறார்கள். அதனால் சேரனின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்த முழு விபரங்கள் சஸ்பென்ஸாக இருக்கிறது.

## சூர்யாவின் சுய கவனம்

சத்தமில்லாமல் தமிழ் சினிமாவில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துவிட்ட சூர்யா இப்போது தன் சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்களிலும் தானே கவனம் செலுத்துகிறார். முன்பெல்லாம் கதை, கால்ஷீட் உட்பட எந்த விசயமாக இருந்தாலும் அப்பாவிடத்தில் பேசிக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்வார்.

ஆனால் இப்போதோ தந்தையின் கட்டளையோ என்னவோ தனக்குத் தேவையான கதை எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தானே கேட்கத் தொடங்கிவிட்டார். இதனால் இயக்குநர்கள் ஓரளவு பிரச்சினை குறைந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

## முகப்பில் ரம்பா / விக்ரம்



சிம்பு-சார்மி
படம்: காதல் அழிவதில்லை

## "இப்போது வேண்டாம்"

விரைவில் ரம்பாவுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் என்று அவரது வீட்டில் முடிவு செய்துள்ளனர். ஆனால் ரம்பா மறுத்து வருகிறார். இன்னும் சில வருடங்கள் கழித்துத் திருமணம் செய்துகொள்ள அவர் முடிவெடுத்து இருக்கிறார். தேவயானியின் நிலைமை தங்கள் மகளுக்கு வந்துவிடக் கூடாதே என்று பெற்றோர்கள் பயப்படுவதுதான் இதில் ஹைலைட்!

## அஜித்தின் ஆர்வம்

மின்னல் வேகத்தில் கார் ஓட்டும் பந்தயத்தில் கலந்துகொள்வதற்காகச் சீனா செல்லவிருந்த அஜித், அதற்குமுன் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று கார் ஓட்ட டிரெயினிங் எடுக்கிறார். உயிருடன் விளையாடும் இது போன்ற ஆபத்தான விளையாட்டுத் தேவைதானா? என்று அவரது நண்பர்கள் கேட்க, ஆமாம்.. உயிருடன் விளையாடுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்! என்று நெத்தியடியாகப் பதில் சொல்லிவிட்டாராம் அஜித்.

# எனக்காக நீ..!

கல்லறைகள் பல காலம்....
காலமாக தூங்கிக்கொண்டுதான்
இருக்கின்றன...

ஒவ்வொரு அறைக்குள்ளும் உறங்கும்
உயிரிழந்த விட்டில் பூச்சிகள்
அத்தனையும் பேசுவதில்லை...

மாறாக யாருக்கும் புரியாத
மொழியில் ஓர் ஊமையின்
அவலக்குரல் முனகலாக...,
கல்லறையில் இருந்து...

'உன்னைச்சுற்றி நந்தவன வாசம்,
சுகந்தம் தேடினேன் உன்னைத்
தேடி..., தேடித்..., தேடி...'

'நான் பேசும் வார்த்தைகள்
காற்றலையில் கீதமாகி உன்
உள்ளத்தின் அடித்தளத்தை
பஞ்சணையாக்கும்
போது, என்னை உன்னுள்
சிறைப்படுத்துவாய் என்று...,
ஏங்கி... ஏங்கி....'

'உன்னிடம் தானே குளிர்ந்த தென்றலும்,
ஒளியும் உள்ளது... நீ இல்லாது
நான் பாலைவன இருளில்
மீட்க முடியாத பொருளாய்
புழுதியில் புதையுண்டு கிடக்கிறேன்.'

'இன்று என்னைச் சுற்றி
கல்லறை முட்செடிகள் வேரூன்றியுள்ளன.
முட்செடிகளின் நடுவே ரோஜாவாய்
மலர நீ ஆசைப்படுகின்றாய்...'

"என்னிடம் நீ வரக்கூடாது
என்னவளே எனக்காக நீ
இப்பரணியில் வாழவேண்டுமல்லவா..."

பா. துஷ்யந்தன்,
கோட்டைக்கல்லாறு-02.

# ஹைக்கூ

**கனவு**
இமை மூடியதும்
அரங்கேறும் திரைப்படம்

**வாழ்க்கை**
இறைவன் கொடுத்து
மீளப்பெறும் கடன்

**குடும்பம்**
நேசமெனும் எண்ணெய்
வற்றும்போது
பிரகாசம் குன்றும்
சுடர்விளக்கு

**குழந்தை**
தம்பதியருக்கு
இறைவன் கொடுக்கும்
பரிசு

**துயரம்**
மாரி காலத்தில்
இடையிடையே
வெட்டிச் செல்லும்
மின்னல்

**இன்பம்**
கோடையில் கசியும்
நீரூற்று

**இளமை**
சிலகால எழிலுக்கு
இறைவன் கொடுத்த
அழகுசாதனம்

**முதுமை**
பழைய புத்தகம்தான்
படித்துப் பார்த்தால்
பயன் அதிகம்

**கோபம்**
முரண்பாடான
கருத்துக்களின்போது
அணை கடந்து
பிரவேசிக்கும் வெள்ளம்

**சாந்தம்**
குணங்களில் கோபுரம்
கல்லையும் கனியவைக்கும்
மகத்துவம்

**விதவை**
கனவிலோ ஏக்கமாய்
பலவர்ணங்கள்
நிஜத்தில் வெண்ணிறத்துக்கு
உறவுக்காரி

**மரணம்**
ஆயுளின் அந்தம்
மரியாதைகளுடன் செல்லும்
வாழ்க்கையின் இறுதிப்பயணம்

செல்வி தேவி கணேசன்,
கலஹா.

# நிச்சயமாய் நீ வருவாய்

சகோதரனே,
சுகங்களை விட
சோகங்களை நேசிக்கும்
இனியவனே!

குளிர் குண்டூசியாய் குத்த
குறுகிய கரங்களுடனும்
விறைத்த மனதுடனும்-நீ
எழுதிய மடல் படித்தேன்

கனவுகளோடும் கற்பனைகளோடும்
களமாடி நிஜமாக்கத் துடிக்கும்
உன் கடிதத்தில் வடியும்
என் கண்ணீர்ச் சொட்டு

கரை வந்து வந்து மோதும்
அலைகளாய்-என்
இதயச்சுவரில் மோதும்
அந்தப் பழைய நினைவுகளில்
அடிக்கடி ஆடிப்போகிறேன்

வாழ்க்கைச் சாகரத்தின்
வற்றாத ஓட்டத்தில்
என்னை நீயும், உன்னை நானும்
இறுதிவரை சந்திக்காமல்
கூடபோகலாம்
எழுதும் போதே என் இதயம்
சுரம் மாறி சப்திப்பது உனக்கு கேட்கிறதா?

அண்ணா, காலமே கனவாகி
கவிதையே மொழியாகி
மௌனமாய் கண்ணீருடன்
உனக்காய் நான்.

அதே பழைய நினைவுகளை
நிஜமாக்க,
புல் வெளியில் கிடந்துருள
பனித்தரையில் படுத்திருக்க
கடலோரம் கால் நனைக்க
உன் உயிரான தங்கை
என்னோடு வாழ்ந்திருக்க
நிச்சயமாய் நீ வருவாய்

பனியில் நனைந்துகிடக்கும்
நம் தேசப்பாதை உன் பாதச்சூடு
பட்டு உஷ்ணமாக உனக்காய்
உறவோடு காத்திருக்கிறது
நிச்சயமாய் நீ வருவாய்.

விஜயா பிரான்சிஸ், யாழ்ப்பாணம்.

# உணர்வுச் சிற்பங்கள்

உணர்வுச் சிற்பங்கள்...
கரு வட்டம்
வளைந்து, நெளியும்
அரவத்தின் கோட்டில்
பரவி அழியும்...
இளமைப் பருவம்.

குண்டடி பட்டு
சுக்குநூறாகவும்
ஆயிரமாகவும் சிதைந்த
கிராமத்து குடிலாய்...
ஞாபகமெனும் பள்ளத்தில்
வேள்வியாக எரியும்
வாலிபத் தேகம்.

சுழி தள்ளும்
நதியில்
அகப்பட்ட பூவாய்...
கண்ணீரை கரைத்து
சுரணையிழந்து
படியும் கண்கள்

கறிச் சட்டியில்
மணக்கும் அம்மா போட்ட
கறிவேப்பிலையாய்...
காதலுடன்
நிரம்பி வதங்கும்
இதயம்.

இரவுப் புல்லில்
பனித்துளி
மொழி பெயர்ப்பாய்...
நினைவின் உணர்வு
நெஞ்சத்தின் மேட்டில்
நிலவைத் தேடும்
சுவாசம்.

சோகங்கள் முறிவதில்லை,
விலகுவதில்லை
நாள் ஒவ்வொன்றுக்கும்
அதிகரித்துச் செல்வதாய்...
மரம் கௌவிய
இரத்த
குருவிச்சை இனமாகும்
பெயர்.

பயங்கரவாதியின்
பலத்தினையும்,
தியாகத்தினையும்
ஏற்காத தேசிய
இராணுவம் போலவே...
நம் காதலையும்
ஏற்றுக் கொள்ளாத
சமூகம்.

'கவிமொழி' கோ. நாதன், பொத்துவில்.

# தேன் கிண்ணம்

# ஒளிந்து கிடக்கும் சொந்தங்கள்!

வாய்கால், வரம்பு, நெற்கதிர்!
இவைகள் வயலோடு கொண்ட
சொந்தங்கள்!
இதயம், மனம், உயிரின்தேடல்
காதல் கொண்ட சொந்தங்கள்!
கவிதை, கனவுகள், அர்த்தமில்லாத
அர்த்தமென நினைக்கும்
அலைச்சல்கள்-காதல் கொள்பவர்
சொந்தங்கள்!
துப்பாக்கிவெடில், மரணப் பயம்!
அகதிகள், இருண்ட இரத்த உலகம்!
யுத்தம் கொண்ட சொந்தங்கள்!

புரிந்துணர்வு ஒப்பந்தம், கையெழுத்து!
பேச்சுவார்த்தை!, தற்காலிகபோர்
நிறுத்தம்-சமாதானத்தை
தஞ்சம் கொள்ளவந்த புதிய
சொந்தங்கள்!
பட்டினி! பசி! வறுமை! கஞ்சி!
கந்தை-ஏழை கொண்ட
சொந்தங்கள்!
வாராந்த சுற்றுலா! வங்கித் தொடர்பு!
நேரம் வந்தாலும் பசிக்காத வயிறு!
பணக்காரர் சொந்தங்கள்!

பெருமூச்சு! சீவி சிங்காரிக்காத மனம்!
கல்யாணக்கனவுகள்! இவை
முதிர்க் கன்னியின் சொந்தங்கள்!
முந்திரி சுவைக்கும் மனசு!
வளயம் உருட்டும் ஆசை!
பாதணியில்லாத பாதத்தில்
புழுதி மண்!
பொத்தூன் அறுந்த சட்டை!
எங்கள் கிராமத்துச் சிறுவன்
கொண்ட சொந்தங்கள்

மண்வெட்டி!, மரநிழல்!
மறக்காமல் ஓடிவரும்
ஓடை நீர்!
விவசாயி கொண்ட
சொந்தங்கள்!
வைகறை!, வலை!, ஓடம்!
ஒட்டிக் கொள்ளும் சுருட்டு!
ஒரு தீப்பெட்டி!
மீனவர் சொந்தங்கள்!
எதைப் பார்த்தாலும்
கவிதையாக மலரும் கற்பனை!
சாதிக்க நினைக்கும் துணிச்சல்!
திருந்தாத சமூகத்தை
நினைத்து வருந்தும் மனசு!
நான் கொண்ட சொந்தங்கள்!

எ.எப்.எம். றியாட், முள்ளிப்பொத்தானை.

# பேனா நண்பர்கள்



பெயர்: அருண்
வயது: 18
முகவரி:
இல. 256, கிரிந்திகல,
பதுளை வீதி,
பலாங்கொடை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
பாலன் ஆரி
வயது: 20
முகவரி: பெட்டிகல,
பலாங்கொடை.
பொழுது போக்கு:
ரி.வி., வானொலி,
கதைப்புத்தகம்.



பெயர்: நந்தினி
முகவரி:
இல. 150,/3/1,
பழைய நிலம்பா,
கலஹா.
பொழுது போக்கு:
ரீ.வி. பார்த்தல்.
வானொலி.

# நினைத்து, நினைத்து சிரிக்க

## 'உஷார்' பேர்வழிகள் யார் சார்?



ஒருத்தன் பண்டைக் காலத்துக் கலைப் பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்யும் ஒரு கடைக்குப் போனான். கடையில் இருந்தவரிடம் ஒரு சிறிய மரத்துண்டைக் காட்டி, "இது என்ன தெரியுமா? ராமன் உடைத்த வில்லின் ஒரு பகுதி. இதை விலைக்கு வாங்கிக் கொள்கிறாயா?" என்று கேட்க, அதற்கு கடைக்காரன் பீரோவிலிருந்து ஒரு சிறிய மரத்துண்டை எடுத்து, "இதுவும் ராமன் உடைத்த வில்லின் ஒரு பகுதிதான்" என்று காட்டினான்.

வந்தவன் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு எழுத்தாணியை எடுத்து "இது திருவள்ளுவர் உபயோகப்படுத்தியது" என்று சொல்ல கடைக்காரனும் பதிலுக்கு, ஒரு எழுத்தாணியை எடுத்துக் காட்ட, வந்தவன் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிலம்பை எடுத்து, "இது கண்ணகி அணிந்த சிலம்பு... இதுவும் என்னிடம் ஒன்று இருக்கிறது என்று பொய் சொல்லாதே... ஏனென்றால் இதன் ஜோடியின் மற்றொரு சிலம்பை கோவலனை நிரபராதியென நிரூபிப்பதற்காகக் கண்ணகியே உடைத்து விட்டாள்" என்றான் எரிச்சலோடு.

## கண்ணை முழித்துக் கொண்டே போய் கிணற்றில் விழுவது என்பது எப்படிச் சாத்தியம்?

ஒருத்தன் ஒரு மலைப்பகுதியில் நடந்து போய்க்கொண்டிருந்தான். வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டது. அதை எப்படிக் கடப்பது என்று யோசித்தான். அப்போது அந்த வழியாக ஒரு சிறுமி ஆடுகளை மேய்த்துக் கொண்டு வந்தாள்... அவன் அவளைப் பார்த்து, "இந்த ஓடை எவ்வளவு ஆழம்? இறங்கி நடந்து போக முடியுமா?" என்று கேட்டான்.


அதுக்கு அவள், "ம்..ம்... இறங்கி நடந்து போகலாம். அதிக ஆழமில்லை" என்று பதில் சொல்ல,

"சரி" என்று அவன் ஓடையில் இறங்கினான். உள்ளே போகப் போக ஆழம் அதிகமாகிக் கழுத்துவரை தண்ணீர் வந்துவிட்டது. அவன் கோபத்தோடு சிறுமியைப் பார்த்து, "இவ்வளவு ஆழமாக இருக்கிறதே... இதற்குமுன் நீ இதில் இறங்கியிருக்கிறாயா?" என்று கத்தினான்.

அதுக்கு அவள், "ஊஹூம்... நான் இறங்கியதில்லை. வாத்துக்கள் இதன் மேல் போவதைப் பார்த்திருக்கிறேன். அதை வைத்து வாத்துக்களே நடந்து போவதால் ஆழம் குறைவாகத்தான் இருக்குமென நினைத்தேன்" என்று பதில் சொன்னாள்.

# சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
*இவ்வாரச் சிறப்புக் கவிதையாக,* அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் எபர்ஹார்ட் என்பவரின் கவிதை இடம்பெறுகிறது.



## செத்த பன்றி

ஜூனில் பொன் வயல்கள் நடுவில்
செத்த பன்றி ஒன்றைக் கண்டேன்
செத்துக் கிடந்தது அது ஆனாலும்
என் புலன்களை அதிரச் செய்தது
மனம் மெலிவு மீறி எழுந்தது.
கடும் கோடையில் அங்கே கீழாக
அதன் வடிவம் பொருளற்று மாற
இயற்கை செய்யும் கொடுமை கண்டு
என் புலன்கள் குழம்பின மழுங்கின
அதன் புழுங்கும் உடல் கலத்தையும்
அருவருப்பும் விநோத அன்பும் கலக்க
நுணுகிப் பார்த்து கோபத் தடி
-கொண்டு குத்தினேன்
ஜுரம் எழும்பி ஜுவாலை ஆனது.
வீரியம் வானை அளவிட்டது.
சூரியனில் அளவற்ற சக்தி,
என் உடலினூடே நிழலோட்ட
-இருண்ட நடுக்கம்
தீமை நன்மை எதுவும்
செய்யவில்லை என் கம்பும்
பகலில் மௌனமாய் நின்றிருந்தேன்
முன்போல் அதையே பார்த்தவாறு
அடக்கிக் கொள்ளவும் அமைதியாய் இருக்கவும்
இரத்தத் துடிப்பை தணிக்கவும் முயன்று
அறிவுக்கு என் வணக்கம் காட்டினேன்.
முழங்கால் மடங்க கீழே குனிந்து
சிதைவுக்கு மகிழ்ந்து பிரார்த்தனை செய்தேன்.
சென்று, பனிகாலம் திரும்பி வந்தது.
கண் கூர்ந்து பார்த்த போது
பன்றியின் இரத்தம் வற்றிப் போய்
புழுங்கிய எலும்புக் கூடுதான் மீதம்
ஆண்டுதான் பொருள் இழந்து போச்சு.
அறிவத் தளைப்பட்ட நான்
அன்பும் அருவருப்பும் இழந்தேன்
விவேகச் சுவர் வேலிக்குள் அடைபட்டு...
மறுகோடை வயல்களை தன் வசமாக்கியது.
ஒளியும் வாழ்வுமாய் தாக்காக்கியது.
அந்த இடம் பார்க்க நேரிடவும்
அங்கே கிடந்தது கொஞ்ச ரோமம்
சூரிய ஒளியில் வெளிறின எலும்புகள்.
சிற்ப வேலைகள் போல அழகாக
கேத்திர கணிகன் போல் கவனித்தேன்
மிலாறு ஒடித்து குச்சி ஆக்கினேன்.
இன்னொரு ஆண்டு மூன்று ஆச்சு.
பன்றியின் சின்னம் எதுவும் இல்லை
உழற்றும் கோடையில் நின்றிருந்தேன்.
வெதும்பிய நெஞ்சை என் கை கௌவியது
சீனாவையும் கிரீஸையும்
பாசறை இருந்த அலெக்ஸாண்டரையும்
கோட்டை இருந்த மாண்டெயினையும்
புலம்பிக் கதறிய செயின்ட் தெரஸாவையும்
பற்றி அது நினைத்து நினைத்துப் பார்த்தது.

(நன்றி: எழுத்து, ஏப்ரல் 1969)
ரிச்சர்ட் எபர்ஹார்ட் (அமெரிக்கா)

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# கண்ணுக்கு மை அழகா?

இன்று அழகு சாதனங்களின் விற்பனை ஏகத்துக்கு நடைபெறுகின்றது. இன்றைய பெண்கள் கண்களைக் கூட விட்டு வைக்கவில்லை. கண்களுக்கு என்றே விதவிதமான அழகு சாதனங்கள் வந்துவிட்டன. இந்த சாதனங்களிடமிருந்து கண்களைக் காப்பாற்றிக் கொள்ள சில டிப்ஸ்....

மஸ்காரா போடுகின்ற போது இமையின் வெளிப்பாதியில் மட்டால் மெல்லிய கீறல் விழுந்து இது பார்வையையே பாதிப்படைய வைக்கலாம்.

மற்றவர்களின் கண் மை, கண் அழகு சாதனங்களைக் கண்டிப்பாகப் பயன்படுத்தாதீர்கள். இதனால் கண் கஞ்சங்டைவாவிலும், கார்னியாவிலும் பாக்டீரியா தொற்று ஏற்படும். ஐ லைனர் பென்சில் கொண்டு கண்ணுக்கு மை எழுதும் போது இமை வரிசையைத்



டுமே போட வேண்டும். மஸ்காரா விழியின் படலத்தில் பட்டால் விவிட்டிஸ் என்கின்ற கிருமி தொற்றலாம்.

கண்டிப்பாகச் செயற்கை இமைகள் ஒட்டிக் கொள்வதைத் தவிருங்கள். இவை கருவிழியில் பட் தாண்டித்தான் எழுத வேண்டும். இமையிலிருக்கும் வியர்வைத் துவாரங்கள் அடைபட்டுப் போய்விட்டால் கொப்புளங்கள் வர வாய்ப்புண்டு. "ஜினொஜ ஷோடோ" என்கின்ற கண் அழகு சாதனத்தைத் தவிர்ப்பது கண்ணுக்கு நல்லது.

# பிரேமானந்தாவை ஞாபகம் இருக்கிறதா?

பிரேமானந்த சாமியையும் அவரது செயலாளர் கமலானந்தாவையும் எமது வாசகர்கள் அத்தனை இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். ஆசிரமம் நடத்தி அதில் தன்னிடம் அருள் பெற வந்த ஏராளமான பெண்கள், சிறுமிகள் எனப் பலருடன் மோசமான பாலியல் தொடர்புகளை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதாகித் தற்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரேமானந்தாவும் அவரது சகாக்களும் 1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை மேல் முறையீடு செய்திருந்தார்கள். அப்போதைய தீர்ப்பில் பிரேமானந்தாவுக்கு இரட்டை ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. மேலும் 3 பேருக்கு ஆயுள் தண்டனை மற்றும் 10 ஆண்டு சிறைத் தண்டனை என்பன வழங்கப்பட்டிருந்தன.

பிரேமானந்தா மீது விதிக்கப்பட்ட இரட்டை ஆயுள் சிறைத் தண்டனையைச் சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்திருக்கிறது. ஒருவரைக் கொலை செய்தமை, 12 பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை அடங்கலாகப் பல குற்றச்சாட்டுக்கள் பிரேமானந்தா மீது சுமத்தப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய 226 பக்கத் தீர்ப்பில் பிரேமானந்தா செய்த மோசமான பாலியல் வக்கிரங்கள் குறித்து விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் லண்டனில் செய்யப்பட்ட மரபணுச் சோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

பிரேமானந்தா உடலுறவு கொள்வதற்காகவே சிறுமிகளை அழைத்து வந்து அவர்களைத் தனது ஆசிரமத்தில் வளர்த்திருக்கிறார்.

அச் சிறுமிகள் பருவம் அடையும் போது அவர்களைத் தனி அறையில் வைத்திருப்பார். பின்னர் 15 நாட்களுக்குப் பிறகு தனக்குக் கடவுளின் அருள் இருப்பதாகவும் தன்னுடன் உடலுறவு வைத்துக்



கொண்டால் புனிதத் தன்மையை அடையலாம் எனவும் கூறி அந்தச் சிறுமிகளுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார். மறுக்கும் சிறுமிகள் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். கருவுறும் பெண்களின் கருவைக் கலைப்பதற்கு இயற்கை மருந்துகளைக் கொடுப்பது, தேவையேற்பட்டால் மருத்துவமனைகளில் கருக்கலைப்புச் செய்வது போன்றவற்றில் பிரேமானந்தாவின் உதவியாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

பிரேமானந்தாவின் காம வெறிக்குப் பலியாகிய 12 பெண்களில் 4 பேர் 16 வயதிற்கும் குறைவானர்வர்கள்.

இத்தகைய சிறுமிகளுடன் அவர்களது விருப்பத்தின் பேரில் உறவு கொண்டாலும் அது பாலியல் பலாத்காரமாகவே கருதப்பட வேண்டுமெனக் கூறியிருக்கும் நீதிபதி, ஒருவர் உடலுறவுக்காகவே சிறு வயது முதல் பெண் குழந்தைகளை வளர்ப்பது கொடுமையானது என வர்ணித்திருக்கிறார்.

பூஜை அறை, தர்மசாலை, அருள் வாக்கு அறை, கட்டில் அறை என ஆசிரமத்தின் பல இடங்களிலும் பிரேமானந்தா சிறுமிகளை வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கிறார்.

அவரது செயலாளராக இருந்த கமலானந்தா என்ற பெண் மூலமே பல சிறுமிகள் பிரேமானந்தாவுக்கு வழங்கப்பட்டுள்ளனர். பிரேமானந்தாவினதும் தலைமறைவாகவுள்ள திவ்வியாதேவியினதும் வங்கிக் கணக்கில் கோடிக் கணக்கான ரூபாய் பணமிருக்கிறது. அவற்றைப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நட்ட ஈடாக வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரவி அல்லது பிரேம்குமார் என்கிற பிரேமானந்தா இலங்கையில் அநாதை இல்லம் ஒன்றை நடத்தி வந்தவர். 1984ம் ஆண்டு படகுகள் மூலம் இராமேஸ்வரம் சென்றடைந்த இவர் திருச்சியை அடுத்துள்ள பாத்திமா நகரில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசிரமம் ஒன்றை நடத்தி வந்தார். இவருடன் 12 சிறுமிகளும் சில பெண்களும் இந்தியா சென்றனர். இத்தகைய சிறுமிகளில் பெரும்பாலானோரை அவர் தனது வக்கிர காமப் பசிக்கு இரையாக்கியதுடன் தன்னிடம் அருள் பெற வந்த பலருடனும் உறவு வைத்துக் கொண்டார். பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணினதும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையினதும் துணிச்சலான நடவடிக்கை காரணமாகப் பிரேமானந்தாவின் ஆசிரம இரகசியங்கள் 1997ம் ஆண்டின் முற்பகுதியில் அம்பலத்துக்கு வந்தன.

இப்போது அவர் சிறையில் இருக்கிறார். ■

செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bc

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-12-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எஸ். சரோஜா
பாடசாலை ஒழுங்கை, பண்டாரகம.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# தாய் இசை கேட்டால் கருவில் உள்ள குழந்தைக்குப் புரியுமா...?

கருவில் இருக்கும் போதே குழந்தையை உடல் அளவில் மட்டுமல்ல-மன அளவிலும் நல்ல குழந்தையாக உருவாக்க இசையால் முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

ஆம்... இசைக்கும் நமது ஆன்மாவுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. மொழிக்கு அப்பாற்பட்ட அந்த இசைக்கு மனசை மென்மைப் படுத்தும் அதீத சக்தி உண்டு. அந்த இசையை, ஓசையைக் குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போதே கேட்க வாய்ப்பளித்தால் அக் குழந்தை மென்மையான உணர்வுடன் உருவாக வாய்ப்புண்டு. இதனை மருத்துவ உலகமும் அறிவியல் பூர்வமான உண்மை என்று நிரூபித்திருக்கிறது.

தாயின் வயிற்றில் குழந்தை உருவாக ஆரம்பித்த 24 வாரங்களில் குழந்தைக்கு ஐம்புலன்களில் காது மட்டும் முழுமையாக வளர்ச்சி அடைந்துவிடும். இடைவிடாது தாயின் இருதயத் துடிப்பைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். வெளிப்புறங்களில் எழுப்புகிற சத்தத்திற்குக் கருவில் இருக்கும் குழந்தை



24 வாரங்களில் 'ரியாக்ட்' பண்ண ஆரம்பிக்கும்.

கருவில் இருக்கும் போதே குழந்தை சில விசயங்களைப் புரிந்து கொள்கிறது. தனது தாய் மகிழ்ச்சியாக இருந்தால் சேயும் சந்தோசமாக இருக்கும். தாயின் குரல் அதற்குப் பரிச்சயப்பட்டுப் போயிருக்கும். கருவாகி ஆறாவது மாதத்திலிருந்து காலையில் இருபது நிமிடம், மாலையில் இருபது நிமிடம் நல்ல சுகாதாரமான, காற்றோட்டமுள்ள, அமைதியான சூழலில் கர்ப்பிணிப் பெண் தொடர்ந்து இசையைக் கேட்கும் போது, கருவிலிருக்கும் குழந்தைக்கும் தாய்க்கும் உணர்ச்சி பூர்வமான உறவு உண்டாகும்.

தன் குழந்தையை நல்ல முறையில் பெற்றெடுக்க வேண்டும் என்கிற ஆசை எல்லாத் தாய்மார்களுக்கும் உண்டு. அதற்கு முதல் தேவை அந்தத் தாயின் சந்தோசம்தான். அந்தச் சந்தோசத்தைத் தரும் வேலையைத்தான் இசை அந்த இடத்தில் செய்கின்றது. இசையைக் கேட்கும் தாய்க்கு நிம்மதி கிடைக்கிறது. கர்ப்ப காலத்தில் தாய் தொடர்ந்து இசையைக் கேட்பதால் என்ன பயன்? குழந்தையின் லைஃப் எனர்ஜி அதிகரிக்கிறது. இந்த இசையைக் கேட்டுப் பழகிய குழந்தை பிறந்த பின்னர் சீக்கிரமாகத் தெளிவாகப் பேச ஆரம்பித்துவிடும். மொழி அறிவும், கற்பனா சக்தியும் அபரிமிதமாக இருக்கும். பொறுமை, சாந்தம், மென்மை போன்ற மெல்லிய உணர்வுகளுடன் குழந்தை உருவாகும். எல்லா விசயத்திலும் இக் குழந்தைகள். தெளிவானவர்களாக இருப்பார்கள் என்று மருத்துவ சஞ்சிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆற்றங் கரையதனில் முன்னமொருநாள் -எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய -தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.
**சுப்பிரமணிய பாரதியார்-**



# சோளக்காட்டுப் பொம்மை

## பாப்பா முரசு சிறுகதை

**ஜோ**சியர் ராசிமணி தன்னை சிறந்த ஜோசியர் என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லிக் கொண்டே இருப்பார். ஏனவே கிராமத்தில் எந்தப் பிரச்சனை என்றாலும் ஜோசியம் பார்ப்பதற்கு ராசிமணியைத் தேடி வந்தனர்.

அக்கம் பக்கத்துக் கிராமங்களில் இருந்தும் பலர் ராசிமணியைத் தேடி வந்து ஆருடம் கேட்டனர். ராசிமணியின் புகழ் பரவியது. பணத்துக்கும் பஞ்சமில்லை. ஆனால், ராசிமணி மக்களை ஏமாற்றி வந்த சமாசாரம் வேறு யாருக்கும் தெரியாது. ஜோசியம் பார்க்க வருபவர்களை ஏதாவது சொல்லி ஏமாற்றி வந்தார்.

ஒருநாள் ராசிமணிக்கு சனி ஆரம்பமாகிவிட்டது. எங்கிருந்தோ சிறந்த ஜோசியர் ஒருவர் அந்தக் கிராமத்துக்கு வந்தார். அவரைக் காண வந்தவர்களுக்கு அவர் கூறிய ஜோசியம் மிகச் சரியாக இருந்தது. எனவே அவர் புகழ் மிக வேகமாகப் பரவியது.

அவர் ஒரு கோவில் வாசலில் அமர்ந்தபடி ஜோசியம் சொன்னார். ஆனால் ஒன்று. அவர் யாரிடமும் பணம் கேட்பது இல்லை. அன்றாட உணவுக்காக மட்டும் ஏதாவது பணம் பெற்றுக் கொள்வார். இந்த ஜோசியரின் வருகையால் ராசிமணியின் வருமானம் முழுவதுமாகத் தடைப்பட்டது. வருமானம் இல்லாததால் அதுவரை சம்பாதித்து வைத்திருந்த பணம் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழிந்தது.

பணம் முழுவதும் கரைந்த நிலையில் இரவில் வீட்டு வாசலில் சோர்வுடன் உட்கார்ந்து இருந்த ராசிமணி யாரோ வருவதைக் கண்டு திடுக்கிட்டார். வந்தவர் பக்கத்து வீட்டு சிங்கண்ணன். "நான் பக்கத்து ஊருக்குப் போகிறேன். வீட்டில் வயதான பாட்டி மட்டும் இருக்கிறாள். நான் இல்லாத போது பாட்டிக்குத் துணையாக நீதான் இருக்க வேண்டும்." என்றான் சிங்கண்ணன். விருப்பம் இல்லாவிட்டாலும் "சரி," என்றான் ராசிமணி. மறுநாள் இரவு வந்தது. பக்கத்து வீடான சிங்கண்ணன் வீட்டுக்குச் சென்றார் ராசிமணி. அங்கு பாட்டி மட்டும் தனியாக இருந்தாள். ராசிமணி வந்ததை அறிந்து மகிழ்ச்சி அடைந்தாள் பாட்டி. கடும் உழைப்பாளியான சிங்கண்ணன் தன் வயல்களில் காய்கறிகள் பயிரிட்டு நல்ல பணம் சம்பாதித்து வந்தான். அந்தக் காய்கறிகளைத் திருடி விற்றால் பணம் நிறையக் கிடைக்கும் என்று திட்டம் போட்டார் ராசிமணி. இரவில் பாட்டி தூங்கிய போது ராசிமணி சிங்கண்ணனின் வயலுக்குச் சென்று காய்கறிகளைப் பறித்து மூடைகளில் நிறைத்தார். இரண்டு நாட்கள் ஓடிவிட்டன. ஊருக்குப் போன சிங்கண்ணன் வீடு திரும்பினான். அப்போது வயலில் கண்ட காட்சி அவனை அழ வைத்தது. காய்கறிகளைக் காணவில்லை. உடனே ராசிமணியின் வீட்டுக்கு ஓடினான். "யோவ், ராசிமணி, என்னய்யா இது. என் காய்கறிகள் எப்படிய்யா காணாமல் போச்சு?" என்று அழுது கொண்டே கேட்டான். "இரு... இரு.. நான் ஜோசியம் பார்த்துச் சொல்கிறேன்." என்று கூறிவிட்டு சிங்கண்ணனின் கைரேகையைப் பார்க்கத் தொடங்கினார் ராசிமணி. "அடடே... உங்க தோட்டத்தில் உள்ள 'வெருளி'தான் அதைத் திருடியிருக்கிறது!" என்றார் ஜோசியர்.

"வெருளியா?" என்றான் சிங்கண்ணன். "வெருளி என்றால் சோளக் கொல்லை பொம்மை," என்றார் ராசிமணி. அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த சிங்கண்ணன் அழுது கொண்டே வீடு திரும்பினான். பொம்மை எப்படிக் காய்கறிகளைத் திருட முடியும்? என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு நடந்தான் சிங்கண்ணன். வீடு திரும்பிய சிங்கண்ணன் உணவு அருந்திய பிறகு தூங்கிவிட்டான்.

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த அவன் ஏதோ சத்தம் கேட்டுக் கண் விழித்த போது 'வெருளி' பொம்மை காய்கறிகளைப் பறித்துக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.


இதில் ஏதோ சதி இருக்கிறது. யாரோ சூழ்ச்சி செய்கின்றனர் என்று உணர்ந்த சிங்கண்ணன் 'எப்படியாவது இதைக் கண்டுபிடித்தாக வேண்டும்.' என்று மனதுக்குள் திட்டம் போட்டான். அடுத்த நாள் காலை சந்தைக்குப் போய் பட்டாசுகளும் கரிமருந்தும் வேறு சில பொருட்களும் வாங்கி வந்தான்.

யாருக்கும் தெரியாமல் வயலில் இருந்த சோளக் கொல்லை பொம்மை அருகே சென்றான். யாரும் பார்க்காமல் பட்டாசுகளைப் பொம்மையின்சட்டைக்குள் திணித்தான். பிறகு அதில் இணைக்க மெல்லிய, நீளமான கயிறு ஒன்றை மெதுவாக எடுத்து வந்து வீட்டு முற்றத்தில் கட்டிப் போட்டான். பிறகு கரிமருந்தைக் குழைத்து அந்தக் கயிறில் பூசிக் கொண்டான். இப்போது முற்றத்தில் இருந்த பிடி கயிறில் தீ கொளுத்தினால் பொம்மைக்குள் இருக்கும் ஏராளமான பட்டாசுகள் வெடித்து விடும்.

எல்லாவற்றையும் சரி செய்து வைத்து விட்டு, வீட்டு முற்றத்தில் போடப்பட்டுள்ள கட்டிலில் படுத்துக் கொண்டான். இருட்டில் இருந்ததனால் கட்டிலை யாராலும் பார்க்க முடியாது. இரவு வெகு நேரமாகிவிட்டது. சிங்கண்ணன் சற்றுக் கண்முடினான். அப்போது வயலில் அங்குமிங்கும் நடந்து காய்கறிகளைப் பறிக்கத் தொடங்கியது பொம்மை. அதைக் கண்டு திடுக்கிட்ட சிங்கண்ணன் மெதுவாக எழுந்து தீப் பெட்டியைப் பற்றவைத்துக் கயிறில் கொளுத்தினான். தீ பிடித்தது அந்தத் தீ கயிறு வழியாக பொம்மையை நெருங்கியது. சற்று நேரத்தில் பட்டாசுகள் பயங்கரச் சத்தத்துடன் வெடிக்கத் தொடங்கின. அப்போது ஒருவன் அலறியபடி அங்குமிங்கும் ஓடிவிட்டு வயலில் விழுந்து துடித்தான். சத்தம் கேட்டுக் கிராமத்து மக்கள் அனைவரும் ஓடி வந்தனர். அங்கே ஜோசியன் ராசிமணி தீக் காயங்களுடன் அழுது கொண்டிருந்தான்.

திருடுவதால் ஏற்பட்ட கதியைப் பார்த்தீர்களா? எப்பவுமே நேர்மையாக உழைத்துச் சாப்பிட வேண்டும். களவெடுக்கக் கூடாது. சரிதானே!

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.12.2002.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 476**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 477**

பரிசுக்குரியவர்:
**எம்.என்.எ.ஃப். றிஸ்னா,**
துருக்கராகம, கஹட்டகஸ்திகிலிய.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **ஏ.எம். பாத்திமா நுஸ்றா,** கல்/குறிஞ்சிப்பிட்டி மு.மகா வித்தியாலயம். | **சி. பிரசாந்த்,** இல. 209, கலகம, பெலிஹுல் ஓய. |
| **ஆர். பிரியங்கா,** இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழு.-4. | **ஜெ. றிஸ்வான்** தீ/அல்-அக்ஸா ம.வி., சின்னக் கிண்ணியா-3. |
| **ரா. ரதீபன்,** 95/23 அலஸ் வீதி, நீர்கொழும்பு. | **வ.மிறின் தனோஜன்,** 145 கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா. |
| **எம்.எஸ். துசான்,** தருமதூத்த கல்லூரி, பதுளை. | **எல். பிரணவன்,** நானாட்டான் மகா வித்தியாலயம், மன்னார். |
| **எல். பாரத்,** 32, செட்னோல் வீதி, பலாங்கொட. | **ஜோ. சரவணராஜ சர்மா,** விவேகானந்த கல்லூரி, கொழும்பு-13. |

# விடுகதைகளும் விடைகளும்

1. அடர்ந்த கருங்காட்டில் அடக்க ஆளின்றி ஆரவாரம் பண்ணுகிறான் அவன் யார்?
2. பந்தலில் தொங்கும் பாம்புக்கு வாலில் கல் அது என்ன?
3. வேலியைத் தாண்டி வெள்ளைக் குதிரை பறக்கிறது அது என்ன?
4. நகராப் பெட்டி நகர்த்தும் ஆயிரம் சேதிகளை அது என்ன?
5. உடன் வருவான் உதவி செய்ய மாட்டான் அவன் யார்?
6. ஒற்றைக்காலில் ஆடுவான் ஓய்ந்து போனால் சாய்வான் அவன் யார்?
7. ஓடியாடிப் பாடும் ஊசி ஒன்று போதும் அவன் யார்?
8. கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது கையால் தொட்டாலே காணாமல் போகுது அது என்ன?
9. குட்டைப் பிள்ளைக்கு குறுணி நகை அது என்ன?
10. செம்பட்டு உடையழகி தலை கீழாய் குடை பிடிப்பாள் அவள் யார்?

**விடைகள்.**

1. பேன் 2. புடலங்காய்
3. பருத்தி 4. தபால் பெட்டி
5. நிழல் 6. பம்பரம்
7. இசைத்தட்டு 8. நீர்க்குமிழி
9. கோழி-முட்டைகள் 10. மிளகாய்

# வெளிச்சம்



**ப**ல வருடங்களாக பொலிசார் பிரகாசமான வெளிச்சத்தைக் கொண்டு குற்றவாளிகளைத் துன்புறுத்தி உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து வருகின்றனர். ஆனால் வெகு சிலரே இது பயங்கர கெடுதி விளைவிக்கக் கூடியது என்பதை அறிவார்கள்.

**ந**டுப்பகலில் சூரியன் பிரகாசமாய் மின்னும்போது, வரிசையாக மரங்கள் நடப்பட்ட சாலையில் மோட்டார்ச்சைக்கிளில் செல்லும் 20 பேர்களில் ஒருவர் கிறுகிறுவென்று கிறக்கம் ஏற்படுவதாகக் கூறுகிறார்.




**கி**ரே வால்டர் என்ற விஞ்ஞானியின் ஆய்வுகள் 1961ம் ஆண்டு 'வாழும் மூளை' என்ற பெயரில் நூலாக வந்தது. அதில் வரிசையாக நடப்பட்ட மரங்கள் இடையே உள்ள தூரத்தை கூட்டியோ குறைத்தோ மரங்களிடையே மின்னும் சூரிய ஒளி மூலம் 20 பேர்களில் 10 பேருக்கு மயக்கமடைந்தது போன்ற உணர்வை உருவாக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

# வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:- உலகில் ஆழமான கடல்களும், சமுத்திரங்களும்**

| கடல் அல்லது சமுத்திரம் | அதிகூடிய ஆழம் மீற்றர் | அடி | சராசரி ஆழம் மீற்றர் | அடி |
|---|---|---|---|---|
| 1. பசுபிக் சமுத்திரம் | 10,924 | 35,837 | 4,028 | 13,215 |
| 2. இந்து சமுத்திரம் | 7,455 | 24,460 | 3,963 | 13,002 |
| 3. அட்லான்டிக் சமுத்திரம் | 9,219 | 30,246 | 3,926 | 12,880 |
| 4. கரிபியன் கடல் | 6,946 | 22,788 | 2,647 | 8,685 |
| 5. தென் சீனக்கடல் | 5,016 | 16,456 | 1,652 | 5,419 |
| 6. பேரிங் கடல் | 4,773 | 15,659 | 1,547 | 5,075 |
| 7. மெக்ஸிகோ வளைகுடா | 3,787 | 12,425 | 1,486 | 4,874 |
| 8. மத்திய தரைக் கடல் | 4,632 | 15,197 | 1,429 | 4,688 |
| 9. யப்பான் கடல் | 3,742 | 12,276 | 1,350 | 4,429 |
| 10. ஆர்டிக் சமுத்திரம் | 5,625 | 18,456 | 1,205 | 3,953 |


# இந்த வாரப் புதிர்




இங்கு இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் 6 வரிசைக் கட்டங்கள் உள்ளன. இங்குள்ள 12 நட்சத்திரங்களை, வரிசைக்கு 2 நட்சத்திரங்கள் வீதம், எல்லா வரிசையிலும் வரும்படி (அதாவது இடமிருந்து வலம், மேலிருந்து கீழ்) வைக்க வேண்டும். முயற்சியுங்கள் பார்க்கலாம்.

# அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:




படம் 1




படம் 2

# ஹர்த்தாலும் காவி நுளம்பும்

கூட்டம் ஆரம்பமானது அதிகாரி பேச ஆரம்பித்தார். "எந்த வகையிலும் நோய் காவிகளான நுளம்புகளை அழிக்க முடியவில்லை. டெங்கு, யானைக்கால், மலேரியா போன்ற பயங்கர நோய்களைக் கடத்துகின்ற நோய் காவிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நமது திணைக்களம் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்திருக்கிறது. ஊரில் ஆங்காங்கே காணப்படுகின்ற பழைய டயர்கள், உக்கிய மரக்குற்றிகள், வெற்றுக் குரும்பைகள், சிரட்டைகள் என்பவற்றை அழிப்பதற்கு எவ்வளவு முயற்சியை மேற்கொண்டாலும் மக்கள் அதைக் கவனத்தில் எடுப்பதாயில்லை. எனவே நாளை நடைபெறுகின்ற ஆலோசனைக் கூட்டத்தில் மேலே சொன்ன நோய் காவிகளின் வாழ்விடங்களை அழித்தொழித்து, நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முறை பற்றிய நல்ல ஆலோசனையை யார் முன் வைக்கிறார்களோ அவர்களுக்குத் திணைக்களத்தினால் பெறுமதியான பரிசில் வழங்கப்படுவதோடு பாராட்டு விழாவும் நடைபெறும்"

பேசி முடித்த அதிகாரி அமர்கிறார். கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருத்தருக்கும் அந்தப் பரிசினையும், பாராட்டினையும் தாங்களே பெற வேண்டுமென்ற ஆசை மேலெழுகிறது. இவனையும் அந்த ஆசை பீடித்துக் கொள்கிறது. பரிசும், பாராட்டும் கண்முன்னே நிழலாடுகிறது. கூட்டம் முடிந்த கையோடு ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்தவனால் உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை. விழித்த கண்களுடன் கட்டிலில் புரண்ட இவனிடம் காரணத்தை வினவுகிறாள் மனைவி. இவன் காரணத்தை விளக்குகிறான். அவளுக்கும் அந்தப் பரிசும் பாராட்டும் தன் கணவனுக்கே கிடைக்க வேண்டுமென்ற ஆசை சிறகடிக்கிறது. நேரம் நள்ளிரவைத் தாண்டியும் இவனும், மனைவியும் தூக்கத்தைத் தொலைத்திருந்தார்கள். ஒரே சிந்தனை கட்டிலில் புரண்டிருந்த இவன் மனைவி துள்ளிக் குதித்தபடி எழுந்தமர்கிறாள். புரிந்து கொண்ட இவன். "என்ன யோசித்தாய் சொல்" என்று சொல்லும் படியாக மனைவியை நோக்குகிறான். மனைவி சொன்ன யோசனை இவனைச் சந்தோசத்தின் உச்சிக்கே கொண்டு செல்கிறது. தூக்கமும் கண்ணை முட்டுகிறது.



மறுநாள் கூட்டம் ஆரம்பமாகியது. ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் ஆலோசனைகளை முன்வைத்தார்கள். எந்த ஆலோசனையும் அதிகாரியைத் திருப்திப்படுத்தவில்லை. இவனின் முறை வந்தது. இவன் கூறிய ஆலோசனை அதிகாரியை பரிசீலிக்கத் தூண்டியது. ஈற்றில் இவனது ஆலோசனையே முடிவாக அறிவிக்கப்பட்டது. இவனது திட்டத்தை நடைமுறைப்படுத்த இவனது தலைமையிலேயே குழு அமைக்கப்படுகிறது பரிசிலை நோக்கிய இவனது பயணம் ஆரம்பமாகிறது.

இரண்டு டாக்டர்கள் காயப்பட்டு இரத்தம் தோய வீதியில் கிடக்கிறார்கள். இவனது தலைமையில் சென்ற குழு அவர்களை மீட்கிறது. அன்றிரவே இவனது தலைமையால் குழு கூடுகிறது. "இரண்டு டாக்டர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும். எனவே நாளை கடைகள், பாடசாலைகள், திணைக்களங்கள் அனைத்தினையும் மூடி, போக்குவரத்தை தடைசெய்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறோம்" வேகமாக 'போஸ்டர்கள்' அச்சடிக்கப்பட்டு வீதியெங்கும் ஒட்டப்படுகிறது. நாளை விடுமுறை என்பதால் கடைகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும், கட்டாயத்திற்காய் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் ஏகப்பட்ட சந்தோசம், வேலையற்ற இளைஞர்களுக்கு நாளை தங்கள் பொழுது

**காத்தநகர் முகைதீன் சாலி-திருமலை**

ஹர்த்தால் களையுடன் காணாமல் போகும் என்ற நிம்மதி.

அன்றைய பொழுது அமைதியாக விடிகிறது. அதிகாரி சகிதம் இவனது குழு நிலைமைகளை அவதானிக்கிறது. ஊரெங்கினும் மூலை முடுக்குகளில் கவனிப்பாரற்று, கண்காணிக்க முடியாதவாறு புதையுண்டு, சிதையுண்டு, நீர் நிறைந்து நோய்க் காவிகள் குடியிருந்த டயர்கள், உழுத்த மரக்குற்றிகள், வெற்றுக் குரும்பைகள், சிரட்டைகள் எல்லாமே பலவந்தமாக வீதிக்கு வருகின்றன. அனைத்தும் தீ மூட்டி எரிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு சந்தியிலும் எரிக்கப்பட்ட டயர்களினால் ஏற்பட்ட புகையினால் ஊரிலிருந்த நுளம்புகளெல்லாம் வாழிடமும் இழந்து சூழலும் மாசு பட்டதால் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொள்கின்றன. இவனது திட்டம் நினைத்தது போலவே நிறைவேறிப் போக சந்தோச மிகுதியால் ஆலோசனை சொன்ன அன்பு மனைவியை அள்ளியணைக்க ஓடோடிப் போகிறான்.

மறுநாள் நோய் காவிகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் அழிப்பதற்குச் சிறந்த ஆலோசனை வழங்கி அதனைச் செயற்படுத்தியமைக்காக, தனக்கு பரிசும், பாராட்டு விழாவும் நடைபெறப்போகிறது என்ற சந்தோச மிகுதியுடன் வானொலியை திருப்புகிறான். "நேற்று இனந்தெரியாதோரால் இரண்டு டாக்டர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்துப் பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலின் போது ஏற்பட்ட ரகளையில் ஐந்து இளைஞர்கள் பலியாகினர்."

இது எதுவும் தெரியாமல் தாக்கப்பட்தாகக் கூறப்பட்ட இரண்டு டாக்டர்களும் சுகமாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இலேசாக இருண்டிருந்த வானம் எதிர்பாராத விதமாகப் பலத்த மழையைப் பொழிகிறது. எரிந்த டயர்களின் எச்சக் கரிகள் மழை நீரினூடு கழுவப்பட்டுக் கடலினை அடைகிறது.

# அன்பளிப்பு

அந்த அச்சகம் வருட இறுதி என்பதால் கலண்டர், டைரி, மற்றும் அலுவலகப் புத்தகங்கள் என்பன அடிப்பதில் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. காலை நேரம் என்பதால் எல்லோரும் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தார்கள். அலுவலக அறையில் முதலாளி யாரோடோ தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். அதே அறையில் அவருக்குப் பின்னால் போடப்பட்டிருந்த மேசையில் இருந்த கம்பியூட்டரில் கிராஃபிக்ஸ் மூலம் எதையோ வடிவமைத்துக் கொண்டிருந்தான் விவேக். அச் சமயம் "டொட்... டொட்.." என்று அறைக் கதவு தட்டப்பட "யெஸ் கம்மின்.." முதலாளி குரல் கொடுக்க, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார் அந்த மனிதர். ஐம்பதைத் தாண்டிய வயது இருக்கும். தலைமுடி கறுப்பு வெள்ளை கலந்திருந்தது. வெள்ளை வேட்டி சட்டையுடன் தோளிலும் ஒரு வெள்ளைத் துண்டு தொங்க, கையில் சில கல்யாண அழைப்பிதழ்களுடன் வந்தவர் கண்ணாடியும் அணிந்திருந்தார். "அடடே.. நீங்களா! வாங்க வாங்க" வரவேற்றார் முதலாளி. "என்ன இந்தப் பக்கமா அச்சடிச்ச அழைப்பிதழ் போதாமல் போய்விட்டதோ"

"இல்லைங்க. அது தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. இப்போதான் எல்லோருக்கும் அழைப்பிதழ் கொடுத்துக் கொண்டிருக்கோம். இந்த வீதியில் கூட ஒருவருக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. கூடவே உங்களுக்கும் கொடுத்துட்டுப் போகலாம் என்று..."

"எனக்கா...! என்னங்க நீங்க நான் அச்சடித்துக் கொடுத்ததை எனக்கே கொடுக்கப் போறீங்களா..?"

"அப்படி இல்லீங்க. இது வருச இறுதி என்கிறதால எல்லா அச்சகக் காரங்களும் அச்சடிச்சுக் கொடுக்க மறுத்தபோது நீங்க இது கல்யாண விசயம் என்கிறதால பல சிரமத்திற்கு மத்தியிலும் நான் கேட்டதை விடவும் மிகவும் சிறப்பா அச்சடிச்சுக் கொடுத்தீங்க. சமயத்திலே உதவி செய்த உங்களை அழைக்காட்டி அது மரியாதை இல்லீங்க."

"இதெல்லாம் மனிதருக்கு மனிதர் ஒரு உதவிதானே...! இதுக்குப் போய் ஏன் பெரிய வார்த்தை எல்லாம் பேசுறீங்க."

"சரி சரி. உங்களுக்கும் நிறைய வேலை இருக்கு. எனக்கும் அதிக கல்யாண வேலை கிடக்கு. இந்தாங்க... அழைப்பிதழ் கட்டாயம் சனிக்கிழமை

> **"இதெல்லாம் மனிதருக்கு மனிதர் ஒரு உதவிதானே...! இதுக்குப் போய் ஏன் பெரிய வார்த்தை எல்லாம் பேசுறீங்க."**

கல்யாணத்திற்கு வந்திருங்க" வெற்றிலை பாக்கோடு அழைப்பிதழை முதலாளி வாங்கிக் கொண்டவாறே "சனிக்கிழமையா அன்றைக்கு நான் சிங்கப்பூர் போகிறதா இருக்கேன். அதனால் என்னால வரமுடியாத நிலை. என் சார்பாக நான் விவேக்கை அனுப்பிவைக்கிறேன். மிக முக்கியமான வேலை. பிறகு ஒருநாளைக்கு உங்க வீட்டுக்கு வாரேன். தயவுசெய்து கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்று பேசி அவரை அனுப்பிவைத்தார்.

விவேக் எதிர்பார்த்ததுதான். அச்சகத்தில் திருமண அழைப்பிதழ் அடிப்பவர்கள் முதலாளிக்கும் ஒரு அழைப்பிதழ் கொடுப்பது வழக்கம். அழைப்பிதழை வாங்கும் முதலாளி அந்தக் கல்யாணத்திற்குப் போகமாட்டார். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அவர்களைச் சமாளித்து விட்டு அச்சகத்தில் பணி புரியும் யாரையாவது அனுப்பிவைப்பார். இதற்கு முன்பு, கந்தசாமி, சுப்பிரமணியம், மகேந்திரன், எட்வின், அமீரலி.... என்று பலரையும் அனுப்பியுள்ளார். இம்முறை வேற யாரை யாவதுதான் அனுப்புவார் என விவேக் எதிர்பார்த்தான். "இந்தக் கல்யாணத்திற்கு மற்றவங்களை அனுப்பினா அவ்வளவு நல்லதில்லை. நல்ல பெரிய ஓடர் கொடுத்தவங்க. அதனால் ஒரு நல்ல அன்பளிப்பா வாங்கிக் கொண்டு நீயே போயிட்டு வா." என்று அழைப்பைக் கொடுத்த போது மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

அந்தச் சனிக்கிழமை வந்தபோது மணமக்களுக்கான அன்பளிப்பைத் தயார் செய்துவிட்டு உடுத்துவதற்குத் தயாரானான். அந்தக் கல்யாணம் ஒரு கோயிலில் இடம் பெறுவதால்



**மெய்யன் நட்ராஜ்-டோகா, கட்டார்**

வேட்டி சட்டையுடன் போனால்தான் மரியாதை. நீண்ட நாளாய் வாங்கி வைத்து உடுத்துவதற்குச் சந்தர்ப்பம் அமையாதிருந்த அந்தப் பட்டு வேட்டியை உடுத்திக் கொண்டவனுக்குள் மின்னலாய் ப்ரியாவின் ஞாபகம் எட்டிப் பார்த்தது. "அவளும் ஒரு பட்டுச் சேலையுடுத்திக் கொண்டு கூட வந்தால் தம்பதியாய் போய் வரலாம். அந்த நாள் என்று வருமோ?" மனசுக்குள் நினைத்துக் கொண்டான்.

இம்முறை ஊருக்குப் போயிருந்த போதுதான் எதிர் வீட்டிற்குப் புதிதாய் குடிவந்திருக்கும் அவளை விவேக் முதன் முதலாகக் கண்டான். மல்லிகைப் பூப்போன்ற மலர்ந்த முகம். குளிர்ச்சியான விழிகள், கருநாகம் சிறகடிப்பது போன்ற கார்கூந்தல் மந்த்ராவும், சிம்ரனும், ரம்பாவுமாய் மற்ற அழகுகள் பொங்கி நிற்கும் அவள் வீட்டிற்கு வந்தபோது அம்மாதான் அறிமுகப்படுத்திவைத்தாள். அறிமுகத்தின் அடுத்த நிமிடத்திலேயே ஏதோ நீண்ட நாள் பழக்கப்பட்டவர்கள் போல் அவளின் சிரிப்பும், பேச்சும் விவேக்கின் உள்ளத்தை வேரோடு பிடுங்கிப் போட்டன. அன்றே தீர்மானித்துவிட்டான், அவள்தான் வாழ்க்கைத் துணைவி என்று. அநேகமாய் அடுத்த முறை வீட்டிற்குப் போகும் போது அம்மாவிடம் கூறி அவளைப் பெண் கேட்க வேண்டும் என்ற தீர்மானத்தில் இருக்கிறான். அதனால் இன்று அவள் மானசீகமாய் விவேக்கின் கனவுகளில் கைகோர்த்து அவனோடு மனைவியாய் அந்த கல்யாணத்திற்குப் போகிறாள். அடுத்து ஒரு சந்தர்ப்பத்தில் நிச்சயம் கணவன் என்னும் உரிமையில் அவன் கைபிடித்துப் போகும் நாள் தூரத்தில் இல்லை.

கோவிலின் கல்யாண மண்டபம் நிரம்பி வழிந்தது. அறிமுகமில்லாதவர்களை அறிமுகமாக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். விவேக் சென்ற போது முகூர்த்த நேரம் முடிந்து விட்டிருந்தது. என்றாலும் யாரும் அழைக்காத போதும் நல்வரவு கருணா-கவிப்பிரியா திருமணம் என்று மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்த அந்த மலரோவியத்தை இரசித்த வண்ணம் நல்வாழ்த்துச் சொல்லி அன்பளிப்பை வழங்க வரிசையாய் நின்றவர்களோடு போய்ச் சேர்ந்தான். "பஸ்ஸிற்கும், இரயிலுக்கும், பாணுக்கும், அரிசிக்கும் இன்னும் பல்வேறு இடங்களிலும் வரிசைக்கு நின்று பழகிப் போன மக்கள் இங்கு புதுமணத் தம்பதிகளை வாழ்த்தவும் கூட வரிசையில் நிற்பதைக் கண்டு மனித வாழ்வில் இந்த வரிசை தவிர்க்க முடியாத ஒன்றோ" என்று வியந்த வண்ணம் மணமக்களை அண்மித்து அன்பளிப்பை நீட்டி வாழ்த்துச் சொன்னான். பதிலுக்கு அவர்கள் நன்றி சொல்லிய பின் "எங்கே வராமல் போயிடுவீங்களோ என்று நினைச்சேன் விவேக்" என்ற மணமகளின் குரல் கேட்டு முகம் பார்த்தான். அங்கே முகத்திற்கு மறைத்திருந்த மணப்பெண்ணிற்குரிய மெல்லிய வலை போன்ற தங்க நிறத் துணியை அகற்றி வெள்ளிநிலா போன்ற அந்தப் பிள்ளைநிலாச் சிரித்தது. அது ப்ரியா என்று எல்லோராலும் அழைக்கப்படும் கவிப்பிரியா. அதிர்ந்தவன் "நீங்களா!" என்றான். "நானேதான். அம்மா கடிதம் போட்டாங்களே கிடைக்கவில்லையா?" "இல்லை நான் வேறு யாரோ என்று நினைச்சுத்தான் எங்க கம்பனி சார்பாக வந்திருக்கேன்".

"அப்படியா! பரவாயில்லை எப்படியோ கல்யாணத்திற்கு வந்ததிலே சந்தோசம்" என்று கணவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். கை குலுக்கிவிட்டு வெளியேறிய போதும் கூட அவனால் நம்ப முடியாமல் இருந்தது, இப்படி அன்பளிக்க வந்த போது அவனது அன்பழியும் என்பதை!




## அங்கம் 13

"அவங்க டிமாண்ட் பண்ற எல்லா கோரிக்கைகளுக்கும் ஒத்துப் போக ணும்னு சொல்றீங்களா மிஸ்டர் விவேக்?"

"ஆமா...ஸார்... இனிமே அவங்களை ஏமாத்த முடியாது. காலையில ஆறு மணிக்குள்ளே அவங்க சொல்படி நாம நடக்காமே போனா... பெங்களூர் ஏர் போர்ட் ரன்வே பூராவும் பிணங்களா கிடக்கும்..."

"அதுக்காக.... உங்களையும்... பெல் லியப்பாவையும்... ஹரிதாவையும் பலி கொடுக்கப் போறீங்களா?"

விவேக் சிரித்தான்.

"அந்தப் பலி பீடத்துக்குள்ளே நுழை யத்தான் போறோம். அதிர்ஷ்டமும் ஆயுளும் எங்களுக்கிருந்தா மறுபடியும் உயிரோடு வரத்தான் போறோம்... அப்படி நாங்க உயிரோடு வர முடி யலைன்னா பாஸஞ்சர்ஸ் எல்லாரை யும் காப்பாத்தின பெருமையோடு செத் துட்டுப் போறோம். நூத்தி அம்பது உயிர்களுக்கு முன்னாடி....எங்க மூணு பேரோட உயிர், ரொம்ப ரொம்ப அற்பம்.

மறுமுனையில் அதி காரி குரல் நடுங்கி னார்.

"மிஸ்டர் விவேக்! எதையும்... யோசிச்சு செய்யுங்க."

"யோசிச்சுப் பார்த் துட்டேன் ஸார். இனிமே யோசிக்கவும் அவகாசம் இல்லை. விசாரணை கைதிகள் எட்டு பேரையும், உத்தம்சிங், குருகோவிந்தையும் உடனடியாக பெங்களூர் ஏர்போர்ட்டுக்கு கொண்டு வர ஏற்பாடுகள் நடந்திட்டி ருக்கு. நாளைக்கு காலையில சரியா



5.59க்கு சரணடையற வைபவம் நடக்கப் போகுது."

"விவேக்! உங்க திறமையில எங் களுக்கு நம்பிக்கை இருக்கு. அந்த நம் பிக்கையில நீங்க சொல்ற இந்த ஏற் பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கிறோம்."

"தாங்க்யூ ஸார்"

ரிஸீவரை கவிழ்த்த விவேக், கண் ணாடி டம்ளரில் ஆறிக் கொண்டிருந்த டீயை எடுத்து ஒரே மூச்சில் குடித்து விட்டு எழுந்தான்.

"ஸார்."

திரும்பினான்.

நின்றிருந்த பொலிஸ் அதிகாரி சொன்னார். "நீங்க போட்டிருந்த மும்பை கால் கிடைச்சுடுச்சு ஸார். டி.எஸ்.பி. சதானந்த் லைனில் காத்தி ருக்கிறார்."

விவேக் டெலிபோன் இருந்த பக் கத்து அறைக்கு ஓடினான். ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்.

"மிஸ்டர் சதானந்த்?"

"எஸ்!"

"நான் விவேக் பேசறேன். ஸாரி ஃபார் த ட்ரபுள்...ஃபிளைட் 509 ஹைஜாக் ஆன விவரம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அது சம்பந்தமா உங்ககிட்டே ஒரு உதவி. காதும் காதும் வெச்ச மாதிரி செஞ்சு முடிக்கணும்."

"சொல்லுங்க விவேக்..."

"நான் ஒரு அட்ரஸ் தர்றேன்... நோட் பண்ணிக்குங்க."

விவேக் தன் டயரியைப் பிரித்து- ஒரு அட்ரஸைப் படிக்க ஆரம் பித்தான்.

விடியற்காலை 5.30 மணி.

இன்னமும் இருட்டுப் பிரியாத அந்த வேளையில் கண்ட்ரோல் டவ ரோடு தொடர்பு கொண்டான் கவி.

"குட்மார்னிங் விவேக்..."

"உனக்கு இது குட்மார்னிங்காய் இருக்கலாம். ஆனால், எனக்கு மோச மான மார்னிங் இது."

"ராத்திரி முழுக்க நீ தூங்கலை போலிருக்கே. எங்க கோரிக்கைகளை நிறைவேத்தற முயற்சியில் மும்முரமாய் இயங்கியதை பார்த்துட்டுதான் இருந் தேன். ஒரு தனி விமானம் மூலமா. எங்க இயக்கத்தைச் சேர்ந்த பத்து பேர்களையும் மும்பையிலிருந்து கொண்டு வந்துட்டே நன்றி! எங்க ளோட கோரிக்கைகள்ல முக்கியமான கோரிக்கை ஹரிதா. அதைவிட முக் கியமான கோரிக்கை நீயும் பெல்லியப் பாவும்.

"தெரியும்"

"மணி அஞ்சரையாயிடுச்சு. பரி வர்த்தனையை ஆரம்பிச்சுடலாமா?"

"ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி ஒரு வேண்டுகோள்."

"என்ன?"

"விசாரணைக் கைதிகளாய் இருக் கிற உன்னோட இயக்கத்தைச் சேர்ந்த எட்டு ஆட்களை மொதல்ல ஃபிளைட் டுக்கு அனுப்பி வைப்போம். நீ உடனே நூறு பயணிகளை பத்திரமாய் லௌஞ் சுக்கு அனுப்பிடணும். நூறு பேரும் லௌஞ்சுக்கு வந்து பத்திரமாய் சேர்ந்த

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

பின்னாடி-நான், ஹரிதா, பெல்லி யப்பா, உத்தம் சிங், குரு கோவிந்த்- ரெண்டாவது தவணையில் வருவோம். வந்ததும் மீதி பயணிகளை அனுப்பிட ணும்."

"சரி மொதல்ல எங்க ஆட்களில் எட்டு பேரை அனுப்பு. அப்படி அனுப் பப்படறவங்க நடந்தே வரட்டும். எந்த வாகனத்திலும் அவங்களை ஏத்திகிட்டு வர வேண்டாம்."

"ஏன் அப்படி?"

"சொன்னபடி செய். எதிர்க்கேள்வி கேட்காதே."

"உத்தரவு தலைவரே!"

ரிஸீவரை அணைத்துவிட்டு விவேக் திரும்பினான். கமிஷனர் விஷ்ணுவர்த் தன் அந்த விடியற்காலை நேரத்திலும், வியர்த்த முகமாய் நின்றிருந்தார்.

"மிஸ்டர் விவேக்" அவர் குரல் கம்மியிருந்தது.

"ஸார்."

"நாம் மேற்கொண்டிருக்கிற முயற்சி?"

"நான் நினைக்கிறபடி நடந்தா சக்சஸ்"

விவேக் புன்னகைத்துக் கொண்டே பக்கத்து அறைக்குள் நுழைந்தான். கவியின் இயக்கத்தைச் சேர்ந்து எட்டு விசாரணைக் கைதிகளும், கெண்டைக் கால்களில் பாண்டேஜ் கட்டோடு, உத் தம்சிங் பக்கத்தில் குருகோவிந்தும் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களைச் சுற்றிலும் பொலிஸ் வளையம்.

விவேக் அந்த எட்டுப் பேரை மட் டும் வெளியில் கூப்பிட்டான்.

கவி ஒரு கையில் பிஸ்டலோடும், இன்னொரு கையில் டார்ச்சோடும் ஃபி ளைட் கதவருகே நின்றிருந்தான். அவ னுக்கு எதிரே தேவிகா மெஷின் கன்னை தோளில் சாத்தியபடி தெரிந்தாள்.

ரன்வேயில் அந்த விசாரணைக் கைதிகள் எட்டுப் பேரும் சந்தோஷ முகங்களோடு ஃபிளைட்டை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

"ஹூர்ர்ரேய்.. ஹூர்ர்ர்ரேய்."

"நம்ம ஆட்களுக்குத்தான் எவ்வளவு சந்தேஷம்?"

"இந்த விடுதலையை அவங்க எதிர் பார்த்திருக்க மாட்டாங்க. அதான் இவ்வளவு சந்தோஷம்" கவி கையிலி ருந்த டார்ச் லைட்டை உசுப்பி வெளிச் சத்தை நீளமாய் ரன்வேயில் அடித்தான். எட்டுப் பேரும் அந்த வெளிச்சத்தில் சிக்கிச் சிரித்தார்கள்.

தேவிகா உன்னிப்பாய் பார்த்தாள்.

"மொதல்ல ஓடி வர் றது ஜோத்ராம், கங் கோத்ரி அவங்களுக்குப் பின்னாடி பல்பீர், ஒரத் துல ஓடி வர்றது அஜித் குமார், சுபாகர் அவங் களுக்கும் பின்னாடி ஓடி வர்றது கேசர்சிங், ராம் பத்ரி, நரேந்திரன்."

"ஹூர்ர்ரேய்... ஹூர்ர்ரேய்.."

அவர்கள் எட்டுப் பேரும் ஓடி வந்து ஸ்டேர்ஸில் ஏறினார்கள். தேவிகா வையும் கவியையும் பார்த்து உற்சாகமாகக் கூச்சலிட்டார்கள். ஃபிளைட்டுக்குள் நுழைந்ததும் கவியை சூழ்ந்து அணைத் துக் கொண்டு முத்தமிட்டார்கள். தேவி காவைத் தூக்கிக் கொண்டார்கள்.

"நாங்கள் எதிர்பார்க்காத பரிசு..."

"அந்த நரகத்திலிருந்து விடுதலை..."

"கமிஷனரை வரவழைத்துச் சுட்டுத் தள்ள வேண்டும்."

கவி புன்னகையோடு கையமர்த்தி னான். "நண்பர்களே! நம்மால் முடியா தது ஒண்ணுமில்லை. இந்த வெற் றிக்குக் காரணமே தேவிகாதான்."

தேவிகா சிரித்தாள். "நம்ம வெற் றியை லாகூர் போய் கொண்டாடிக் கலாம். கவி... மொதல்ல ஒப்பந்தப்படி நூறு பயணிகளை வெளியே அனுப்ப ஏற்பாடு செய்."

கவி நண்பர்களிடமிருந்து நகர்ந்து இருக்கையில் திக்பிரமைபிடித்து உட் கார்ந்திருந்த பயணிகளிடம் வந்தான்.

"உங்கள்ல நூறு பேர்க்கு மட்டும் இப்போ விடுதலை. சீட்டை விட்டு ஒவ் வொருத்தரா எந்திரிச்சு வெளியே போகணும். முண்டியடிக்காமே வர ணும்..."

பயணிகள் பிரகாசமான முகங்க ளோடு லக்கேஜ்களை சுமந்து கொண்டு எழுந்தார்கள். சைலேந்தர் கதவருகே வந்து நின்று கொண்டு வெளியே பாகும் பயணிகளை "ஒன்.. ட்டூ.. த்ரீ" என்று எண்ண ஆரம்பித்து-

பத்து நிமிஷம் முடிவதற்குள்-

நூறு பேரை மட்டும் எண்ணி அனுப்பி விட்டு கதவைச் சாத்தினான். எஞ்சியிருந்த பயணிகள் மறுபடியும் இருண்ட முகங்களோடு இருக்கை களுக்குப் போனார்கள்.

"ஸாரி பசஞ்சர்ஸ்! எங்க இயக்கத் தோட ரெண்டாவது கோரிக்கை நிறை வேறியதும் நீங்களும் ஏர்போட் லௌஞ் சுக்கு போகலாம்" கவி சொல்லியபடி காக்பிட் அறைக்குள் நுழைந்து-மைக்ரோ போனை உயிர்ப்பித்தான்.

"விவேக்.."

"சொல்லு"-மறுமுனையில் காத் திருந்த விவேக் குரல் கொடுத்தான்.

"நான் சொன்னபடி நூறு பாஸஞ் சர்ஸை அனுப்பிட்டேன். இனிமே அடுத்த கோரிக்கைக்கு வரலாமா?"

"கவி.."

"ம்"

"கோரிக்கையில் ஒரு சின்ன சலுகை தரமுடியுமா?"

"என்ன?"

"நான், பெல்லியப்பா, உத்தம்சிங், குருகோவிந்த் மட்டும் ஃபிளைட்டுக்கு வர்றோம். ஹரிதா வேண்டாமே?"

"என்னது, ஹரிதா வேண்டாமா?"

"வேண்டாம். அவளுக்குப் பதிலா என்னோட ஒய்ப் ரூபலாவைக் கூட்டிட்டு வர்றேன்."

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## இளம் வயதுத் திருமணம்.....

"சரி வள்ளி! நீங்கள் கொஞ்ச நேரம் வெளியில் இருந்து கொண்டு றஞ்சனியை அனுப்பி வையுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். றஞ்சனி வந்தாள்.

"வாருங்கள் றஞ்சனி. இந்த கதிரையில் உட்காருங்கள். றஞ்சனி! உங்கள் புருஷனுடைய பெயர் என்ன?" என்றேன்.

"சிவராமன்" என்றாள்.

"அவர் இபபோது எங்கே இருக்கிறார்?" என்றேன்.

"இதே முகாமில் அவங்க அம்மாவுடன் தான் இருக்கிறார்" என்றாள்.

படுகிறது. அதுவும், தலைவர் என்ற பொறுப்பில் உள்ள நீங்கள் அவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முயற்சி செய்திருப்பீர்கள். அதைப் பற்றிக் கூற முடியுமா?" என்று கேட்டேன்.

"ஓம் தம்பி! எனக்கு தெரிந்த வரையில் றஞ்சனியின் அம்மா வள்ளியும், சிவராமனின் அம்மா செல்லம்மாவும் முகாமிலேயே மோசமானவர்கள். இவர்கள் 'இந்தியாக் காரர்கள்'. இவர்களுடைய பழக்கம் சரியில்லை. முகாமிலே யாழ்ப்பாணத்தார் இருக்கிறார்கள் தம்பி. இவர்கள்தான் இங்கே வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள். இவர்களுக்கு வெளிநாட்டுத் தொடர்புகள்



"உங்கள் பிள்ளைக்கு இப்போது எத்தனை வயது?" என்றேன்.

"ஒண்டரை வயது" என்றாள்.

"உங்கள் புருஷன் உங்களை பிரிந்த நாளில் இருந்து உங்களை சந்திக்க வில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை அவர் என்னை திரும்பிக்கூட பார்ப்பதில்லை" என்ற றஞ்சனி அழுதாள்.

"றஞ்சனி! நீங்கள் அவருடன் கதைக்க விரும்பவில்லையா? அல்லது முயற்சிக்க வில்லையா?" என்று கேட்டேன்.

"பல தடவை முயற்சி செய்தேன். அவர் என்னைக் கண்டு கொள்ளவே இல்லை" என்று தொடர்ந்து அழுதாள்.

"றஞ்சனி! உங்கள் பிரச்சினையை வேறு யாரிடமும் கூறினீர்களா?"

"எமது முகாம் தலைவர் செபமாலை யிடம் சொன்னேன். அவர் குடிகாரன். என்னிடமும் சாராயம் குடிக்க காசு வாங்கு வார். என் புருஷனிடமும் சாராயம் குடிக்க காசு வாங்குவார் என்றும் கேள்விப்பட்டுள் ளேன்."

"சரி றஞ்சனி! அனேக முகாம்களில் உள்ள முகாம் தலைவர்கள் லஞ்சம் வாங் குபவர்களாகவும், அதிகாரிகள் லஞ்சம் பெற ஏற்பாடு செய்து கொடுப்பவர்களுமா கவே செயற்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, தமது குடும்பத்தில் கூட தலைவர்களாக மதிக்கப்படாதவர்கள் பலர் முகாம்களில் தலைவர்களாக இருக்கிறார்கள். றஞ்சனி! நான் உங்கள் புருஷனுடனும், முகாம் தலைவரிடமும், வேறு சிலருடனும் இப் பிரச்சினை பற்றிப் பேச வேண்டியுள்ளதால், நீங்கள் இன்று முகாம் சென்று மூன்று நாட்களுக்குப் பின்பு வாருங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். றஞ்சனியும் வள்ளியும் விடைபெற்றனர்.

அடுத்த நாள் எனது தொடர்பாளர் மூலம் கொடுத்த தகவலின்படி காரையூர் முகாம் தலைவரும், சிவராமனும் வந்திருந்தனர். தலைவரை அழைத்து அமரும்படி கேட்டுக்கொண்டதுடன் சிவராமனை அரைமணி நேரம் தாம திக்கும்படி கேட்டுக்கொண்டேன். முதலில் முகாம் தலைவர் செபமாலையிடம் விபரங்களைப் பெற முடிவு செய்தேன்.

"வணக்கம் தலைவர்!" என்று தலைவரை வரவேற்றேன். தலைவரும் பதிலுக்கு "வணக்கம்" சொன்னார்.

"உங்கள் முகாமில் எத்தனை குடும் பங்கள் இருக்கின்றன தலைவரே?" என்று கேட்டேன்.

"இருநூற்றி பன்னிரண்டு குடும்பங்கள்" என்றார்.

"சரி தலைவரே! உங்கள் முகாமிலுள்ள வள்ளியின் மகள் றஞ்சனிக்கும், புருஷன் சிவராமனுக்கும் பிரச்சினையாகி இருவரும் ஒரு வருடமாக பிரிந்திருக்கிறார்களாமே! அது பற்றி கொஞ்சம் விபரம் தேவைப்

உண்டு. மன்னார் ஆட்கள் நல்லா உழைப் பவர்கள். நல்லா குடிப்பார்கள். திருகோண மலை ஆட்களும், தீவுப்பகுதியை சேர்ந்த வர்களும் சண்டைக்கும், மொட்டைக் கடிதம் போடுவதற்கும் கெட்டிக்காரர்கள். ஆனால் தம்பி! வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து வந்த இந்தியாக்காரர்தான், சின்ன வயசில் கல்யாணம் பண்ணுறது, வருஷத்திற்கொரு பொண்டாட்டி மாத்துவது போன்ற பாலியல் பிரச்சினைகளில் ஈடுபடுகிறார்கள்." தலைரு டைய கூற்றுக்களில் சில முக்கியமான தகவல்கள் கிடைத்திருந்தாலும் அவர் 'இந்தியாக்காரர்கள்' என்ற சொல்லைப் பாவித்ததும், பிராந்திய வேறுபாட்டுடன் பேசியதும் எனக்கு பிடிக்கவில்லை.

"சரி தலைவரே! எந்த மாவட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்த சாதி, சமயத்தை சேர்ந்தவர்களாக இருந் தாலும் ஏழை, பணக்காரர்களாக இருந் தாலும் இப்போது நமக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் அகதிகள். நீங்களும் அகதி, நானும்

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

அகதி என்பதைப் புரிந்து கொள்ள வேண் டும். வள்ளி குடும்பத்தையும், செல்லம்மா குடும்பத்தையும் இந்தியாக்காரர் என்று நீங்கள் கூறுவது என்னைச் சங்கடப் படுத்துகிறது. மலையக மக்கள்தான் நமது இலங்கை நாட்டின் தேசிய வருமானத்தின் ஆணிவேர்கள். அவர்களை வந்தேறு குடி களாக, கள்ளத்தோணியாக, வடக் கத்தியர்களாக, இந்தியாக்காரர்களாக கொச்சையாக குறிப்பிடுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவர்கள் கொத்தடிமைகள் போல லயன்களில் வசித்து, 10 வயதிலிருந்தே தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து, தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் திட்டமிட்டு அவர்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்க மறுத்ததால் முன் னேற்றமின்றியே வாழ்ந்து வருகிறார்கள். இம் மக்கள் மத்தியில் தோன்றிய தலை வர்கள் மக்களின் அடிப்படை வசதிகளில் கூட அக்கறை இல்லாதவர்களாகவும், குருவிச்சைகளாகவும் இருந்து விட்டதால் மலையக மக்கள் மிகவும் பின்தங்கிய சமூ கமாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சரி தலைவரே! நான் சொன்னதில் ஏதாவது தவறு இருக் கின்றதா?"

"இல்லைத்தம்பி! நீங்கள் சொல்லுவது சரி."

"சரி! இனி றஞ்சனி சிவராமன் பிரச் சினைக்கு வருவோம்."

தொடர்ந்து வரும்...

## அண்டை மண்டலத்திலிருந்து...

# தமிழக சிறப்புக் காவல்படை நாகப்பாவைக் கொன்றதா?

வீரப்பனால் கடத்தப்பட்ட முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பாவின் உடல் கண்டெடுக்கப்பட்டு ஒரு வாரமாகிறது. யாரால் அவர் கொல்லப்பட்டார் என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

தமிழக அதிரடி காவல் படையினர் (எஸ்.டி.எஃப்.) வீரப்பனைப் பிடிக்க வேண்டுமென்ற ஆர்வக் கோளாறினால் இசகு பிசகாக ஏதாவது செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகம்தான் வலுத்துக் கொண்டிருக்கிறது.

"தேவையில்லாமல் பிரச்சினையினை வளர்க்க வேண்டாம். பழைய குப்பையையெல்லாம் கிளற வேண்டாம். இப்போது நமது ஒரே குறிக்கோள் வீரப்பனைப் பிடிப்பதுதான்" என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிக்கை விடுக்கிறார்.

ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிதில் முடிந்துவிடுமா என்ன? நிச்சயமாக நாகப்பாவின் குடும்பத்தினரும் அவர்கள் ஆதரவாளர்களும் விடுவதாக இல்லை.

பிரேத பரிசோதனை அறிக்கை, உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே கிடந்த தோட்டாக்கள், நாகப்பாவின் டைரியில் காணப்படும் சில குறிப்புகள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு அவர்கள் பெரும் பிரச்சினை செய்யத் தயாராகி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

கதிகலங்கியிருக்கும் கர்நாடகத் தமிழர்கள் தங்களுக்கெதிரான கலவரம் வருமோ என்ற பீதியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்று காவிரி அல்லது வீரப்பன். ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று என ஏதாவது பிரச்சினை வந்து அவர்களை வாட்டுகின்றது.


இரண்டு வருடங்களுக்கு முன்பு நடிகர் ராஜ்குமார் வீரப்பன் பிடியில் 108 நாட்கள் இருந்து எந்தப் பாதிப்பும் இல்லாது வெளியே வந்து, இப்போதும் நலத்துடன் வாழ்கிறார்.

ஆனால் 106 நாட்களிலேயே அரசியல்வாதி நாகப்பாவின் கதை முடிந்துவிட்டது. தன் தம்பி அர்ஜுனன் கர்நாடக பொலிசார் கையில் மடிந்தபோது சம்பந்தப்பட்ட பொலிசாரைக் காப்பாற்றியது அப்போது உள்துறை அமைச்சராக இருந்த நாகப்பாதான் என்று நம்பும் வீரப்பன் பழிக்குப் பழி வாங்கிவிட்டது போலத் தோன்றினாலும், வேறு ஏதோ சக்திகள் தலையை நுழைத்து, அம் முன்னாள் அமைச்சரின் மரணத்திற்குக் காரணமாகிவிட்டார்கள் என்றுதான் தோன்றுகின்றது.

சடலம் கடந்த ஞாயிறன்று கண்டெடுக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தது வீரப்பனின் காசட்தான். நாகப்பா கதையில் ஆறாவது காசட்டாகும் அது.

அதில் தமிழக எஸ்.டி.எஃப்.பினர் தன்னைத் தாக்க, நாகப்பாவை விடுவித்துவிட்டுத் தப்பி ஓடியதாகவும், அப்போது நடந்த மோதலிலே நாகப்பா குண்டடிக்கு இலக்காகியதாகவும் வீரப்பன் கூறியிருந்தார்.

அலறி அடித்துக் கொண்டு கர்நாடக எஸ்.டி.எஃப்.பினர் வீரப்பன் குறிப்பிட்டிருந்த பகுதிக்குச் செல்ல நாகப்பாவின் அழுகிய சடலமே கிடைத்தது. பின்னர் நிகழ்ந்த வன்முறைகளில் சிறிய அளவில்தான் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள்.



மரணத்தை அறியப்படுத்தியது ஆறாவது காசட் என்றால், அதற்கு காரணம் தமிழக அதிரடிப்படையினர்தான் என்று அவரது முந்தைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தி, மேலும் சில விளக்கங்களை அறிந்து ஏழாவது காசட்டை வீரப்பன் அனுப்பியிருப்பதாகவும், அதில் என்னைத் தேடும் சாக்கில் மலைவாழ் மக்களைத் துன்புறுத்தினால் சும்மா இருக்கமாட்டேன் என அவர் எச்சரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

முதலில் வீரப்பன்தான் கொளத்தூர் மணி தூது வருவதில் எரிச்சலுற்று, இரு மாநில அரசுகளுக்கும் தனது சக்தி என்ன என்பதை நினைவுறுத்தும் வண்ணம், நாகப்பாவைக் கொன்றுவிட்டார். அதே நேரம் ஜெயலலிதா மீது இருக்கும் வெறுப்பின் காரணமாகவே, தமிழக எஸ்.டி.எஃப். மீது பழியைப் போட்டுவிட்டார் எனக் கருதப்பட்டது.

இப்போதோ வேறு மாதிரியான ஆதாரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

விட்டுச் சென்ற டைரியில் தன்னைப் பல இடங்களில் மாற்றி மாற்றி அழைத்துச் சென்றதாகவும், எப்போதும் உட்கார்ந்து கொண்டேயிருக்க வேண்டியிருந்ததாகவும், ஆனால் தன்னை வீரப்பன் குழுவினர் வேறு வழிகளில் துன்புறுத்தியதில்லை என்றும் நாகப்பா எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறத.

முக்கியமாக நாகப்பாவின் உடல் கிடந்த இடத்தின் அருகேயிருந்து 29 வெடித்த துப்பாக்கித் தோட்டாக்களும், மூன்று பயனளிக்காத தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மரங்களில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

நிச்சயமாக மோதல் நடந்திருக்கிறது. கர்நாடக எஸ்.டி.எஃப். உடல் கண்டெடுக்கப்பட்ட செங்கடிப் பகுதிக்கு அதற்கு முன் செல்லவேயில்லை. எனவே நாகப்பாவின் மரணத்திற்குத் தமிழகம்தான் காரணம் எனச் செய்திகள் கசியத் துவங்கியிருக்கின்றது.

நாகப்பா கொல்லப்பட்டு நான்கு, ஐந்து நாட்கள் கழித்தே அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காட்டு மிருகங்களினால் உடலுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. அப்படியானால் அந்த உடலை யாரோ பாதுகாத்திருக்கிறார்கள். தப்பிச் சென்ற வீரப்பன் அப்படிச் செய்திருக்க வாய்ப்பில்லை. சரி, இறந்துவிட்டார். கடைசி மரியாதையாக உடலையாவது பத்திரமாக வைக்கலாம் என்ற அக்கறை எஸ்.டி.எஃப்.பிற்குத்தான் இருந்திருக்கும். ஆனால் எந்த எஸ்.டி.எஃப்.? தமிழகமா, கர்நாடகமா?

செங்கடிப் பகுதியிலேயே கர்நாடக அதிரடிப் படைவீரர் ஒருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டதாக வந்த தகவல்களைச் சுட்டிக் காட்டிய ஜெயலலிதா, மோதல் நடந்திருந்தால் அது கர்நாடக எஸ்.டி.எஃப்.புடன்தான். தமிழகப் பொலிசார் அந்தப் பக்கமே போகவில்லை என்று கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.



அவரோ அப்படி எங்கள் வீரர் எவரும் இறக்கவில்லை, காணாமலும் போகவில்லை என்று கூறியிருக்கிறார். எந்த மாதிரியான சூழலில் நாகப்பா சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது பற்றிய விசாரணை தொடர்கிறது என்றும் கிருஷ்ணா ஜெயலலிதாவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

வீரப்பன் பல கொலைகளைப் புரிந்திருக்கிறார் என்றாலும் அவர்களெல்லாம் பொலிசாராகவோ, அல்லது அவருக்குத் தீங்கிழைத்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். கடத்திச் சென்றவர்களை அவர் கொன்றதே கிடையாது.

தனது தம்பி கொல்லப்பட்ட விடயமாக நாகப்பா மீது கோபமாய் இருந்திருந்தாலும், அச்சம்பவத்தில் அவருக்கு நேரடித் தொடர்பு கிடையாது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை அவர் காப்பாற்றிவிட்டார் என்பதுதான் வீரப்பனின் கோபம்.

மேலும் கடத்தியதன் நோக்கமே பணம் பறிக்க வேண்டுமென்பதே. கடந்த அக்டோபரில் நாகப்பாவிற்கு நெருக்கமான மகாதேவசாமி என்ற எம்.எல்.ஏ. வீரப்பனைச் சந்தித்திருக்கிறார். ஏதோ பேரமெல்லாம் நடந்திருக்கிறது, டைரியில் 40 கோடி ரூபாய் என ஒரு குறிப்பிருக்கிறது. அப்படியிருக்கையில் நாகப்பாவை வீரப்பன் கொன்றிருக்க வாய்ப்பில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவேயே உயிருடனோ, பிணமாகவோ கைப்பற்ற வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த வால்டர் தேவாரத்தின் ஆட்கள்தான் இப்படி ஏடாகூடமாகச் செய்துவிட்டு விழிக்கிறார்கள் என்றுதான் பலரும் நம்புகின்றனர்.

தகவல் கிடைத்திருக்கிறது. கர்நாடகத்தில் நுழைந்துவிட்டார்கள். வீரப்பனைப் பார்த்தும்விட்டார்கள், மோதல் நிகழ்ந்துவிட்டது. நாகப்பாவைக் கொல்லுவது அவர்கள் நோக்கமில்லை என்றாலும் கூட, அவர் மீது குண்டு பாயாமல் கவனமாக இருக்கத் தவறியிருக்கலாம் என்பதே பொதுவான கணிப்பாக இருக்கிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதையே ஜெயலலிதாவும், தேவாரமும் மறுபடி நிரூபித்திருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

அதுபோக, இனி அடுத்ததென்ன என்பதுதான் கேள்வி. வீரப்பன் ஆட்களைக் கடத்திக் கொண்டேயிருப்பார், கோடி கோடியாகக் கொடுத்து மீட்டுக் கொண்டேயிருக்க வேண்டியதுதானா? என்று பலர் வினவுகின்றனர்.

தாராளமாகப் பிடிக்கட்டும். ஆனால் கடந்த பத்தாண்டுகளாக இரு மாநில அரசுகள் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில்தானே முடிந்திருக்கின்றன. அப்பாவி மலைவாழ் மக்கள் கொல்லப்பட்டார்கள், சித்திரவதை அனுபவித்தார்கள், பலருடைய வாழ்க்கை பாழாகியது அவ்வளவுதானே.

**கானகன்**

வீரப்பன் துல்லியமாகக் கணக்குப் போட்டு ஆட்களைக் கடத்துகிறார், காசட்டுகளை அனுப்ப முடிகிறது, விழிக்கின்றனர் பொலிசார். எவ்வளவு படைகளை இறக்கினாலும் வீரப்பனது காட்டுக் கோட்டையினை அவர்களால் தகர்க்க முடியவே இல்லை. தூதனுப்பி, ஏதோ அவருடைய கோரிக்கைகள் சிலவற்றையாவது ஒத்துக்கொண்டு, அவரைச் சரணடைய வைப்பதுதான் உசிதமாகத் தெரிகிறது. தேடுதல் வேட்டையில் செலவாகும் கோடிக் கணக்கான பணமாவது மிச்சமாகும்.

# குஜராத்தில் பா.ஜ.க.வுக்குக் கிடைத்த வெற்றி

இந்தியாவில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற குஜராத் மாநில சட்டசபைத் தேர்தல்களில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெற்று மாநிலத்தின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியிருக்கிறது.


கடந்த நாட்களில் இனக் கலவரங்களால் பெரும் சர்ச்சைக்குரிய பிரதேசமாகவும் வன்முறைகள் நிறைந்த கொந்தளிப்பான மாநிலமாகவும் விளங்கிய குஜராத்தின் மாநில சட்டசபைத் தேர்தல்கள் கடந்த வாரம் நடந்து முடிந்துள்ளது.

182 ஆசனங்களைக் கொண்ட குஜராத் சட்ட சபையில் 127 ஆசனங்களைக் கைப்பற்றி பா.ஜ.க. அமோக வெற்றியீட்டியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் 50 இடங்களை மாத்திரமே கைப்பற்றியது.

1998ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின் போது பா.ஜ.க.வுக்கு 117 ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன. இம்முறை அக் கட்சி மேலும் 10 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 27ம் திகதி குஜராத்தின் கோத்திரா என்ற இடத்தில் தீவிர இந்துத்துவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் 57 பேர் ரயில் நிலையம் ஒன்றில் வைத்துக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்றை அடுத்து அங்கு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மூண்ட கலவரத்தில் சுமார் 1500 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இன வன்முறைகளின் போது மாநிலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பா.ஜ.கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் நரேந்திர மோடி உரிய நடவடிக்கை எடுக்காது கண்டும் காணாதது போல் இருந்தார் என்றும் பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் இம்முறையும் தேர்தலில் வெற்றி பெற்று நரேந்திர மோடி முதலமைச்சராகியிருக்கிறார்.



இவர் தனது தேர்தல் பிரசாரத்தை தீவிர இந்துத்துவ ஆதரவாளர்களை மையமாக வைத்தே நடத்தியிருந்தார்.

காங்கிரஸ் கட்சியினர் மிதமான கருத்துக்களை முன்வைத்து பிரசாரங்களை மேற்கொண்டு வந்த அதேவேளை பா.ஜ.க.வின் பிரசார உத்தி இந்துத்துவ அடிப்படைவாதிகளை மெய்சிலிர்க்க வைக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

காங்கிரஸுக்கு முன்பிருந்ததை விட மூன்று ஆசனங்கள் குறைவாகவே கிடைத்துள்ளன. 90 சதவீத இந்துக்கள் வாழும் குஜராத்தில் முஸ்லிம்களும் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களுமாக 10 சதவீத சிறுபான்மையினர் உள்ளனர். சிறுபான்மை மக்கள் அநேகமாக காங்கிரஸுக்கே வாக்களித்தார்கள்.

கலவரங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கோத்திரா பிரதேசத்தின் மொத்த ஆசனங்களையும் பா.ஜ.க. கைப்பற்றியது. முதலமைச்சர் நரேந்திர மோடி அவரது ஆசனத்தில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை விட 75000 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

குஜராத்தில் பா.ஜ.க.வுக்குக் கிடைத்த இந்த வெற்றி தேசிய ரீதியில் சரிந்துவரும் ஆதரவை நிலை நிறுத்த நல்ல உந்து சக்தியாக விளங்கும் என்று விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அடுத்த வருடம் அனேகமான மாநில சட்டசபைகளுக்குத் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. 2004ம் ஆண்டில் இந்தியப் பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது.

## ஆப்கானில் வளரும் மினி ஸ்கேட் கலாசாரம்

ஆப்கானிஸ்தானில் நிலைமை ரொம்பவும் முன்னேறிவிட்டது. தலிபான் ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு வீட்டை விட்டு வெளியே வர முடியாத அளவு கடும் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால் இப்போது தலைநகர் காபூலிலுள்ள ஹோட்டல்களில் குட்டைப் பாவாடை அணிந்த வெளிநாட்டுப் பெண்கள் பன்றி இறைச்சி பரிமாறுகிறார்கள்.



காபூல் நகரில் இருக்கும் சீன உணவகங்களில் அரைகுறையாக ஆடை அணிந்த சீன யுவதி கள் தங்கள் வனப்புக்களை இரசிக்கத் தக்க வண்ணம் நெளிவு சுழிவாக நடந்து வந்து ஆப்கான் ஆண்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் மதுபானம் பகிர்கிறார்கள்.

சீனத் தொழிலதிபர் ஒருவர் 80 இலட்சம் ரூபா செலவில் காபூல் நகரில் ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்தார். சீன உணவுகளும் மேல் நாட்டு மதுபான வகைகளும் அங்கு தாராளமாகக் கிடைக்கும் என்று விளம்பரம் செய்தார். வாடிக்கையாளருக்கு மேலதிக வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் மினி ஸ்கேட் அணிந்த சீன இளஞ்சிட்டுக்களைத் தனது ஹோட்டலில் வேலைக்கமர்த்தினார். நாளுக்கு நாள் வாடிக்கையாளர் தொகை பெருகிக் கொண்டே வருகிறது இந்த ஹோட்டலுக்கு.

இப்போது இங்கு சாப்பிட வர வேண்டுமாயின் முன்கூட்டியே ரிசேவ் செய்ய வேண்டும் என்ற அளவு பிஸ்னஸ் அதிகரித்து விட்டது. இந்தச் சீன ஹோட்டலைப் பின்பற்றி மேலும் பல மினி ஸ்கேட் உணவகங்களைத் திறக்கப் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த வர்த்தகர்கள் ஆப்கானுக்குப் படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் நீண்ட காலமாக அடைபட்டுக் கிடந்த ஆப்கான் மக்கள் இப்பொழுது புதிய ஆட்சியில் மேல்நாட்டுக் கலாசாரங்களுக்குப் படிப்படியாகப் பழக்கப்படுகின்றனர்.

# நெட்டிலிருந்து

## பசித் தீர்க்க எலியைச் சாப்பிட்டு உயிர் காத்த இந்திய விவசாயிகள்

நமது அயல் நாடான இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் விவசாயிகள் பசியின் காரணமாகத் தங்களது காய்ந்து போன வயலில் ஓடித் திரியும் எலிகளைப் பிடித்துச் சாப்பிடுகிறார்களாம். இப்போது இந்த எலி சாப்பிடும் பிரச்சனை தமிழக அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கும் விதத்தில் நீதிமன்றம் வரை போயிருக்கிறது.

காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதில் கடந்த நாட்களில் நிலவிய சர்ச்சை யாவரும் அறிந்ததே. அரசியல்வாதிகள் தங்களது கௌரவத்தை முன் நிறுத்தி பரஸ்பரம் அறிக்கை விட்டுக்கொண்டிருக்க வயல் நிலங்கள் நீரின்றிக் காய்ந்து போயின. தஞ்சை மாவட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

தஞ்சையிலுள்ள மிகவும் வறுமைப்பட்ட விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எலியைப் பிடித்துச் சாப்பிடத் தொடங்கியுள்ளனர்.

தஞ்சை விவசாயிகள் பசிக் கொடுமையால் எலி சாப்பிடுவது குறித்துக் கடந்த ஆகஸ்ட் மாதம் ஸ்டார் நியூஸ் அலைவரிசையில் விவரண நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பசியால் அவதிப்படும் குழந்தைகளும் பெற்றோரும் எலிகளைப் பிடித்து உண்ணும் காட்சி காண்பிக்கப்பட்டது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அஸ்விகுமார் என்ற வழக்கறிஞர் பொது நலன் அடிப்படையில் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். இது குறித்து விளக்கம் அளிக்குமாறு தற்போது தமிழக அரசு நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டுள்ளது.

## தேன்நிலவு வீடியோ கசெட் பமீலா அன்டசனுக்கு நட்டஈடு

பிரபல ஹோலிவூட் நடிகை பமீலா அன்டசனின் தேன்நிலவை வீடியோ படமாக்கி விற்பனை செய்த இன்டர் நெட் நிறுவனம் 7.41 இலட்சம் டொலர்களைப் பமீலாவுக்கு நட்டஈடாக வழங்க வேண்டும் என்று அமெரிக்க நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

1996ம் ஆண்டு டாம் லீக் என்பவரைத் திருமணம் செய்து கொண்ட பமீலா அவருடன் தேன்நிலவுக்காகச் சென்ற பல இடங்களுக்கும் பின்னால் அலைந்த இன்டர் நெட் நிறுவனக்காரர்கள் ஒட்டுமொத்தத் தேன்நிலவுக் காட்சிகளையும் இரகசியமான முறையில் வீடியோப் படமாக்கி விற்பனை செய்தனர்.

அமெரிக்காவில் மாத்திரமின்றி இந்தக் கசற்றுக்கள் உலகெங்கிலும் பரபரப்பாக விற்பனையாகின. பலகோடி டொலர்களை இந்த நிறுவனம் சம்பாதித்தது. சில தொலைக்காட்சி நிறுவனங்களும் கூட இதை ஒளிபரப்பின. தனது மானத்தை வாங்கிவிட்டதாக ஆத்திரப்பட்ட பமீலா அன்டசன் வழக்குத் தொடுத்தார்.

இப்போது 6 வருடங்களின் பின்னர் தீர்ப்பு வந்திருக்கிறது.

காசெற் விற்பனை மூலம் சம்பாதித்த பணத்திலிருந்து மேற்சொன்ன தொகையை பமீலாவுக்கும் அவரது முன்னாள் கணவருக்கும் வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

பட உதவி: மொஹமட் சப்ராஸ்



## இன்டர்நெட் காதல்கள்

### மீசை வைத்து காதலி



இது என் நண்பன் என்னைக் காதலித்த அனுபவம். ஒருநாள் தமாஷாக பெண் பெயரில் என் நண்பனுடன் பேச ஆரம்பித்தேன். அவன் நான் பெண் என்று நம்பிவிட்டான். இதை இன்னும் கொஞ்சம் தூரம் கொண்டு போய்ப் பார்ப்போம் என்று நினைக்க, அது எங்கேயோ போய் விட்டது.

ரவி எனக்கு நல்ல நண்பன்தான். எங்கள் ஆபீசில் நாங்கள் இருவரும் தான் 25 வயதுக்குக் குறைந்த இளைஞர்கள். அதனால் ட, தம் இதற்கொல்லாம் பெரிசுகளின் துணையை எதிர்பார்க்காமல் ஒன்றாகப் போவோம். பிரவசிங் சென்டருக்குப் போவதையும் ஒன்றாகத்தான் ஆரம்பித்தோம்.

சாட் செய்யும் போது நாங்கள் இரண்டு பேரும் பல தடவை பெண் பெயரில் போய் ஆண்களை அழ வைத்து விடுவோம். ஆனால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பெயரில் போவோம்.

ஒருமுறை நான் லீவில் வெளியூருக்குப் போயிருந்தேன். சாட் செய்யாமல் என்னால் இருக்க முடியாது என்பதால் ஒரு பிரவசிங் சென்டரைக் கண்டுபிடித்து அங்கே சாட் செய்தேன். அப்போதுதான் ரவி எங்கள் வழக்கமான அரட்டை அறையில் கண்ணில் பட்டான். வழக்கம் போல எங்களுக்குத் தெரிந்த பெண் பெயரில் அவன் சாட் செய்து கொண்டிருந்தான்.

அவனையும் எதற்கு விட்டுவைக்க வேண்டும் என்று நான் ஸ்வேதா என்று சாதுவான ஒரு பெயரில் போனேன். 'ஹாய்' சொன்னேன். அவன் 'சாரி, நான் ஆண் நண்பர்களைத்தான் தேடுகிறேன்' என்று பதில் சொல்லி வைத்தான். 'சாரி, இனிமேல் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன்' என்று சொல்லி விட்டு விலகுவது போல் பாவ்லா செய்தேன்.

'கோபித்துக் கொள்ளாதே, நான் உனக்கும் ஃப்ரெண்டாக இருக்க முடியும்' என்று பதில் அளித்தான். 'மவனே, மாட்டிக் கொண்டாய்' என்று பேச ஆரம்பித்தேன். எங்கள் 'நட்பு' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது. சில நாட்கள் கழித்து அவன் தான் ஆம்பிளை என்று என்னிடம் ஒத்துக் கொண்டான். நான் அவனுக்காகவே உருவாக்கிய ஈ-மெயில் முகவரியை அவனுக்குத் தந்தேன். அவன் தன் நிஜ முகவரியை எனக்குத் தந்தான்.

திரும்பி வந்த பிறகு அவன போக்கே தனியாக இருந்தது. பிரவுஸ் செய்ய என்னைக் கூப்பிடுவதில்லை. 'சாட்டிங்ல இன்ட்ரஸ்ட்டே போச்சு' என்று கதை விட்டான். எனக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் இது வசதியாகப் போனது.

மெல்ல என் 'பர்சனல் லைஃப்' பற்றியெல்லாம் அவனிடம் பேசி என் மேல் அவனுக்கு நம்பிக்கையை வரவழைத்தேன். அவன் ரெடியாக நம்பினான். பெண்களின் பாஷையில் அவனை விட நான் ரொம்ப ஸ்ட்ராங்.

நாள் ஆக ஆக இது எங்கேயோ சீரியசாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று எனக்கு உறைத்தது. கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது.

இன்னும் தீவிரமாக அவனுக்கு ஈ-மெயில்கள் அனுப்பினேன். எனக்குப் பிரச்சனைகள் நிறைய இருப்பதாகக் காட்டிக் கொண்டேன். அந்த மடையன் தன்னை பெரிய ஹீரோ என்று நினைத்துக் கொண்டு எனக்கு நிறைய அட்வைஸ் செய்தான். எப்போதாவது கொஞ்சம் அடல்ட்ஸ் ஒன்லி வகை ஜோக்குகளை அவனுக்கு அனுப்புவேன். அவன் கற்பனையை வளர்த்து விடத்தான். அவன் கற்பனை நன்றாகவே வளர்ந்தது. நட்பு-காதல் இரண்டும் கலந்த மாதிரி கிரீட்டிங் கார்டுகளை எனக்கு அனுப்பினான்.

அதற்கு நன்றிக்கடனாக ஸார்ச் இன்ஜின் ஒன்றில் தேடி எடுத்த புகைப்படம் ஒன்றை என் படம் என்று அனுப்பி வைத்தேன். அவனுக்குச் சந்தோசம் தாளவில்லை.

இதற்கிடையில் அவன் காதலிக்கும் பெண்ணாகவே நான் மாறிவிட்டிருந்ததால் அவன் யார் படமோ அனுப்பி என்னை ஏமாற்றியது எனக்குப் பிடிக்கவில்லை. இவனைப் பழி வாங்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். அவன் என் பெண் உருவத்திற்கு அடிமை ஆகியிருந்தான்.

அலுவலகத்தில் அவன் என்னுடன் அதிகம் பேசவில்லை. பேசும்போது சாட் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. திடீரென்று காணாமல் போய் விட்டால் இவன் என்ன செய்கிறான் பார்ப்போம் என்று காணாமல் போனேன். அதாவது சாட் செய்யவில்லை.

ஆனால் அதே சாட் அறையில் வேறு பெயரில் அவன் மீதும் ஒரு கண் வைத்துக் கொண்டு சாட் செய்து கொண்டிருந்தேன். அவனிடமிருந்து நிறைய ஈ-மெயில் வந்தது எனக்கு. 'நேற்று ஏன் வரவில்லை?' என் மேல கோபமா? உனக்கு உடம்பு சரி இல்லையா? நான் ஏதாவது தப்பாகப் பேசிவிட்டேனா?' என்பதில் தொடங்கி 'உனக்குக் கல்யாணமா?' என்று சீரியஸாக மெயில் அனுப்பியிருந்தான். நான் பதில் அனுப்பவே இல்லை.

ஆபீசில் அவன் நடவடிக்கை இரண்டே நாளில் மாறிவிட்டது. யாருடனும் பேசுவதில்லை, சிரிப்பதில்லை, தன் வேலையைக் கூட அவன் சரியாகச் செய்வதில்லை.

'ஏன் கொஞ்ச நாளா ஒரு மாதிரியா இருக்கே?' என்று நான் கூட ஒரு தடவை அவனைக் கேட்டுப் பார்த்தேன். 'பாவம், ஏதோ லவ் பிராப்ளம் போலிருக்கிறது' என்று தமாஷாக எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

ஆனால் எனக்கு அவன் இவ்வளவு சீரியஸாகப் போனது கொஞ்சம் பயமாக இருக்கிறது. உன் வம்பே வேண்டாம்டா சாமி என்று அவனுடன் சாட் செய்வதை அன்றோடு நிறுத்தினேன்.

ரவி சில நாட்கள் பைத்தியம் பிடித்த மாதிரி இருந்தான். அவன் முட்டாள்தனமாக எதுவும் செய்து கொண்டுவிடக் கூடாதே என்று நான் அவன் எங்கே போனாலும் துரத்தித் துரத்திப் பேசினேன். இது நடந்து இரண்டு மாதங்கள் இருக்கும். இப்போது அவன் சகஜமாக இருக்கிறான். ஆனால் பெண் வேடம் போடுவதில்லை. நான் கூப்பிட்டால் வருவதில்லை.

நான் வழக்கம் போல் பெண் பெயரில் கலாட்டா செய்கிறேன். அவன் எப்போதாவது நான் பெண் என்று நினைத்துக் கொண்டு என்னிடம் ஹாய் சொல்வான். நான் அலட்சியப்படுத்திவிடுவேன். பதிலுக்கு ஹாய் சொல்லி புதிதாக ஒரு 'உறவை' வளர்க்க வேண்டும் என்ற துறுதுறுப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறேன். என்றைக்காவது அவுட் ஆஃப் கன்ட்ரோல் ஆகி நான் அவனுக்கு வலியப் போய் ஹாய் சொன்னால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'நெட்டிலிருந்து' பகுதிக்கான தகவல்களை முரசின் ஈ-மெயில் முகவரி மூலமாக அனுப்பி வைக்கலாம்.
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# நத்தார் சிறப்புக் கதை

## கிறிஸ்மஸ் பரிசு

**இந்திலன் - அமெரிக்கா**

இன்னும் இரண்டு நாட்களில் கிறிஸ்மஸ் வந்துவிடும். ஊரில கிறிஸ்மஸ், நிறைய வருஷங்களுக்கு பிறகு களைகட்டி இருந்தது. எங்கு பார்த்தாலும் சவுக்கு மரங்கள் வெட்டிக்கொண்டு போற ஆட்களும், கேக் பேக்கரிக்கு கொண்டு போற ஆட்களுமாய் ஊரே கலகலப்பாய் இருந்தது. இந்தச் சந்தோசத்துக்குச் சம்பந்தமில்லாமல், ஊரில் ஒரு குடும்பம் இருக்கிறது என்றால் அது "செல்வியின்" குடும்பமாகத்தான் இருக்கும்.

நான்கு பெண் பிள்ளைகள். அதுவும் வயதுக்கு வந்த பிள்ளைகள். கணவன் வெளிநாட்டில் உழைக்கும்போது, சொந்தக்காரர், அறிஞ்சவ தெரிஞ்சவ, என்று எல்லாருக்கும் வாரிக் குடுத்தாள். "எதுக்கு இப்பிடி எல்லாருக்கும் வாரிக் குடுக்கிறாய்" என்றுகேட்ட ஆட்களுக்கு "கடவுள் வசதியானவங்கள நம்பித்தான் ஏழைகளை படைக்கிறார்" என்று சொல்லி விட்டு, தன்னால் இயலுமான வரை உதவி செய்தாள். ஆனால், கணவன் வருத்தப்பட்டு, ஒரு கையும் காலும் வழங்காமல் வீடு வந்தது டன் எல்லாம் மாறிப் போய்விட்டது.

தாங்களாக வலிய வந்து சம்மந்தம் பேசின ஆட்கள், இவள் நொந்து போயிருக்கிறாள் என்றுகூடப் பார்க்காமல், வேற இடம் பாத்திட்டம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். இருந்த சேமிப்பு எல்லாவற்றையும் வைத்தியத்துக்குச் செலவளித்தாள். பிள்ளைகளின் படிப்பு, வீட்டுச் செலவு, கணவனின் வைத்தியம் என்று, செலவுகளைப் பார்த்து மலைத்துப்போனாள். சேமிப்பு கரைந்ததைப் போல, சொந்தங்களின் வேஷங்களும் கலைந்தபோதுதான், இவ்வளவு நாளும் தன்னுடன் இருந்த ஆட்களின் சுயரூபம் அவளுக்குத் தெரிந்தது. இப்போது, அவள் உதவிசெய்த எல்லாரும் நன்றாக இருக்கிறார்கள், இவள் குடும்பம் மட்டும் கேட்பாரில்லாமல் ....

"எனக்கு நம்பிக்கையிருக்கு, ஆண்டவர் எங்களை ஒருக்காலும் கைவிடமாட்டார். எங்கட வீட்டில ஏதோ விசேசம் நடக்கப்போகுது என்டு, என்ர மனம் சொல்லுது. கடவுள் நன்மையத் தரேக்க இரண்டு கையாலயும் வாங்கிற நாங்கள், அவர் துன்பத்த தரேக்க மட்டும் கை பின்னால கட்டிக்கொள்ளுறது ஞாயமில்ல செல்வி" இவள் படுகின்ற வேதனையைப் பார்த்துவிட்டு, கணவன் காலையில் சொன்ன வார்த்தைகள் இன்னும் காதில் கேட்டுக்கொண்டிருந்தது. அவர் ஆறுதலுக்காகச் சொன்னது, என்றாலும் அதிலும் உண்மையிருக்கிறதுதான். என்ன இருந்தாலும் பாவிமனம் கேட்குதில்லையே. அவளும்தான் என்ன செய்ய முடியும்?

இந்த முறையும் பிள்ளைகளுக்கு உடுப்பு வாங்குவதற்கோ, பலகாரம் செய்வதற்கோ கையில் ஒரு சதமும் இல்லை. வளர்ந்த பிள்ளைகள், நாலு பேர் முன்னால் பெருநாளண்டு... எப்பிடி நிக்குங்கள்? பிள்ளைகள் வாய்திறந்து ஒன்றும் கேட்காதுகள். அது இவளுக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் பெத்தமனம் கேட்கவில்லை. நித்திரையாயிருந்த கணவனைப் பார்த்தாள். "இப்போதைக்கு எழும்பமாட்டார். எதுக்கும், தண்ணியை எடுத்து பக்கத்தில வச்சுவிட்டால் எழும்பினா குடிப்பார். பிள்ளைகள் கோயில் துப்பரவாக்க போயிருக்கினம். இப்போதைக்கு அவையளும் வராயினம். கோயில் வரைக்கும் போயிட்டு வருவம்." தனக்குள்ளே முடிவு செய்தவளாகத் தண்ணீரை எடுத்து வைத்துவிட்டுப் புறப்பட்டாள்.

முன்னர் இரண்டொரு தடவை சொந்தக்காரரிடம் கடன் கேட்டிருக்கிறாள்.

"புருஷன் உழச்சு தரப்போறதில்ல, வளந்து உழச்சுத் தர ஆம்பிளப்பிள்ளையும் இல்ல, எத நம்பி கடன் தாறது?" என்ற அவர்களின் கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை. கடன் கேட்பதை நிறுத்திவிட்டாள்.

யாரை நம்பி இவர்களுக்கு உதவி செய்தனான்? இவர்கள் திரும்பி உதவி செய்வார்கள் என்றா செய்தன்? இல்லை, கடவுளை நம்பி கஷ்டப்பட்டவையளுக்கு உதவி செய்தனான். அதனால, கடவுள்தான் இப்ப எனக்கு உதவ வேணும். எனக்கு உதவிசெய்ய வேற ஆட்களும் இல்லை. தனக்குள்ளே பலதையும் யோசித்துக்கொண்டு கொஞ்சத் தூரம் நடந்திருப்பாள்.

வீட்டின் உள்ளே வந்து பத்து நிமிடங்கள் கடந்திருக்காது, "இதுதான் எங்கட வீடு, உள்ள வாங்கோ" என்று இளைஞன் ஒருவனுக்குச் சொல்லியபடி மூத்த மகள் வந்துகொண்டிருந்தாள். "அம்மா இவர் உங்களத்தான் தேடுறார். ஸ்டெல்லா மாமிதான் என்ன கண்டு இவர வீட்ட கூட்டிக்கொண்டு போகச் சொன்னவ."

"அப்ப தங்கச்சிகள் எங்க?" மகளைக் கேட்டாள். "கோயில் துப்பரவாக்கி முடியேல்ல அம்மா. இவர கூட்டியரத்தான் வந்தனான். நான் போயிட்டு வாறன்." சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

செல்வி, புதியவனை நோக்கித் திரும்பினாள். "தம்பி, நீங்கள்..? எனக்கு உங்கள அடையாளம் தெரியேல்ல." அவனை உற்றுப் பார்த்தபடி சொன்னாள்.

"நீங்கதானே செல்வி அக்கா?" கேட்டான்.

"ஓம், நீங்கள்?"

"நான் சொலமன்ர மகன். பேர் ஜேக்கப்." சொல்லிவிட்டு அழகாகச் சிரித்தான்.

"ஓ!.. இப்ப ஞாபகம் வருகுது. தம்பி, அம்மா ஐயா எப்பிடி இருக்கினம்?"

"எல்லாரும் நல்லா இருக்கினம். அக்கா, அன்டைக்கு நீங்க மட்டும் உதவி செய்திருக்காட்டி, அந்த நிலைமையில எங்களுக்கு ஒருதருமே உதவி செய்திருக்க மாட்டினம். இப்ப நான் உயிரோட இருந்திருக்கவும் மாட்டன்." கன்கலங்கச் சொன்னான்.

இந்தியன் ஆமி யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில், படித்துக்கொண்டிருந்த இவனையும் பிடித்து காங்கேசன்துறையில் வைத்திருந்தவங்கள். ஒருமாதிரி ஆளை வெளியே எடுத்து, வெளிநாடு அனுப்புவதற்கு இவள்தான் பண உதவி செய்தாள். ஆனால் இவ்வளவு நாளில் மறந்தே போய்விட்டாள். எப்பவோ செய்த உதவிக்கு, இப்ப ஒருத்தன் வந்து நன்றி சொல்கிறான். அதை நினைக்க, அவளுக்கு மனம் நிறைந்தது போல இருந்தது.

"உங்களப் பற்றி எல்லாம் கேள்விப்பட்டன். அக்கா, நான் வந்த விசயத்த சொல்லுறன். வீட்டில கலியாணப் பேச்சு எடுத்திச்சினம். எனக்கு உங்கட மூத்த மகளைக் கலியாணம் செய்ய விருப்பம் என்டு சொன்னனன். எல்லாருக்கும் அதுதான் விருப்பம். தாங்கள் வந்து கேட்டால் நல்லாயிருக்காதாம். நான் உங்களுக்கு செய்திற நன்றிக்கடன் என்டால, என்னையே கேக்கச் சொன்னவள்."

எந்தவித பதற்றமும் இல்லாமல் தைரியமாய் சொன்னான்.

படுத்திருந்த கணவனைத் திரும்பிப் பாத்தாள். இந்த இன்ப அதிர்ச்சியால் அங்கு ஒரு அதிசயம் நடந்து கொண்டிருந்தது. இவ்வளவு நாட்களும் வழங்காமல் இருந்த கை காலை, அசைத்து எழுந்திருக்க முயன்ற கணவனைப் பார்த்து, அதிர்ச்சியில் அப்படியே நின்றுவிட்டாள். இவள் அசையாமல் நிற்பதைப் பார்த்து, ஜேக்கப் அவர் அருகில்சென்று எழும்பி இருப்பதற்கு, அவருக்கு உதவி செய்தான்.

இவ்வளவு நாட்களும் மனதில் இருந்த பாரமெல்லாவற்றையும் அழுது தீர்த்துவிடுபவள் போல, கணவன் மடியில் முகம் புதைத்து "ஓ.." எனக் கதறி அழுதாள். கணவன் மனைவி இருவரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. மெதுவாய் அழுகயை நிறுத்திவிட்டு, கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

"தம்பி சீதனம் எண்டு தர்றதுக்கு எங்களிட்ட...." அவளைக் கதைக்க விடாது, இடைமறித்து,

சிரித்தபடி சொன்னான்:

"அப்பிடிப் பார்த்தால், நான்தான் உங்களுக்கு தரவேண்டி வரும். சீதனமெல்லாம் வேண்டாம். நீங்கள் தந்த காசு கொண்டுதிருக்கிறன். கட்டாயம் நீங்கள் அதை வாங்க வேணும்." சொல்லியபடி காசை நீட்டினான்.

இரு கைகளையும் நீட்டி வாங்கிக்கொண்டாள்.

"கடவுள் நன்மையத் தரேக்க இரண்டு கையாலயும் வாங்கிற நாங்கள், அவர் துன்பத்த தரேக்க மட்டும் கைய பின்னால கட்டிக்கொள்ளுறது ஞாயமில்ல செல்வி"

கணவன் சொன்னதை மீண்டும் நினைத்துக்கொண்டாள். அவரின் நம்பிக்கை வீண் போகவில்லை.

"தம்பி உங்களுக்கு எப்பிடி நன்றிசொல்லுறதெண்டே தெரியேல்ல." நா தழுதழுக்க செல்வியின் புருஷன் சொன்னார்.

"கிறிஸ்மஸ் அண்டு நிச்சயதார்த்தத்தை வைக்க வேணும் என்டு எனக்கு விருப்பம். உங்கட விருப்பம் எப்பிடி?" ஜேக்கப் கேட்டான்.

"இது ஆண்டவர் எங்களுக்குத் தந்த பெரிய பரிசு. கிறிஸ்மஸுக்கு இதைவிட ஒரு பெரிய பரிசு இருக்கா? எங்களுக்கும் அதுதான் விருப்பம். கடவுள் செய்த இந்த நன்மையைக் கொண்டாட அதைவிட வேற சரியான நாள் எது தம்பி?" செல்வியின் கணவன் தொடர்ந்து சொன்னார்.

"அப்பிடி என்டால், அம்மா ஐயாவ பின்னேரமே முறைப்படி கலியாணம் கேக்க வரச் சொல்லுறன். அப்ப நான் போயிட்டு வாறன்." மீண்டும் புன்னகைத்துவிட்டு ஜேக்கப் வெளியேறினான்.

கணவன் சுகமானதையும், தாங்களும் கிறிஸ்மஸ் கொண்டாடப்போவதையும் நினைக்க, அவளுக்கு ஒரே சந்தோசமாய் இருந்தது.

கடவுள் தன்னுடைய பிறந்த நாளை, ஏதோ ஒரு வழியில், தன்ர பிள்ளைகளைக் கொண்டாட வைப்பார்.

"செல்வி..எங்களை நம்பி, கடவுள் வேற யாரையாவது கஸ்டப்பட்டவ வைச்சிருப்பார். இதில கொஞ்ச காசைக் கொண்டுபோய் கோயில்ல குடுக்க மறந்திட வேண்டாம்." செல்வியின் கணவன் சந்தோசத்துடன் சொன்னார்.

" கட்டாயம் குடுக்கிறன். இப்பவே போய் குடுத்திட்டு, பிள்ளைகளையும் கூட்டி வாறன்." என்றபடி, செல்வி வெளியேறினாள்.

"செல்வி இந்த முறை கிறிஸ்மஸ் கொண்டாட இல்லயே?"

செல்வியின் மச்சாள் அவளைக் கண்டதும் கேட்டாள்.

சோதனையையும் தந்து அதிலிருந்து தப்பவும் வழிசெய்யும் ஆண்டவரின் செயலை எண்ணி வியந்தவாறு,

"மச்சாள், மூத்தவளுக்கு கிறிஸ்மஸ் அண்டு கலியாண எழுத்து. மாப்பிள்ளை சொலமன் அண்ணையின்ர மகன் ஜேக்கப். வெளிநாட்டில இருந்து வந்திருக்கிறான். ஊரில எல்லாரையும் விட நாங்கள்தான் கிறிஸ்மஸ் சிறப்பாய் கொண்டாடப்போறம்" அமைதியாய் சொல்லிவிட்டு நடந்தாள்.

கன காலத்துக்குப் பின், முதல் தடவையாக சிரித்த முகத்துடன் தோன்றும் செல்வியை கண்டவர்கள், அந்த ஆனந்தத்திற்கு அர்த்தம் தெரியாமல், அவளை அதிசயமாகப் பார்த்துக் கொண்டார்கள்! ! !

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> -காதில பூ கந்தசாமி-

இந்த முறை நான் ஒரு அருமையான கலையிலக்கியச் சொற்பொழிவொன்றை நடத்தப் போகிறேன்.

கலையிலக்கியமெண்டவுடனயே காதைப் பொத்திற பேர்வழிகள் நீங்களெண்டது எனக்கு நல்லாத் தெரியும். ஆனால் இது ஒரு திறிலான கலை, நீங்கள் நல்லா ருசிப்பீர்கள், சொறி ரசிப்பீர்கள் எண்ட நம்பிக்கை எனக்குண்டு.

இந்தக் கலையின் பெயர் கொலை. இது இலக்கியமாயும் இருக்கு. கொல்வது கலை. கொன்றபின் அது இலக்கியம். அதால இதைக் கலை இலக்கியமெண்டும் சொல்லலாம்.

எங்கட நாட்டில இந்தக் கலை நல்லா வேருன்றி விழுதூன்றி வளந்து வருகிறதோட, பத்திரிகைகளாலையும் நல்லா ஊக்குவிக்கப்பட்டு சிலாகித்துப் பேசப்படுவது கலைஞர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தி. இப்ப இது பல்கலைக் கழகங்களிலயும் பாடசாலைகளிலயும்கூட பரவிவிட்டது. இதற்காக நாம் எங்கள் கல்விமைச்சைப் பாராட்ட வேண்டும். கூடிய விரைவில் எங்கட பாடத்திட்டத்தில சேர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை.

கிட்டடியில ஒரு வாங்குப் பிரச்சினைக்காக தனியார் கல்வி நிறுவனமொன்றில ஒரு மாணவன் சக மாணவனால கொலை செய்யப்பட்டதை அறிந்திருப்பீர்கள். இந்தளவுக்கு இக் கலை சாதாரண மாணவர்களுக்கு வலு சுலபமாக கைவரப் பெற்றுள்ளது.

நான் அண்மையில் பார்த்த ஒரு ரீவி செய்தியில் வெளிநாடொன்றில் யாரோ ஒருவன் தனது கடைசி பியர் போத்தலை நண்பன் எடுத்துக் குடித்துவிட்டதற்காக நண்பனைக் கொலை செய்த சம்பவமொன்றைக் கேள்விப்பட்டேன். அட இத்தனை அற்ப விடயத்துக்காகவும் அங்கு இக் கலையைப் பயன்படுத்துகிறார்களேயென்று வியந்தேன். ஆனால் மறுநாளே வாங்கில் இடம் பிடிக்கும் பிரச்சினைக்காக எங்கள் மாணவர்கள் கொலை செய்து காட்டி அந்தச் சாதனையை முறியடித்துவிட்டார்கள் என்பதைக் கண்டு பிரமித்துப்போனேன்.

அற்ப காரணத்துக்காக மேற்கொண்ட அதியுயர் கொலைக்கான விருது இலங்கைக்கே சேருமென்பது திண்ணம். இந்தக் கொலையை உலக சாதனைக்காக கின்னஸ் புத்தகத்தில் பதிவதற்கு விண்ணப்பிக்கும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல சில நாட்களுக்கு முன்னால், எங்கட பல்கலைக் கழகமொன்றில், ராகிங்குக்கு எதிரான மாணவர்களை எதிர்த் தரப்பு மாணவர்கள் தாக்கி ஒரு மாணவனைக் கொலை செய்த சம்பவத்தை அறிந்திருப்பீர்கள். சொற்ப காலத்துக்கு முன்னால் ராகிங் செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள் ஓரிரு பல்கலைக் கழகங்களில் மரணித்ததையும் நல்லா அறிந்திருப்பீர்கள்.

எங்கட மாணவர் சமுதாயம் கலைத் துறையில நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறதை எண்ணும்போது பெருமையா இருக்கிறது. எதிர்காலத்தில் பென்சில்கூட முறித்ததற்காக பாலர் வகுப்பில் கொலையென்ற அளவுக்கு நாம் முன்னேறிவிடுவோம் என்ற நம்பிக்கை எமது மாணவர் சமுதாயத்தைப் பார்க்கும் போது எனக்கு ஏற்படுகிறது. இதில் மேலும் முன்னேற நானும் சில உத்திகள், உபாயங்கள், புத்திமதிகள் சொல்லி உதவலாமென நினைக்கிறேன்.

கொலை செய்வது மிகக் கடினமான வேலையல்ல. பார்க்கப் போனால் அதுதான் மிகச் சுலபமானதாக எனக்குத் தோன்றுகிறது. ஒருவன் வாழ்வதுதான் மிக மிகக் கடினமான காரியம். சாவது ரொம்பச் சுலபம். சாக்காட்டுவது அதிலும் சுலபம்.

பொம்மை கேட்டு அழுகின்ற குழந்தையை எப்படி நிறுத்துவது? நீங்கள் ஆயிரம் சமாதானம் சொல்லிப் பார்த்தாலும் அது மணிக்கணக்காய் அழுது தீர்க்கும். சுலபமான வழி கொலை பொன்றுதான். கொன்றுவிட்டால் அழுகையும் இல்லை பொம்மையும் இல்லை. பிள்ளை இல்லையென்று யோசித்தால் பிரச்சினை தீராது. பிள்ளை இருந்தால் அழுகையும் இருக்கும். அழுகை வேண்டாமென்றால் பிள்ளை வேண்டாமென்பதை சிம்பிளா முடிவெடுக்கத் தெரிய வேணும். இதுதான் கொலையென்ற கலையின் சிம்பிளான தத்துவம்.

இதைப் புரிந்துகொள்பவருக்கே இக் கலையைக் கைவரப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வாங்குப் பிரச்சினையில் மாணவன் எப்பிடி முடிவெடுத்தான் என்பதை சற்று ஆராய்ந்து பாருங்கள். வாங்கில் இடம் வேண்டும். அருகிலிருந்த மாணவன் இடத்தைப் பிடித்து வைத்திருக்கிறான். மாணவன் இருந்தால்தானே இடமில்லாமல் போகும். சரி, மாணவனைக் கொன்று விட்டால் இடம் கிடைத்துவிடுகிறது. வலு சிம்பிள் முடிவு! இல்லையா?

இப்படிச் சிம்பிளாக முடிவெடுக்கிறதுக்கு நாம் எங்கள் மனதைத் தயார்ப்படுத்திக் கொள்வதுதான் இக் கலையைப் பயில்வதற்கான முதற் காரியம். அதாவது இது நியாயங்களை சமநிலைப்படுத்தும் பயிற்சி. என்ன பெரிய சொல்லாப் போடுறனெண்டு முழுக்காதீர்கள். அதாவது நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் எங்கள் மனது ஏதோ ஒரு காரணத்தைக் கூறி நியாயப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குற்ற உணர்ச்சி தாக்கி நீங்கள் மன நோயாளியாகிவிடுவீர்கள்.

ஒருவனை ஏசினால் அவன் அவ்வாறு ஏசப்பட வேண்டியவன்தான் என்பதை உங்கள் மனது காரணம் கற்பித்துக் கொள்ள வேண்டும். அவன் அளவுக்கு மிஞ்சிப் பகிடி விடுறான், அதற்கு இப்பிடிச் செய்யாமக் குடுத்தாத்தான் சரி என்று உங்கள் மனது நம்ப வேண்டும்.

கொலையும் அதுபோலத்தான். ஒருத்தன் பகிடி விடுவதற்கு ஏசுவது சரியென்று, உங்கள் மனது அவன் செயலுக்கும் உங்கள் செயலுக்குமான நியாயங்களைச் சமப்படுத்துவதுபோல, ஒருத்தன் உங்களை விமர்சித்தால், அல்லது உங்கள் விருப்பப்படி நடக்க மறுத்தால், அதையும் விடுங்கள், உங்களுக்கு மாறாக இருந்தாலே கொலை செய்வது என்பதை உங்கள் மனது ஒப்புக்கொள்ளப் பழக்க வேணும். அதைப் பழக்கி விட்டீர்களோ, பிறகு எந்தக் கொலையும் சிம்பிளாச் செய்யலாம்.

எனவே, உங்கள் மனதுக்குப் பயிற்சியளித்து, எதிர்காலத்தில் சிறந்த கொலைஞர்களாத் திகழ்ந்து உலக சாதனைகள் பலதைச் செய்து குவிக்க வாழ்த்தி விடைபெறுகிறேன், உங்கள் கொலை ரசிகன் கா. பூ. கந்தசாமி.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

22.12.2002 தொடங்கி 28.12.2002வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

தனு - சூரியன், புதன். இடபம் - இராகு. மிதுனம் - சனி. கர்க்கடகம் - வியாழன், துலாம்-வெள்ளி, செவ்வாய். விருட்சிகம் - கேது. சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழிற்சிறப்பு, காரியானுகூலம், உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். உத்தியோகத்தர் கவலையடைவர். மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 9.

### மிதுனம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) காரியத் தடை, வீண் மனக் கலக்கம், வெளியிடப் பயணம் உண்டு. உத்தியோகத்தர் மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 4.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) உயர்ந்த நிலை, கௌரவம், உறவினர் உதவி, பணவரவு, மன மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தர் சிறப்பு, மாணவர் கல்வியில் உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

### துலாம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டம், அன்னியர் பகை, வீண் பிரயாசம், செலவு மிகுதி, பிரயாச மிகுதி உண்டு. உத்தியோக கஷ்டம், வீண் சிரமம், உத்தியோகத்தில் சிக்கல், மாணவர் கல்வியில் உயர்வு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 2.

### தனு
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) முயற்சி பலிதம், அன்னியர் உதவி, பணவரவு, பெரியோர் நட்பு, குடும்பச் சிறப்பு, உத்தியோகத்தில் வீண் கஷ்டம், மாணவர் கல்வியில் மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 6.

### கும்பம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் சிரமம், வீண் செலவு, குடும்பக் கஷ்டம், வைத்தியச் செலவு உண்டு. உத்தியோகத்தில் திடீர் மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

### இடபம்
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மன மகிழ்ச்சி, இலாபச் சிறப்பு, பெரியோர் உதவி, பிரயாண மிகுதியுண்டு. உத்தியோகத்தர் பதவி மாற்றம். மாணவர்கள் கல்வியில் மந்தநிலை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல: 7.

### கர்க்கடகம்
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) உறவினர் பகை, பணவிரயம், தூர இடப் பயணம், செலவு மிகுதியுண்டு. உத்தியோகத்தில் பதவி மாற்றம், மாணவர் கல்வியில் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.


### கன்னி
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) காரியானுகூலம், பிள்ளைகளால் மகிழ்ச்சி, குடும்ப நன்மை, உயர்ந்த எண்ணம். உத்தியோகம் பதவி மாற்றம். மாணவர் கல்வி மந்தம். வீண் அலைச்சல், விவசாயிகள், வியாபாரிகள் முதலீடு பலிதம் உண்டு.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

### விருட்சிகம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) உயர்ந்த எண்ணம், காரிய சித்தி, குடும்ப நன்மை, செலவு மிகுதி, கடன்படல் உண்டு. உத்தியோகத்தர் மனக் கலக்கம். மாணவர் கல்வியில் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.

### மகரம்
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி, இனசன விரோதம், காரியத் தடை ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

### மீனம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) இனசன நன்மை, தொழில் பலிதம், பணச் செலவு, தேகாரோக்கிய குறைவு, கடின உழைப்பு, உத்தியோகம் சிறக்கும். மாணவர் கல்வியில் குழப்பம். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.








## வைரப் பேனா

▶ இந்தப் பேனாவின் பெறுமதி என்ன தெரியுமா? நம் நாட்டு மதிப்பில் ஆக ஆறு கோடி ரூபாய் மட்டும்தான். சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற வைரக் கற்களின் கண்காட்சி ஒன்றின் போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இந்த அதிசயப் பேனா அனைவரையும் கவர்ந்தது.

முற்றிலும் பெறுமதி வாய்ந்த வைரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும் இந்தப் பேனாவின் உட்பாகம் 48 கரட் வைரத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இதே கரட் அளவைக் கொண்ட ஆயிரக்கணக்கான வைரக் கற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சுவிஸ் தங்க ஆபரண நிறுவனம் ஒன்று இந்தப் பேனாவைத் தயாரித்திருக்கிறது.

## பணப் படுக்கை

கட்டில் போல் பரப்பப்பட்ட பணப் படுக்கை மீது வசதியாகத் தூங்குகிறார் இந்த ஆப்கானிஸ்தான் பிரஜை. இத்தனை பணத்திற்கும் இவர் சொந்தக் காரர் என்றா நினைக்கிறீர்கள்? ▼



▶ ஆப்கானில் முன்னைய ஆட்சிக் காலங்களின் போது பயன்படுத்தப்பட்ட நாணய நோட்டுக்கள் செல்லுபடியற்றவை என அறிவிக்கப்பட்டுப் புதிய கரன்சி நோட்டுக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதனை அடுத்து தாங்கள் வைத்திருந்த பணம் மொத்தத்தையும் வங்கிகளில் கொடுத்துவிட்டுப் புதிய நோட்டுக்களை மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

கோடிக் கணக்கான டொலர் பெறுதியான பண நோட்டுக்கள் ஆப்கான் வங்கிகளில் தினசரி எரிக்கப் படுகின்றன. இவ்வாறு எரிப்பதற்காக வைக்கப் பட்டிருக்கும் பணக்குவியல் ஒன்றைக் காவல் காக்கும் வங்கி ஊழியர்தான் இவர்.

## புலியல்ல போலி

▲ கோபமாகப் பார்க்கும் இந்தப் புலிகளிடம் சிக்கினால் கடித்துக் குதறிவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. ஏனென்றால் இவை புலிகளே அல்ல, போலிகள்.

மிருதுவான பொருள்களை உள்ளே வைத்து, அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்டிருக்கும் இவை சாதாரண பார்வையில் நிஜப் புலிகள் போலவே காட்சி தருகின்றன. இவற்றின் மேலாகப் போர்த்தப்பட்டிருப்பது உண்மையான புலித்தோல்தான்.

அமெரிக்காவின் ஸ்பிரிங் பீல்ட்டில் அந்நாட்டு வனவிலங்கு காத்தல் தடுப்புப் பிரிவினர் நடத்திய சோதனை ஒன்றின் போது இந்தப் போலிப் புலிகள் சிக்கின.

இவற்றை உற்பத்தி செய்வதற்கு உண்மையான புலித்தோல் எவ்வாறு கிடைத்தது என்று தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த உயிரற்ற புலிகள் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டு வேறு நாடொன்றிற்கு அனுப்பத் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். உள்ளே இருப்பது மிருதுவான பொருள்கள் என்பதால் இந்தப் புலிகளை இலகுவாகத் தூக்கிச் செல்ல முடியும்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி தட்ஷனா

21.12.2002

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கவிந்தன்-மோகனராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி தட்ஷனா தனது முதலாவது பிறந்த நாளை 21.12.2002 அன்று நெதர்லாந்தில் உள்ள Ali Baba Schalk Burgerstraat 398-2572 TJ Den Haag மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

தட்ஷனாவை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் யாழ் அப்பப்பா, அப்பம்மா, விஜே பெரியப்பா, விஜி பெரியப்பா, அமெரிக்காவில் உள்ள குமுதன் சித்தப்பா, ரூபன் சித்தப்பா, ஸ்கந்தராசா அம்மப்பா, அம்மம்மா, ஜேர்மனி சின்ன அப்பப்பா, அப்பம்மா, லக்ஷிகா அத்தை, திலக்ஷன் சித்தப்பா, ஜேர்மனியில் வசிக்கும் மன்மதன் மாமா குடும்பம், சங்கர் மாமா குடும்பம், உதயன் மாமா குடும்பம், மகேஸ்வரன் மாமா குடும்பம், கிளிநொச்சி யோகேஸ்வரன் பெரியப்பா குடும்பம், லண்டனில் வசிக்கும் மதியழகன் பெரியப்பா குடும்பம், சுவிஸ் சந்திரகுமார் மாமா, கவிதா அத்தை, ஆகாஷ் மச்சான் மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வீரபத்திரர் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்: அப்பப்பா பரமேஸ்வரன்-யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 20.12.2002



செல்வி ஞானராஜன் ஞானப்பிரிதா (பிரிதா)

வவுனியா முதலியார் குளத்தைச் சேர்ந்த ஞானராஜன்-பியாமளா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஞானப்பிரிதா தனது முதலாவது பிறந்த தினத்தை 20.12.2002 இல் பிரான்ஸில் உள்ள Marn Dormoy என்னும் விழா மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா (பிரான்ஸ்), தீபன் மாமா, சுசி பெரியம்மா, ஜெகன் மாமா (பிரான்ஸ்), அப்பம்மா, சாந்தா அத்தை (இலங்கை), சுரேஸ் பெரியப்பா, யூலியற் பெரியம்மா, தீபாக்கா, தீபன் அண்ணா (இலங்கை), கௌரி மாமா, மனோகரி அத்தை, மைக்கல் மச்சான், மிசா மச்சாள் (லண்டன்), சித்தப்பா (லண்டன்), சின்ன அப்பப்பா (சுவிஸ்), சின்ன அப்பம்மா இந்திராணி (கொழும்பு), யூட் சித்தப்பா (ஜேர்மன்), யசோ அத்தை, அனித்தா அத்தை (கொழும்பு), சின்ன அம்மப்பா, சின்ன அம்மம்மா (சுவிஸ்), சுபா அன்ரி, சுவர்ணா அன்ரி, சுஜி அன்ரி (சுவிஸ்) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுச் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ புனித அந்தோனியாரை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு. திருமதி. ஞானராஜன்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



ஜெ. கீர்த்தனா 19. 12. 2002

முனைத்தீவைச் சேர்ந்த ஜெயக்குமார்-சசிகுமாரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி கீர்த்தனா தனது முதலாவது பிறந்த நாளை (19.12.2002) Bremen Germanyயிலுள்ள தனது இல்லத்தில் 22.12.2002 அன்று மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், U.Kயில் வசிக்கும் மாமா, யோராஜா தம்பதிகள், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுச் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: மாமா இ.தயாபரன்-
இல. 280/G, செட்டியார் தெரு, கொழும்பு-11.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.